பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 03 சனிக்கிழமை (17-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:52

## குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுக்கையில் வைத்துக் கழுத்து வெட்டிக் கொலை!

### மட்டுவில் கனகன்புளியடிப் பகுதியில் பயங்கரம்!

யாழ்ப்பாணம்,ஜன.17

மட்டுவில் கனகனபுளியடிச் சந்திப் பகுதியில் எட்டு மாதக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வெடிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை, அவர்களின் வீட்டில் இருந்து மூன்று சடலங்களும் மீட்கப்பட்டன.

புங்குடுதீவைச் சொந்த இடமாகக் கொண்ட இலங்கநாதன் சுதாகரன் (வயது-38), அவரது மனைவியான புத்தூரைச் சொந்த இடமாகக் கொண்ட சு.சுவர்ணவதி (வயது-27), அவர்களது குழந்தையான சு.வைஷ்ணவன் ஆகியோரே கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

படுக்கையில் வைத்தே கழுத்து வெட்டப்பட்டு மூவரும் கொலைசெய்யப்பட்டிருக்கின்றனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்கள் கடந்த புதன்கிழமை இரவு கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

பொங்கல் தினமான வியாழக்கிழமை புத்தூர் கிழக்கிலுள்ள தனது சகோதரனின் வீட்டுக்கு வருவதாக சுவர்ணவதி தெரிவித்திருந்தார் என்றும் -

ஆனால், அன்றைய தினம் அவர்கள் அங்கு செல்லாததை அடுத்து சகோதரன் நேற்றுக் காலை அவர்களது வீட்டுக்குச் சென்று பார்த்தார் என்றும் -

வீட்டுப் படுக்கையறையில் மூவரது சடலங்களும் இரத்தம் தோய்ந்த நிலையில் பாயில் கிடந்ததை அவர் கண்டுள்ளார் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக சாவகச்சேரிப் பொலீஸாருக்கு சகோதரன் தகவல் தெரிவித்துள்ளார்.

பொலீஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்று மாலை சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டதுடன், சடலங்களை யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லுமாறும் உத்தரவிட்டார்.

நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சுதாகரன் கடந்த 4 மாதங்களுக்கு முன்னரே கனகம்புளியடிப் பகுதியில் குடியமர்ந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. கொலை நடந்த அவர்களது வீட்டுக்கு முன்பாக இராணுவக்காவலரண் ஒன்று இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சடலங்கள் நேற்றிரவு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. (ம-9-49-117)

### தேர்தலுக்காக அமைச்சர் தயாரத்ன கல்முனையில் ஊடுருவல்

# அரசு-முஸ்லீம் காங்கிரஸ் உறவு முறியும் நிலையில் ஊசலாட்டம்!

### அஷ்ரப் வைத்தியசாலை நியமனங்களால் முஸ்லிம்கள் கொதிப்பு ஹக்கீமுடன் ஹரீஸ் பிரதமரிடம் சென்று முறையிட்டும் பயனில்லை!

**அரசுக்கும் முஸ்லீம் காங்கிரஸுக்கும் இடையிலான உறவு முறியும் நிலையில் இப்போது ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இதற்குப் பிரதமர் ரணிலும் ஒரு வகையில் பொறுப்பாக இருக்கிறார்.**

**திகாமடுல்ல மாவட்ட எம்.பியும், சுகாதார அமைச்சருமான பி.தயாரத்ன பொதுத்தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸை முறியடித்து அரசுக்கு அதிக ஆதாயம் தேடுவதற்காக மாவட்டத்தின் முக்கிய நகரான கல்முனைக்குள் ஊடுருவி "அரசியல் விளையாட்டில்" இறங்கிவிட்டார்.**

**அதற்கு கல்முனை அபிவிருத்தி தொடர்பாக தம்முடைய கட்சி நியமன எம்.பி. மயோன் முஸ்தபாவுக்கும், முஸ்லீம் காங்கிரஸ் எம்.பியான எச்.எம்.எம். ஹரீஸுக்குமிடையிலான அதிகாரப் போட்டாபோட்டியை நன்றாகப் பயன்படுத்தி வருகிறார். இதைப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவந்தும்கூட அவர், நடப்பது நடக்கட்டும் என்று விட்டுவிட்டுப் பேசாமல் இருக்கிறார் என்று பெரும்பாலான முஸ்லிம்கள் குறைபட்டுக் கொள்கின்றார்கள்.**

ஹரீஸ் எம்.பியின் சொந்த ஊரில் அமைந்துள்ள அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபைக்குச் சமீபத்தில் புதிய உறுப்பினர்கள் 30 பேரை அமைச்சர் தயாரத்ன நியமித்தார். அவர்களில் முஸ்லீம் காங்கிரஸ்காரர் ஒருவர்கூட இல்லை. மயோன் முஸ்தபாவின் சிபாரிசின் பேரில் 23 பேரும், நுஆ தலைவியும் எம்.பியுமான பேரியல் அஷ்ரப்பின் சிபாரிசின் பேரில் ஏழு பேரும் நியமிக்கப்பட்டார்கள். இது முஸ்லிம்களிடையே, குறிப்பாக முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### நாட்டில் புதுயுகம் வரும் என்கிறார் அமுனுகம

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி. ஒப்பந்தம் கைச்சாத்தானதும் நாட்டில புதுயுகம் பிறக்குமென பொ.ஐ.முன்னணி ஊடகப்பேச்சாளர் சரத் அமுனுகம நேற்று தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதைத் தெரிவித்த அவர் தொடர்ந்து கூறியதாவது:-

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பு, ஐக்கியதேசிய முன்னணி அரசைக் கவிழ்த்து விட்டு நாட்டை

(16ஆம் பக்கம் பார்க்க)

## 12 ஆண்டுகள் பதவி வகிப்பதற்காகவே ஜனாதிபதி 2 தடவைகள் பதவியேற்றார்

### ஜனாதிபதி செயலகம் விளக்கம்

கொழும்பு,ஜன.17

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இருதடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டமை 12 வருடங்களுக்கு ஜனாதிபதியாகப் பதவிவகிப்பதற்கே ஆகும். அந்தச் செயல் அரசமைப்புக்கு முரணானது என்றால் அது பற்றி உயர் நீதிமன்றமே தீர்ப்புக்கூற முடியும்.

- இப்படி ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்தார். அவரது பதவிக்காலம் முடிய முன்னர் இரண்டாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அதிலும சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாகத் தேர்தல் முடிவுகள் வெளியான உடனேயே அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

எனினும், ஜனாதிபதிக்குரிய முதலாவது பதவிக்கால எல்லை முடிவடைந்த பின்னரே இரண்டாவது பதவிக் காலத்திற்குரிய பொறுப்பை ஏற்பதற்கு அவர் பதவிப் பிரமாணம் செய்ய வேண்டும் என்று சட்ட நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதன்படி, ஜனாதிபதி இரண்டாவது தடவையாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டமை சட்ட ரீதியானதே என்று சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பதவிப் பிரமாணம் அரசமைப்புக்கு விரோதமானதாக இருந்தால் அது குறித்த தீர்ப்பை உயர் நீதிமன்றால் மாத்திரமே வழங்க முடியும்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகள் நினைவு தினம் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.17

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட வங்கக் கடலில் காவியமான 10 வேங்கைகளின் 11 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்று யாழ்.குடா நாடெங்கும் எழுச்சி பூர்வமாக நடைபெற்றன.

பிரதான நிகழ்வு நேற்று மாலை 5.30 மணிக்கு வல்வெட்டித்துறை, தீருவிலில் கேணல் கிட்டு மற்றும் வேங்கைகளின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை மருதடிச் சந்தியிலிருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் நினைவிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மாவீரர்களின் உருவப்படங்களும் ஊர்வலத்தில் எடுத்துவரப்பட்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவுக்கு புதிய தலைவர் நியமனம்

கொழும்பு,ஜன.17

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகக் கடமையாற்றி வந்த ட்ரிக்வே ரெலிவ்ஸன் கடந்த வருடம் ஒக்ரோபரில் நாட்டை விட்டுச் சென்றதை அடுத்து, புதிய தலைவராக டொன் புருகோவ்டே பொறுப்பு ஏற்கிறார். இவரே கண்காணிப்புக் குழுவின் முதலாவது தலைவராகப் பணியாற்றியவர்.

ரெலிவ்ஸன் கண்காணிப்புக் குழுத் தலைவர் பதவி வகித்துக் கொண்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு-கிழக்கு அபிவிருத்தி குறித்து

## அகாஷி-தமிழ்ச்செல்வன் திங்களன்று கிளிநொச்சியில் விசேட சந்திப்பு

ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி நாளைமறுதினம் திங்கட்கிழமை இலங்கைக்கு மீண்டும் விஜயம் செய்கிறார். அவர் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார். இலங்கைக்கு மேற்கொள்ளும் ஆறாவது விஜயம் இதுவாகும்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் மேற்கொண்டிருக்கும் பங்களிப்புப் பணியைத் தொடரவே அவர் இவ்விஜயத்தை மேற்கொள்கிறார். நாளை மறுதினம் அவர் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 7 வருடங்களாகத் தேடியும் கிடைக்காதோரை ஓரிரு நாளில் என்னால் கண்டுபிடிக்க முடியாது

### காணாமற்போனோர் பற்றி இராணுவத்தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.17

ஏழுவருடங்களாகத் தேடியும் கண்டுபிடிக்க முடியாதவர்களை என்னால் ஓரிரு நாள்களில் கண்டுபிடிக்க முடியாது.

- இவ்வாறு யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில சந்திரபால தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணிப் பிரதிநிதிகளுக்கும் கட்டளைத் தளபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள படையினரின் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் இடம்பெற்றது. கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளரிடம் கருத்துக்கூறிய, வடபகுதியில் படையினரால கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கச்செயலாளர் எஸ்.சற்குணம் தளபதியுடனான சந்திப்புப் பற

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பட்டிப் பொங்கல் தினமான நேற்று நகரில் பசுக்களின் தெய்வீகப் பவனி

யாழ்ப்பாணம்,ஜன.17

பசுக்களைப் போற்றிப் பூசிக்கும் பட்டிப் பொங்கல் திருநாளான நேற்று யாழ். நகரில் பசுக்களின் தெய்வீகப் பவனியும் பட்டிப் பொங்கல் விழாவும இடம்பெற்றன.

பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சமய நிறுவனங்களின் இணையமும், யாழ். சந்திரத்து ஞான வைரவர் ஆலயமும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

அகில இலங்கை திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

அலங்கரிக்கப்பட்ட சுமார் 25 பசுக்கள் பிற்பகல் 3 மணியளவில் சத்திரம் ஞானவைரவர் ஆலயத்திலிருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்டன.

காங்கேசன்துறை வீதி, பெரியகடை வீதி ஊடாக யாழ். பஸ்நிலையப் பகுதியை அடைந்த இந்த ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி ஊடாக மீண்டும் ஆலயத்தைச் சென்றடைந்தது. ஊர்வலத்தில் வந்த பசுக்களுக்கு வர்த்தகப் பெருமக்கள், பொதுமக்கள் அறுகம்புல் அளித்து வணக்கம் செலுத்தினர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து ஆலயத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்துக்குருமார் ஒன்றியம், சைவக் குருமார் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள், சைவப் பெரியார்கள், கல்விமான்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

தீவுப் பகுதியில் பசுவதைத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதில் முனனின்று உழைத்தமைக்காக சிவா நறுமணப் பூங்கா உரிமையாளர் துரைச்சாமி குருநாதசிவம் மற்றும் வைத்திய கலாநிதி ஆ.பேரின்பநாதன் ஆகியோா நிகழ்வில் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டனர். சிறப்புரைகளும இடம்பெற்றன.

பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணையத்தின் தலைவர் கு.கங்கைவேணியன் நன்றியுரை நிகழ்த்தினார்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட பசுக்களுக்கு மேற்படி ஆலய பரிபாலன சபையினரால் தலா ஒரு மூடை தவிடு தானமாக வழங்கப்பட்டது. (ம-4-15)

யாழ். வைத்தியசாலை ஆண் நோயாளர் விடுதி

# களஞ்சிய அறை தீப்பற்றியதில் பெறுமதியான பொருள்கள் நாசம்

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ். போதனா வைத்தியசாலை ஆண் நோயாளர் விடுதிக்களஞ்சிய அறை உட்பக்கம் நேற்றுமுன்தினம் தீப்பற்றியதில் சுமார் 2 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான வைத்திய உபகரணங்கள் மற்றும் பாவனை பொருள் எரிந்து நாசமாகின.

புத்தம் புதிய 'சக்கர்' இயந்திரம், உட்பட பலபொருள்கள் எரிந்துள்ளன.

பூட்டப்பட்டிருந்த இக்களஞ்சிய அறை இரவுவேளை திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. இந்த விபத்து குறித்து ஆஸ்பத்திரி வட்டாரம் அதிர்ச்சியடைந்துள்ளது.

மின்சார ஒழுக்கினால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சந்தேகிக்கப்படுகிறது என்று வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த விபத்துக்கு மின் ஒழுக்குக் காரணமில்லை எனவும் விஷமிகள் வேலையாக இது இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது எனவும மற்றொரு தகவல் தெரிவித்தது.

தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த களஞ்சிய அறையை வைத்தியசாலை ஊழியர்கள் சிலரே தண்ணீர் ஊற்றி அணைத்துள்ளனர். (ம-6)

# வடக்கு-கிழக்கின் பல இடங்களில் கிட்டு நினைவுதினம் அனுஷ்டிப்பு

## திரளான பொதுமக்கள் அஞ்சலி

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் 11ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று வடக்கு - கிழக்கில் நடைபெற்றன. கிழக்கில் திருகோணமலை, மூதூர் கிழக்கு உட்பட பல இடங்களில் இந்நிகழ்வுகள் நடந்தேறின. திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் மாவட்ட அலுவலகத்தில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் கும்புறுப்பிட்டி பிரதேச இராணுவப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். பொதுச்சுடரினை கிட்டுவின மாமியார் ஏற்றிவைக்க, ஈகச்சுடரினை மாவீரர் வன்னியத் தேவனின் தாயார் ஏற்றிவைத்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின திருகோணமலைக் கிளையின் செயலாளரான சே.சிறிஸ்காந்தராசா, மாவீரர் கிட்டு மற்றும் ஏனைய மாவீரர்களின் உருவப்படத்திற்கு ஈகச்சுடரினை ஏற்றி வைகக்க, முன்னாள் அதிபர் சாகுல் ஹமிது மலர் மாலை சூட்டினார்.

இங்கு விடுதலைப் போரில் உயிர் நீத்த மாவீரர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

மூதூர் கிழக்கு, கட்டைப்பறிச்சான கற்பக விநாயகர் ஆலய முன்றிலில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில நேற்றுக்காலை 10 மணிக்கு பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாகின. தமிழீழத் தேசியக் கொடியை புலிகளின் திருமலை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தேவன் ஏற்றி வைத்தார். பொது ஈகச்சுடரினை கட்டைப்பறிச்சான் வடக்கு கிராம உத்தியோகஸ்தர் சந்திரலிங்கம், மூதூர் மாவட்ட புலிகளின் பொருண்மியப் பொறுப்பாளர் பவன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

கேணல் கிட்டுவின் உருவப்படம் உட்பட வங்கக் கடலில் வீரச்சாவடைந்த 9 மாவீரர்களின் உருவப்படங்களுக்கும் கட்டைப்பறிச்சான் விபுலாநந்த கல்லூரி அதிபர் சுந்தரராஜா மலர் மாலை அணிவித்தார். பின்னர் பொது மக்கள் நீண்ட வரிசையில் நின்று மலர் மாலை அணிந்து அஞ்சலி செலுத்தினர்.

சேனையூர், சம்பூர், இலக்கந்தை, பாட்டாளிபுரம், பற்றிக்குடியிருப்பு, தமபலகாமம் ஆகிய பிரதேசங்களிலும் கேணல் கிட்டுவின் நினைவுதின நிகழ்வுகள் நடைபெற்றன.

# சட்ட விரோதமான மதமாற்றத்தை கண்டிக்கிறது சுவிசேஷ ஒன்றியம்

## ஐந்து கிறிஸ்தவ சபைகள் ஒன்றிணைந்து அறிக்கை

கொழும்பு,ஜன.17

சட்டவிரோதமாகவும், ஒழுக்கத்துக்கு முரணான வகையிலும் மேற்கொள்ளப்படும் மதமாற்றத்தை இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிஷேச ஒன்றியம் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய கிறிஸ்தவ சுவிஷேச ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் கல்வாரி ஆலயம், ஒல்லாந்து சீர்திருத்தசபை, மக்கள் தேவசபை, இரட்சணிய சேனை ஆகியன ஒன்றிணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.

மேற்படி ஒன்றியத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

பணம், பொருள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படும் மதமாற்றங்களை எமது அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறான செயல்களில் எமது ஒன்றியத்தில் உள்ள எந்த ஒரு சபையும் ஈடுபடுவதும் இல்லை.

ஒவ்வொரு மதமும் உயரிய மதிப்புக்குரியன. பௌத்தம், இந்து மற்றும் முஸ்லிம் மதங்களுடன் ஒன்றிணைந்து செயல்படுவதில் எமது அமைப்பு அர்ப பணிப்புடன் செயற்படும்.

அத்துடன், அண்மைக் காலமாக நாட்டில் நிலவிவரும் பதற்ற நிலைமை குறித்தும் எமது அமைப்பு கவலை கொண்டுள்ளது.

கிறிஸ்தவ ஊழியர்களுக்கு எதிராகவும், ஆராதனை மையங்கள் மீதும் மேற்கொள்ளப்படும் வன்முறை குறித்தும் எமது ஒன்றியம் கவலை அடைகிறது. ஒருசில கோஷ்டியினராலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து நாம் கவனம்செலுத்தி வருகிறோம்.

குறிப்பாக கிறிஸ்தவ சமுதாயத்துக்கு எதிராக ஊடாகங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலமாகவும் பிரசாரங்கள் செய்யப்பட்டு வருகின்றன - இப்படி அந்த அறிக்கையில் உள்ளது. (எ-9-7)

## முன்னாள் பிரதி மேயர் காலமானார்



யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்.மாநகர சபையின் முன்னாள பிரதி மேயர் பி.எவ்.சேவியர் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் யாழ். போதனா வைத்திய சாலையில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 76.

1928 ஆம் ஆண்டு பிறந்த இவர் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும் இலங்கை காங்கிரஸின் அங்கத்தவருமாவார்.

1979 ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை யாழ்.மாநகர சபையின பிரதி மேயராக இவர் பதவி வகித்தார்.

இவரது பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக யாழ்ப்பாணம், 5ஆம் குறுக் தெருவில் உள்ள அவரது இல்லத்தில வைக்கப்பட்டுள்ளது. (ம-3-8)

# மட்டக்களப்பு பொங்கு தமிழ் நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்க பொலீஸ் உறுதி

## அத்தியட்சகரைச் சந்தித்து ஏற்பாட்டாளர்கள் விளக்கினர்

மட்டக்களப்பில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுமென மட்டக்களப்பு மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பாக நேற்றுமுன்தினம் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றிலேயே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இக்கூட்டத்தில் பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ம.சே.மூக்கையா, மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர் ராஜன் சதயமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் ரஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். நீதியுடன் கூடிய நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று இந்தக் கூட்டத்தில் பொலீஸ் அத்தியட்சகருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெறும் மைதானத்துக்கு தேவையாயின் பாதுகாப்பு வழங்குவதற்கும், பிரசாரப் பணிகளில் ஈடுபடுவோருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் பொலீஸ் அத்தியட்சகர் சம்மதம் தெரிவித்தார் எனக் கூட்டத்தின் முடிவில் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழுவின் பிரதிநிதிகள தெரிவித்தனர்.

# சிறுமி மீதான வல்லுறவுச் சம்பவம்; அடையாள அணிவகுப்பு 28ஆம் திகதி

யாழ்ப்பாணம்,ஜன.17

கடந்த வாரம், யாழ். நகரப் பகுதியில் வைத்து சிறுமி ஒருத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் என்று கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இனங்காண்பதற்கான அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 28ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரவு முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய 2ஆவது சந்தேக நபர், நேற்று வெள்ளிக கிழமை மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. முதலாவது சந்தேக நபர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.(ம-9-5)

## வகுப்பறைத் தொகுதி திறப்பு

தென்மராட்சி,ஜன,17

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் பி.எஸ்.டி.ஜி. வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜினால் திறந்து வைக்கப்படவுள்ளது. கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் இதனைத் தெரிவித்தார். (ம-117)

## பட்டாசு விபரீதம்

தென்மராட்சி,ஜன,17

வெடிக்காத பட்டாசுகளின் வெடி மருந்தினை குழாயில் போட்டு தீவைத்த ஒன்பது வயதுச் சிறுவன் எரிகாயங்களுக்கு இலக்கான சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு அருகில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த காசி சிவகுமார் (வயது-9) என்னும் சிறுவன் முகத்தில் எரிகாயங்களுக்கு இலககான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபட்டுள்ளான். (ம-117)

# பாடசாலையைத் திறக்குமாறு கோரி கல்வி அலுவலகம் முன் மக்கள் மறியல்

## அலுவலரை உள்ளே வைத்துப் பூட்டினர்

தென்மராட்சி,ஜன.17

2000ஆம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள போக்கட்டி அ.த.க.பாடசாலையை மீண்டும் திறக்கக்கோரி அப்பகுதி மக்கள் நேற்றுக்காலை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பகுதியிலிருந்த இடம்பெயர்ந்த பெருமளவு குடும்பங்கள் தற்போது தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளன. இப்பகுதி மாணவர்களின் நலன்கருதி பாடசாலை ஆரம்பப் பிரிவினை இவ்வருடம் ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். நேற்றுமுன்தினம் இப்பாடசாலையை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்க வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதியளித்திருந்தார் என்றும் -

எனினும் பாடசாலையை ஆரம்பித்து வைக்காததால் மக்கள் வலயக் கல்வி அலுவலக அலுவலர்கள் அனைவரையும் உள்ளே வைத்து வெளிக்கதவினை மூடி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட வேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அங்கு வருகைதந்து கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரதி கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலைகளில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள விழாவில் கலந்து கொள்ளச் சென்றிருந்தால் இந்த விடயத்தில் தீர்வு எட்டப்படவில்லை.

வலயக் கல்விப் பணிப்பாளர் வந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜ், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோா அவருடன் மக்கள் சார்பாகக் கலந்துரையாடினர். எதிர்வரும் 21ஆம் திகதி பாடசாலையை அரம்பித்து தரம் ஒன்று வகுப்பினை நடத்துவதற்கும் அடுத்துவரும் தவணைகளில் ஏனைய வகுப்புகளை ஆரம்பிப்பதற்கும் பணிப்பாளர் இணங்கினார்.

இதனையடுத்து பகல் 12.30 மணிக்கு மக்கள் தமது போராட்டத்தினை முடித்துத் திரும்பினர்.

இடம்பெயர்வுக்கு முன்னர் இப பாடசாலையில் தரம் 7 வரை வகுப்புகள் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-117)

நாட்டின் அரசியல் நெருக்கடி காரணமாக

# 2,500 கோடி ரூபா முதலீட்டுத் திட்டங்களை ஆரம்பிக்காதிருக்க முதலீட்டாளர்கள் முடிவு

## 20 ஆயிரம் வேலைவாய்ப்புக்கள் கைநழுவின என்கிறார் பிரதமர்

முதலீட்டுத்துறையில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த 2 ஆயிரத்து 500 கோடி ரூபா முதலீட்டுத்திட்டங்களை நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக ஆரம்பிக்காதிருக்க முதலீட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர், இதனால் சுமார் 20 ஆயிரம் வேலைவாய்ப்புக்கள் கைநழுவிப்போயிருக்கின்றன. அரசியல் நெருக்கடியால் பங்குச்சந்தைக்கு 8 ஆயிரம் கோடி ரூபா கிடைக்காமல் போய்விட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார். மாத்தளை மாவட்டத்திலுள்ள நாவுல, லக்கல ஆகிய இடங்களில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் பிரதமர் உரையாற்றினார்.

தனது உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட பிரதமர், மேலும் கூறுகையில், "அரசாங்க எம்.பிக்கள் 18 பேரை இழுத்தெடுத்து, அரசு அமைப்பதற்காக மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடி பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல, சர்வதேச நாணயச் சபையினால் இணங்கப்பட்ட 2 ஆயிரம் கோடி ரூபா கிடைக்காமல் போகும் நிச்சயமற்றநிலை ஏற்பட்டுள்ளது, அதைப்பெற்றுக்கொள்ள அரசு இப்பொழுது பேச்சு நடத்தி வருகிறது.

சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்நாட்டின் அப்பாவி மக்களுக்கே ஜனாதிபதியின் இந்நடவடிக்கையினால் பலத்த அடி விழுந்துள்ளது" என்றார்.

# சதாம் கைது தொடர்பான புதிய புகைப்படங்கள்

பக்தாத், ஜன.17

ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாமின் கைதுதொடர்பாக வெளியாகியுள்ள பல புதிய புகைப்படங்கள் தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

அவரது வாயிலிருந்து இரத்தம் வடியும் தோற்றத்துடன் வெளியிடப்பட்டுள்ள படம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சதாமை மயக்க நிலையிலேயே அமெரிக்கப் படையனர் பிடித்தனர் என்பதை தற்போது வெளியாகியுள்ள படங்கள் காட்டுகின்றன.

இப்படங்கள் பென்ரகன் மூலம் வெளியிடப்படவில்லை என்று ஈராக்கியப் பத்திரிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சதாமைக் கைதுசெய்த படையினரே தமது புகைப்படக் கருவிகள் மூலம் இப்படங்களை எடுத்திருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

படைவீரர் ஒருவர் இதுபற்றிக் கருத்து கூறுகையில்:-

"கைதுசெய்யப்பட்டபோது சதாம் ஆங்கிலத்தில் உரையாற்றினார். 'நான்தான் சதாம்', 'நான்தான் ஈராக்கிய ஜனாதிபதி' என்று தெரிவித்தார் - என்று கூறியுள்ளார்.

சதாம் கைதுசெய்யப்பட்டபோது அவரிடமிருந்த உடுபுடைவைகளும் இவ்வாறு படம்பிடிக்கப்பட்டுள்ளன. அந்தப் படங்கள் தற்போது வெளியாகியுள்ளன. மற்றொரு புகைப்படத்தில் பச்சைநிறப் பெட்டியில் அவர் வைத்திருந்தார் எனக் கூறப்படும் 7 லட்சத்து 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ்களும் படம்பிடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புகைப்படங்கள் வெளியிடப்படுவதை பென்ரகன் விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இந்தப் படங்கள் எவ்வாறு வெளியாகின என்பது குறித்து இதுவரை சரியான தகவல்கள் கிடைக்கவில்லை.

(ஒ)


மயங்கிய நிலையில்..


கட்டப்பட்ட கைகளுடன்....


தனது மாளிகையில் கைதியாக...


பணப்பெட்டி

## சீனாவில் வாயுக் கசிவு; 130 பேர் பாதிப்பு!

சீனாவில் ஏற்பட்ட வாயுக் கசிவில் 130 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கபபட்ட அனைவரும் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகிழக்குப் பகுதி நகர் ஒன்றில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

தொழிற்சாலை ஒன்றில் இருந்து வெளியேறிய அளவுக்கு அதிகமான குளோரின் வாயுவினாலேயே இச்சம்பவம் நடந்ததாக சீன அரசு நேற்று தெரிவித்திருக்கிறது.

மேற்படி தொழிற்சாலையை அண்மித்துள்ள பகுதிகளில் இந்த வாயு தொடர்ந்தும் பரவிவருவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இப்பகுதியில் உள்ளோரை வெளியேறும்படி சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டோரில் சுமார் நூறு பேர் வரை சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர். கடந்த மாதம் அங்கு வாயுக் கிணறு வெடித்துச் சிதறியதில் 243 பேர் உயிரிழந்தனர்.

## ஈராக்கில் ஆர்ப்பாட்டம் தொடர்கின்றது!

ஈராக்கிய இடைக்கால நிர்வாக சபையை வழிநடத்தும் அமெரிக்க அதிகாரி போல் பிரீமர் ஜனாதிபதி புஷ்ஷுடன் அவசர ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

நேற்று வாஷிங்ரனில் இவர்கள் சந்தித்து ஈராக்கின் தற்போதைய நிலைகுறித்து ஆராய்ந்தனர் என்று வெள்ளைமாளிகை தெரிவித்திருக்கிறது.

எதிர்வரும் ஜுன் மாதம் ஈராக்கியர்களிடமே ஆட்சியை ஒப்படைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்கான பணிகளை ஈராக்கிய இடைக்கால நிர்வாக சபை முன்னெடுத்து வருகின்றது. தற்போது தேர்தல் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், தேர்தல் நடத்தப்படவுள்ள முறை குறித்தும் சதாம் ஹுசைனுக்கு ஆதரவான ஷியா முஸ்லிம்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். தேர்தலில் ஷியா மக்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகின்றனர் என்று பத்தாயிரத்துக்கும் அதிகமான ஷியா முஸ்லிம்கள் பஸ்ரா நகரில் தொடர் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், போல் பிரீமரும் அமெரிக்க ஜனாதிபதியும், திடீர் சந்திப்பை நடத்தியுள்ளனர். எதிர்வரும் திங்கட்கிழமை ஐ.நா.செயலர் கோபி அனானையும் போல் பிரீமர் சந்திக்கவிருக்கிறார்.

இவர்களது சந்திப்பில் ஈராக்கில் தேர்தல் நடத்தும் முறையில் மாற்றங்கள் செய்து புதியமுறைகுறித்து அறிவிப்புகள் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, ஆர்ப்பாட்டம் நடத்திவரும் ஷியா முஸ்லிம்களுக்கும், அப்பகுதியில் நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ் படையினருக்கும் இடையே கலகம் மூளும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அங்குள்ள நிருபர் ஒருவருர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையே -

ஈராக்கிய பல்கலைக்கழக பஸ் ஒன்று நிலக்கண்ணி வெடியில் சிக்கியதில் மூன்று மாணவர்கள் பலியாகினர்; பலர் காயமடைந்தனர்.

சதாம் ஹுசைனின் சொந்த நகரான திக்ரித்தில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் நடந்தது

## ஜெயலலிதாவின் வழக்கில் தலையிடுவதில்லை: உயர்நீதிமன்றத்தில் கர்நாடக அரசு வாக்குறுதி

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு கர்நாடக மாநிலத்தில் நடைபெறும்போது அவருக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் வழக்கு விசாரணையில் எவ்வகையிலும் அரசு தலையிடாது என்றும் கர்நாடக அரசு இந்திய உயர்நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளது.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கை தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் அளித்த மனுவின்பேரில் சென்னையிலிருந்து கர்நாடகத்திற்கு மாற்றி அமைக்க உத்தரவிட்டது உயர்நீதிமன்றம். இதனை எதிர்த்து மனுத்தாக்கல் செய்த ஜெயலலிதா, கர்நாடகத்திற்கும் தமிழகத்திற்கும் காவிரி உட்பட பல பிரச்சினைகள் இருப்பதால் தனக்கு நீதி கிடைக்க வழி இல்லை என்றும் பாதுகாப்புக் குறைபாடுகள் நேரலாம் என்றும் ஆகவே, வழக்கை பாண்டிச்சேரிக்கு மாற்றவேண்டும் என்றும் கோரி இருந்தார்.

இதுகுறித்து கர்நாடக அரசு விளக்கம் அளிக்க உத்தரவிட்டிருந்தது உயர் நீதிமன்றம் இதுகுறித்து கர்நாடக அரசு ஓர் உறுதிமொழிப் பத்திரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்காக பெங்களூர் வரும் ஜெயலலிதாவிற்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும். மேலும் வழக்கு விசாரணையில் கர்நாடக அரசு தலையிட எந்த முகாந்திரமும் இல்லை. வழக்கு விசாரணை நியாயமாக நடைபெற கர்நாடக அரசு உத்தரவாதம் அளிக்கிறது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா வழக்கை பாண்டிச்சேரிக்கு மாற்றக் கோரும் காரணங்கள் நியாயமற்றவை.

நீதிமன்ற உத்தரவுப்படி விசாரணைக்கு வரும் ஜெயலலிதாவிற்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்ட எந்த முகாந்திரமும் இல்லை. கடந்தமுறை மைசூர் கோயிலுக்கு வழிபட வந்த ஜெயலலிதாவிற்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டதும், அப்போது எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கவை.

மேலும் வழக்கு ஆவணங்கள் தமிழில் இருப்பதால் விசாரணை விரைவாக நடக்கத் தடையேதும் ஏற்படாவண்ணம் அரசே சிறந்த மொழி பெயர்ப்பாளர்களை நியமித்துள்ளது. அவர்கள் விரைவாகவும் பொருத்தமாகவும் வழக்கை கன்னடத்தில் மொழி மாற்றம் செய்வார்கள். இதற்கு மேலும் வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்ற உயர்நீதிமன்றம் உத்தேசிக்குமானால் அதற்கு கர்நாடக அரசு மறுப்பேதும் தெரிவிக்காது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## கிறிஸ்தவ தேவாலயம் தகர்ப்பு; பாகிஸ்தானில் 12 பேர் காயம்!

பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் கிறிஸ்தவ தேவாலயத்தைக் குறிவைத்து தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 12பேர் படுகாயமடைந்தனர்; தேவாலயமும் தரைமட்டமானது.

'ஜெய்முஹமது' என்ற தீவிரவாத இயக்கம் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றிருக்கிறது.

பாகிஸ்தானில் அண்மைக்காலமாகத் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. கடந்த மாதம் மட்டும் ஜனாதிபதி முஷாரப்பைக் குறிவைத்து மூன்று தடவைகள் தாக்குதல்கள் நடந்தன.

இதனையடுத்து, தீவிரவாதிகளைத் தேடி அழிக்கும் பணியில் அந்நாட்டுப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், கராச்சி நகரில் இருந்ததேவாலய வளாகத்தில் தீவிரவாதிகள் துணிகரத் தாக்குதல் நடத்தியுள்ளனர். தேவாலய வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றில் இருந்த குண்டுகள், தேவாலயத்தில் பூஜை ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக வெடித்துச் சிதறின. இதனால் தேவாலயத்திற்கு வநதிருந்த 12 பேர் காயமடைந்தனர்.

கார்க்குண்டு வெடித்ததில் தேவாலயத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்தது. ஏனைய பகுதிகளில் தீப் பிடித்தது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த பத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்தன.

## பிற்போடப்பட்டுள்ளது

குப்பிளான் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் அறிவொளி சன சமூக நிலையத்தினரால் 15-01-2004 பொங்கல் தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு எதிர்வரும் (21.02.2004) சனிக்கிழமை நிலையத்தின் 20ஆவது ஆண்டு விழாவன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(27233)
(21-16-17)

– அறிவொளி சனசமூக நிலைய நிர்வாகத்தினர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

**கந்தையா இரவீந்திரன்**

(இணுவில் மேற்கு, இணுவில் )

எங்கள் பகுதி கிராம அலுவலர் திரு. கந்தையா ரவீந்திரன் அவர்கள் 19-12-2003 அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி இளங்கோவன் சறோஜினி அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அவரை மனமார வாழ்த்துவதோடு, அவரது சேவையும் சமூகப்பணியும் தொடரவேண்டுமென்று இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

இசைவேளாளர் சங்கம்,
விவசாய சம்மேளனம்,
கிராம அபிவிருத்திச் சங்கம்,
மாதர் சங்கம்,
சமுர்த்தி உத்தியோகத்தரும், குழுக்களும்.

(C/32806)
(21-16-17)

## துயரத்தில் பங்குகொள்கிறோம்



**பேரானந்தம் உமாசுதன்**
(போட்டோ சுதன்)



**சிறிபாலகணேசமூர்த்தி சுதாகர்**
(மேனன்)

13-03-1979 <= தாயின் மடியில் => 26-12-1974

கடலின் பிடியில் 15-01-2004

15-01-2004அன்று மூர்க்க கடலின் மூர்க்கமான சுழியினால் மாண்ட எம்மிதயத்து நண்பர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் எம்மினிய உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, எம்மினிய நண்பர்களின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கிருஷ்ணா தொ.தொ.நிலையம்.
புலோலி. சாரையடி.

- நண்பர்கள்.

## உளம் நெகிழ்ந்த உணர்வு அலையில் ஓராண்டு நிறைவு

அன்னை மடியில் 18 - 02 - 1933



ஆறுமுகன் அடியில் 27 - 01 - 2003

அமர பக்ஷ தசமி
திதி: 17–01–2004

**அமரர் திருமதி பரமேஸ்வரி சிவகுமார்**

**புதுக் கோவிலடி கொக்குவில்.**

என்னுயிரில் என்றுமே குடியிருக்கும்
இனிய அன்னையே!
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
இனி எப்போது உங்களை
''அம்மா'' என்று அழைப்போம்?
நீங்கள் பார்க்கத் துடித்த — அந்தப்...
பூத்த புது மலரின் வரவு அறியாது?
அன்றே மீளாத்துயில் கொண்டதென்ன?
என் கூடவே இருப்பேன் என்றுரைத்து
முருகனடி சென்றதும் ஏனோ?
என் தெய்வமே...!
எம்முயிர் உள்ளவரை உங்கள்
நினைவு எம்மை விட்டு அழியாது!

என்றும் உங்கள் நினைவுடன்
கணவர் : சிவகுமார்
மகள் : நீரஜா
மருமகன் : ரமணன்
பேர்த்தி : கிஷோந்தா

திரு.ந.சிவகுமார்.

11/1 பிறான்சிஸ் றோட், வெள்ளவத்தை, கொழும்பு–06.

### தென்னம் பிள்ளை விநியோகம்

தென்னை மானிய உதவித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் வைத்து அண்மையில் தென்னம் பிள்ளைகள் விநியோகிக்கப்பட்டன.

(எ-10-170)

### மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவி

மாதகல் பகுதியில் மீளக்குடியமர்ந்த மீனவக் குடும்பங்களுக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் சிமெந்து பைக்கற்றுக்களும், கூரை சீற்களும் அண்மையில் வழங்கப்பட்டன.

அங்குள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் ஊடாக இவை விநியோகிக்கப்பட்டன.

(எ-10-95)

### சனசமூக நிலையம் திறப்பு

சண்டிலிப்பாய்,ஜன.17

அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட இளவாலை முள்ளானை கலைவாணி சனசமூக நிலையம் கடந்த முதலாம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. முள்ளானை கிராம அலுவலர் ந.நாகராசா நாடாவெட்டி நிலையத்தைத் திறந்து வைத்தார்.

(எ-10-135)

### மின்சாரம் திருட்டு!

கோப்பாய்,ஜன.17

கோப்பாய் பிரதேசத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் சட்டவிரோத மின் சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக் கின்றனர்.

இதன் காரணமாக அங்கு அடிக்கடி மின்தடை ஏற்படுவதுடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(எ-10-72)

### திருடர்கள் தொல்லை

ஏழாலை,ஜன.17

ஏழாலை தெற்கு மயிலங்காட்டுப் பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் வீடுகளுக்குள் புகும் திருடர்கள் அங்குள்ள பொருள்களைத் திருடிச் செல்வதுடன், தோட்டங்களில் உள்ள வாழைக் குலைகள் மற்றும் மரக்கறிகள் என்பவற்றையும் திருடிச்சென்றுள்ளனர்.

(எ-10-45)

### பட்டப் பகலில் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.17

வீட்டு முன் விறாந்தையில் பூட்டிய நிலையில் நின்ற சைக்கிள் ஒன்று பட்டப்பகலில் திருட்டுப் போயுளளது.

சண்டிலிப்பாய் மடத்தடிப் பகுதியில் உள்ள பொ.கந்தையா என்பவரின் வீட்டில் கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(எ-10-7)

### பாடசாலை சொந்த இடத்தில்

கிளிநொச்சி,ஜன.17

முல்லைத்தீவு, ஒதியமலை அ.த.க. பாடசாலை நாளை மறுதினம் திங்கட்கிழமை தனது சொந்த இடத்தில் மீண்டும் இயங்கவுள்ளது.

இதுவரை காலமும் வள்ளிபுனத்தில் இப்பாடசாலை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-10-8)

### பதிவாளர் மீண்டும் கடமையில்

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திருமதி நா.தங்கராஜா ஒரு வருடத்தின் பின்னர் மீண்டும் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

கல்வி நிர்வாக விருத்திக்காக வழங்கப்படுகின்ற விடுமுறையை இவர் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திலும், கனடாவிலும் பயன்படுத்திய பின்னர் மீண்டும் கடமையைப் பொறுப்பேற்றார்.

(எ-10-85)

### புதிய நிர்வாகம்

குருநகர்,ஜன.17

நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெறறது. தலைவராக நீ.ம.பாலச்சந்திரனும், செயலாளராக அந்தோனிப்பிள்ளை அன்ரனிதாஸும் பொருளாளராக டா.சௌந்தரஜோதியும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-10-51)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 17 - 11 - 1948



மறைவு 18 - 12 - 2003

**அமரர் சின்னத்தம்பி உலகேஸ்வரன்**
(ஈசன்)

மனிதருள் மாணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்தீர்!
புனிதராய் வாழ்ந்திட்ட புண்ணிய சீலரே -அன்புத் தெய்வமே!
இனிய உமது முகத்தை எப்போது நாம் காண்போம்?
ஆத்ம சாந்திக்காய் மனோன்மணி அம்பாளை வேண்டுகின்றோம்.

இன்று (17-01-2004) சனிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அமரரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் வீதி,
கோண்டாவில்.

(27234)(32-21-13-17)

- குடும்பத்தினர்.


# External Degree

(Jaffna University & Peradeniya University)

GAQ | 1st in Com | BA | B Com

Minimum Requirement : G.C.E A/L 3 Passes

2004, 2005 க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்:18-01-2004

# C I M A

FOUNDATION LEVEL & Intermediate level

Medium : English

Exam: May & November

Minimum Requirement : G.C.E O/L (3C) Passes

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 18-01-2004

# aat (SriLanka)

Stage I & Stage II

Exam: June & December

Medium : Tamil & English

Minimum Requirement : G.C.E O/L 5 passes

Stage11 க்கான பிரிவுகள் ஆரம்பம் 18-01-2004

JAFFNA COLLEGE CEYLON

Futher Details
Director
Jaffna College Undergraduate Dept
464,Hospital Road,
(Near Commerical Bank)
Jaffna.

(C-32811)(16-17)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை திருச்செல்வம்

"திருப்பதி" சுதுமலை மேற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் No. 7, சால்ஸ் பிளேஸ், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை திருச்செல்வம் அவர்கள் 13-01-2004 செவ்வாய்க் கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - மங்கையர்க்கரசி தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற கொக்குவில் சின்னத்துரை - மனோன்மணி தம்பதிகளின் மருமகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் திருகரன், திருச்செல்வி (அபுதாபி), கலைச்செல்வி (U.K) ஆகியோரின பாசமிகு தந்தையும் ஜெயக்குமார் (அபுதாபி), சிறீபவன் (மோகன் - U.K) ஆகியோரின் அன்பு மிக்க மாமனாரும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் (கொக்குவில்), புவனேஸ்வரி (சரசாலை), குணரத்தினம் (கொழும்பு), மனோகரன் (கனடா), திருச்செல்வன் (கொக்குவில்) ஆகியோரின் மைத்துனரும் ராஜீ, கவிஷா, அபிலாஷா, அக்சனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18-01-2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக மதியம் 12:00மணிக்கு பொரளை கனத்தை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Telephone:2737127

தகவல்.
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/32813)(16-17)

உதயன்

## ஒப்பந்த மிரட்டல்!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றுக்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தமா அல்லது பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமா என்பது இன்னும் தெளிவாகவில்லை. எனினும், ஒப்பந்தம் குறித்துப் பேச்சு நடத்துவதற்காக இலங்கை ஜனாதிபதியின் சார்பில் விசேட உயர்மட்டக்குழு ஒன்று ஏற்கனவே இந்தியாவுக்குப் புறப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

"இந்த ஒப்பந்தப் பேச்சு மூலம் இலங்கை அரசு எமக்கு இன்னொரு பூச்சாண்டி காட்டுகின்றது. ஈழத் தமிழரின் நியாயமான உரிமைகளை மறுத்து அவர்களை அடக்கியாள முற்பட்ட இலங்கை அரசு, தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தில் தோற்றுப்போய் நிற்கிறது. இதனால், தமிழ்மக்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அது தள்ளப்பட்டுள்ளது. இதில் இருந்து தப்புவதற்காக சர்வதேச சமூகத்துடன் ஒப்பந்தம் என்றும், சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னல என்றும் கூறி சர்வதேச சமூகத்தை எமது பிரச்சினையில் வலிந்து இழுக்க முயல்கின்றது. இந்தப் போக்கினால் உருவாகும் சிக்கல் நாட்டில் சமாதானம் எட்டப்படுவதை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுமே தவிர சுமுகமான - அமைதியான - இயல்பான - நிலைமை இங்கு ஏற்படுவதற்கு வழி செய்யாது." - என்று அவர் இலங்கைத் தரப்புக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சிங்கள மக்களின் முழு ஆணையுடன், நாடாளுமன்ற மற்றும் நிறைவேற்று அதிகாரங்களைப் பெற்ற ஓர் அரசு தென்னிலங்கையில் ஆட்சிக்கு வரும்வரை யுத்தநிறுத்தத்தைப் பேணிக் காத்திருப்பதற்குப் புலிகள தயார் என்று புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் தெரிவித்திருக்கின்றார்.

இந்தப் பொறுமை பேண்லும் காத்திருப்பும் சமாதான முயற்சிகளுக்கு சாதகமான சூழ்நிலை ஏற்படுவதற்காகவேயன்றி, இலங்கை அரசு யுத்தமுனைப்புப் போக்கையோ அல்லது இராணுவ மேலாதிக்கப் போக்கையோ விருத்தி செய்வதற்கான கால அவகாசத்தை வழங்குவதற்காகவல்ல.

புலிகள் அமைதிபேணும் - பொறுமை காக்கும் - இந்தச சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சர்வதேச சமூகத்தை - குறிப்பாக இந்தியாவை - இந்த உள் விடயங்களில் இழுத்துவிட்டு, தன்கையை - வலிமையை - பலப்படுத்திக்கொள்ளலாம். அதை வைத்து புலிகளை அடக்கலாம் என்றெல்லாம இலங்கைததரப்பு நினைக்குமானால் அது பகல்கனவாகவே முடியும்.

"தமிழரின் தாயகம் தமிழர்களுக்குச் சொந்தமானது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழர்கள் வாழ்ந்துவரும பூர்வீகப்பிரதேசம் வடக்கும் கிழக்கும். இந்த மண் தொடர்பில் தமிழர் தரப்பின் - இந்த மண்ணின் மைந்தர்களின் - அங்கீகாரமோ, இணக்கப்பாடோ இல்லாமல் செய்யப்படும் எந்த ஒப்பந்தமும் செல்லுபடியற்றது என்றுதான் நாங்கள் கருதுகிறோம்." - என்கிறார் தமிழ்ச்செல்வன்.

இந்த மண்ணுக்கு உரித்தானவர்களுடன் இணக்கம் காணாமல் செய்யப்படும் எந்த ஒப்பந்தமும் செல்லுபடியானதன்று என்பதையே தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தமிழர் தாயகத்தின் முதல் நகராக விளங்கும் திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களை தமிழரின் இணக்கமோ, சம்மதமோ இன்றி இலங்கைப் பேரினவாத அரசு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் இந்தியாவுக்குத் தாரை வார்த்துக்கொடுத்துள்ளது.

இத்தகைய போக்குத் தொடர்வது விபரீதங்களை ஏற்படுத்தும் என்பது, இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் தெரிந்திருக்கவேண்டும்.

இந்த மண்ணின் மைந்தர்களின் விருப்பத்துக்கு மாறாக, பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் தன் விருப்பப்படி இந்தியா, இலங்கையுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்தது. அந்த ஒப்பந்தம் என்னவாயிற்று என்பதையும், அத்தகைய ஒப்பந்தத்தைச் செய்ததற்கு விலையாக - கீர்த்தி உட்பட எவற்றையெல்லாம - தான் கொடுக்கவேண்டி நேர்ந்தது என்பதையும் இந்தியத் தரப்பு சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

இந்தப் பிரதேசத்தின் வல்லாதிக்க நாடு இந்தியா தான். அந்த யதார்த்தத்தை தமிழர்கள் ஏற்கின்றார்கள். இந்தியாவை மதிக்கின்றார்கள். ஆனால், அதற்காக ஈழத்தமிழர்கள் போன்ற சிறிய இனங்கள் மீது நியாயமற்ற அதிகாரத்தைச் செலுத்த இந்தியா முற்படக்கூடாது. அது தவறு.

தமிழ்ச்செல்வனின் கருத்தை சற்று கவனத்தில் எடுத்து, இலங்கை, இந்தியத் தரப்புகள் நடந்து கொள்ளுமாயின் நல்லுறவு வளரவும் நல்லணை நடக்கவும் வழிபிறக்கும்.

# குடாநாட்டைச் சேர்ந்த பதின்மூன்று கலைஞர்களுக்கு 'கலாபூஷணம்' விருது

## அடுத்தமாதம் கொழும்பில் வைபவம்

யாழ்ப்பாணம்,ஜன.17

குடாநாட்டைச் சேர்ந்த 13 பேர் 'கலாபூஷணம்' விருதுபெறவுள்ளனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமய விவகாரத் திணைககளம் என்பன ஒன்றிணைந்து ஆண்டுதோறும் 'கலாபூஷணம்' விருது வழங்கிவருகின்றன.

2003 ஆம் ஆண்டு இருபத்தொன்பது தமிழ்க்கலைஞர்கள் இந்த விருதினைப் பெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

'கலாபூஷணம்' விருதுபெறத் தெரிவுசெய்யப்பட்ட 29 தமிழ்க் கலைஞர்களில் 13 பேர் யாழ். குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி விருதுவழங்கும் வைபவம் அடுத்தமாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஆனந்தகுமாரசாமி மாவத்தையில் உள்ள (கொழும்பு-7) ஜோன் டீ சில்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

விருதுபெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்குத் தனித்தனியே கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

'கலாபூஷணம்' விருதுபெறும் 29 தமிழ்க்கலைஞர்களின் விவரம்வருமாறு:-

வல்லிபுரம் பரமசாமி (அரியாலை), கந்தையா சுந்தரலிங்கம் (யாழ். ஆனைப்பந்தி), சின்னப்பு அரசரத்தினம் (மானிப்பாய்), வல்லிபுரம் குமாரசாமி (நல்லூர்), ஜோர்ஜ் பிலிப் பேமினஸ் (யாழ்ப்பாணம்) -

கந்தையா நாகப்பு (வட்டுக்கோட்டை), சுப்பிரமணியம் நமசிவாயம் (காங்கேசன்துறை), நடேசன் சிவசண்முகமூர்த்தி (சுழிபுரம்), பாஸ்கரக்குருக்கள் பஞ்சநாதம் (கரவெட்டி), ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை (பாஷையூர்) -

சின்னத்துரை சண்முகராஜா (கொக்குவில்), சுப்பிரமணியம் செல்லத்துரை (இளவாலை), ஸ்ரீரங்கம் அப்புத்துரை (இளவாலை), வெள்ளசாமி முத்தழகு சூரியகுமார் (கொழும்பு 07), வைத்திலிங்கம் சபாபதி செந்தில்நாதன் (கொழும்பு 06) -

முனுசாமி இராமையா (வவுனியா), முத்துமரியநாயகம் (பளை), இராசையா தம்பிராசா (ஈச்சிலம்பற்று), தம்பிப்பிள்ளை நல்லலிங்கம் (ஆரையம்பதி), கதிரேசபிள்ளை தர்மரத்தினம் (களுதாவளை) -

இராசாங்கம் சிவஅன்பு (கல்முனை), பூபாலபிள்ளை கணபதிப்பிள்ளை (தம்பிலுவில்), அப்புஆசாரி இராமன் (கொட்டகல), பொன்னன் முத்துலிங்கம் (நோர்வூட்), கதிரித்தம்பி பாலசுந்தரம் (முள்ளியவளை) -

ஆறுமுகம் இரத்தினம் (கற்சிலைமடு), சந்தியா அந்தோனி மிண்டா (பேசாலை), அடைக்கலம் வேதநாயகம் (பல்லவராயன் கட்டு), ஆர்.வி.செல்வராஜா (கொழும்பு 11). (எ)

# தாதியசேவைக்கான ஆள்சேர்ப்பு; ஆண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## வழமையான நடைமுறையில் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.17

தாதிய சேவைக்கான பயிற்சியாளர்களைத் தெரிவுசெய்யும் வழமையான நடைமுறையில் சுகாதாரத் திணைக்களம் இம்முறை மாற்றமொன்றினை அமுல்செய்துள்ளது.

மேற்படி புதிய நடைமுறையின்படி தாதியசேவைக்கு ஆண் பயிலுநர்களைச் சேர்ப்பதில் இதுவரை பின்பற்றப்பட்ட கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில், தாதியசேவைக்கு ஆள்சேர்க்கப்படுபவர்களில் ஆண்களின் தொகை ஐந்து சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்தக் கட்டுப்பாடு காரணமாக நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் தற்சமயம் கடமைபுரியும் தாதியர்களில் ஆண்களின் தொகை மிகக் குறைவாகவும், பெண்களின் தொகை மிக அதிகமாகவும் இருந்துவருகின்றது.

தாதியசேவையின் பாரம்பரிய மரபு, தேவைக்கேற்ப இந்த நடைமுறை இதுவரைகாலமும் இங்கு பின்பற்றப்பட்டு வந்தது.

ஆனால், இந்த நடைமுறையைக் கைவிடத் தீர்மானிக்கப்பட்டதையடுத்து இம்முறை, தாதியப் பயிற்சிக்கு அதிகளவான ஆண்கள் தெரிவாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இதற்கமைய, 2003/2004 ஆம் ஆண்டிற்கான தாதிய பயிற்சிக்கென யாழ். தாதியப் பயிற்சிக் கல்லூரிக்கு இம்முறை முதற்றடவையாக ஆண்கள் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, யாழ். தாதியப் பயிற்சிக்கல்லூரிக்கு பயிற்சிக்கென அனுமதிக்கப்பட்டுள்ள 31 புதிய மாணவர்களில் 21 பேர் ஆண்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(எ-15)

### யாழ். ஆஸ்பத்திரியில்

# பிரசவ விடுதியின் மின்தூக்கி மீண்டும் இயங்க ஆரம்பித்தது

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ். போதனா வைத்தியசாலையின் மற்றொரு மின்தூக்கி மீண்டும் இயங்கவைக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்குப் பின் - சுமார் 14 வருடங்களாகப் பழுதடைந்து இயங்கமுடியாத நிலையில் இருந்த பிரசவ விடுதி மின்தூக்கியே தற்பொழுது திருத்தியமைக்கப்பட்டு இயங்கவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

மேற்படி மின்தூக்கியை மீள இயக்குவது விடயமாக, ஆஸ்பத்திரி நிர்வாகம் வேண்டிய நடவடிக்கைகளை அடிக்கடி மேற்கொண்டும், கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் அவை அனைத்தும் பயனற்றுப்போனதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட மின்தூக்கி இயங்காத காரணத்தினால் மாடியில் இருக்கும் இரண்டு பிரசவ வார்ட்டுக்களிலும் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட தாய்மார்கள் இதுவரைகாலமும் பெரும் துன்பங்களை அனுபவித்து வந்தனர். தற்போது இது இயங்க வைக்கப்பட்டதையடுத்து பிரசவத் தாய்மார்கள், சத்திரசிகிச்சை செய்த தாய்மார்கள் சிரமமின்றிச் சென்றுவருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இயங்காதிருந்த மற்றோர் மின தூக்கி அண்மையில் இயங்கவைக்கப்பட்டது தெரிந்ததே.

(எ-15)

# குடமியன், நாவற்காடு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

கொடிகாமம்,ஜன.17

கொடிகாமம் பிரதேசத்துக்கு உட்பட்ட குடமியன், நாவற்காடு கிராமங்களில் இரவு நேரங்களில் சட்டவிரோதமாக மணல் அகழும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர் குழுவொன்று இவ்வாறு மணல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாகவும் -

நிலச் சொந்தக்காரர்கள் இத்தகைய அடாவடித்தனமான செயலைத் தடுக்கச்செல்லும் பட்சத்தில், மணல் அகழ்வோர் சவள், கத்தி, சாராயப்போத்தல்கள் கொண்டு மிரட்டுகின்றனர் என்றும் - தெரியவருகிறது.

இதுவிடயமாக கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் நிலச் சொந்தக்காரர்கள் முறைப்பாடு செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் - கூறப்பட்டது.

குடமியன், நாவற்காடு கிராமங்களில் மணல் அகழ்வதற்குரிய இடங்கள் இல்லாதபோதிலும், வயல்வெளிகளை அண்டிய இயற்கையான மணல்மேடுகளை இவர்கள் அகழ்ந்தெடுத்து விற்பனைசெய்து வருவதாகவும் - கூறப்பட்டது.

(எ-74)

### நாளை

தை 04
ஞாயிற்றுக்கிழமை
(18.01.2004)
திதி : ஏகாதசி
பகல் 11.51 வரை
நட்சத்திரம்: அனுஷம்
பகல் 1.50
சுபநேரம்: 9.35-11.05
ராகுகாலம்: 5.05-6.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அன்பையும் வாசனையையும் மறைக்க முடியாது.

# சம்பந்தன் விருது சு.வேக்கு



யாழ்ப்பாணம்,ஜன.17

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக, 2003 ஆம் ஆண்டுக்கான சம்பந்தன் விருது 'சு.வே. சிறுகதைகள்', 'பாற்காவடி' ஆகிய நூல்களின் படைப்பாளியாகிய மூதறிஞர் சு.வேலுப்பிள்ளைக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த விருது வழங்கும்விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தியில் உள்ள தமிழ்எழுததாளர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், வாழ்த்துரைகளை மூத்த எழுத்தாளர் வரதர், ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் ஆகியோர் நிகழ்த்துவர். ஏற்புரையை சு.வேலுப்பிள்ளையும், நன்றியுரையை கலாநிதி க.குணராசாவும் (செங்கை ஆழியான்) வழங்குவர்.

(எ-8)

# கோயிலாக்கண்டி கடலேரியில் மீன்பிடித்தூரம் அதிகரிப்பு!

## படைத் தளபதி உறுதிமொழி

தென்மராட்சி,ஜன.17

கோயிலாக்கண்டி கடலேரியில் அமைக்கப்பட்டுள்ள பாலத்திற்கு அப்பால் மேலும் ஒரு கிலோமீற்றர் தூரம் சென்று மீன்பிடிக்க அடுத்தமாதத்தில் இருந்து அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என 52 ஆவது படையணியின் தளபதி உறுதியளித்துள்ளார்.

கடந்த புதனன்று கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், இப்பகுதி கடற்றொழிலாளர் சங்கம் விடுத்த கோரிக்கையையடுத்து படைத்தளபதி இந்த உறுதிமொழியை வழங்கினார் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - குறிப்பிட்ட பாலத்திற்கு அப்பால் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டாலும் பாஸ் நடைமுறை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மீளக்குடியமர்ந்த மக்கள் கடலேரியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.(எ-117)

# கிட்டுப் பூங்காவில் நினைவஞ்சலி









வங்கக்கடலில் வீரகாவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவுதின நிகழ்வுகள் நேற்று நல்லூர் முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள கிட்டுப் பூங்காவில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பத்து வீரவேங்கைகளின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்படுவதனையும் 10 வேங்கைகளின் திருவுருவப்படங்களையும் யாழ்.- நல்லூர்க்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் பொதுச்சுடர் ஏற்றுவதையும் தேசியக்கொடியை யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஏற்றுவதனையும் போராளிகள் அக வணக்கம் செலுத்துவதனையும் - நல்லூர் முன்வீதியில் விசேடமாக அமைக்கப்பட்ட பொதுப்பந்தலில் கிட்டுவின் போராட்டத்தை சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சியையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

### புத்தளம் நகரசபைத் தலைவர் பதவி:

## மு.கா.விடம் ஒப்படைக்காவிட்டால் ஐ.தே.க.வுக்கு எதிராகப் போராட்டம்

புத்தளம் நகரசபையின் தலைவர் பதவியை ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரிடம் ஒப்படைக்காவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஐக்கிய தேசியக் கட்சித் தலமைப்பீடத்திற்கெதிராக போராட்டம் நடத்துவதற்கு புத்தளம் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் கிளை தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ தலைமையில் அவரது வீட்டில நடைபெற்ற மாவட்டக் கிளைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேறறப்பட்டது.

மு.கா.உறுப்பினர் ஒருவரிடம் இருந்து வந்த புத்தளம் நகர சபைத் தலைமைப் பதவியை கடந்த சில மாதங்களுக்கு முன் ஐ.தே.க. பொறுப்பேற்றது. அதனால் ஐ.தே.க. - மு.கா. உறவில் விரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து, மு.கா.தேசியத் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஐ.தே.க. தலைமைப்பீடத்துடன் நடத்திய பேச்சுக்களின்போது ஜனவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக அப்பதவியை மு.காவிடம் மீள ஒப்படைப்பதற்கு இணக்கம் தெரிவிததிருந்தது. எனினும், இன்னும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

எனவே, இன்னும் ஓரிரு தினங்களுக்குள் மு.கா. உறுப்பினர் ஒருவரிடம் புத்தளம் நகரசபை தலைமைப் பதவி ஒப்படைக்கப்படாவிட்டால், புத்தளம் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட மு.கா ஆதரவாளர்கள் அனைவரும் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவதென புத்தளம் மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தேசிய அமைப்பாளர் தெரிவித்தார்.

### இராஜினாமா தீர்மானத்தையடுத்து

## கொழும்பு பிரதிமேயர் சாலி திங்களன்று பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயர் அசாத்சாலி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிரதமர் ரணில விக்கிரமசிங்கவைச் சந்திக்கவிருக்கிறார். பிரதமர் விடுத்த அழைப்பின் பேரிலேயே இச்சந்திப்பை மேற்கொள்ள விருப்பதாக அசாத்சாலி தெரிவித்தார்.

பிரதி மேயர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய அவர் நேற்று முன்தினம் தீர்மானித்ததை அடுத்தே பிரதமர் அவரைச் சந்திப்புக்கு அழைத்திருக்கிறார். இராஜினாமாக் கடிதத்தை அவர் பிரதமருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

சபையில் நடைபெறும் மோசடிகளும், முறைகேடுகளும், அமைச்சர் ஒருவரின் இடையூறுகளும் தான் உங்களின் இம்முடிவுக்கான காரணங்கள் என்று கூறப்படுகின்றனவே எனக் கேட்டபோது, அதற்குப் பல காரணங்கள் இருப்பதாகவும், பிரதமரைச் சந்தித்த பின்னர் அவற்றைத் தெரிவிப்பதாகவும் அசாத்சாலி கூறினார்.

## ரயில் கட்டண அதிகரிப்பை எதிர்த்து 10 லட்சம் பயணிகளின் கையொப்பங்கள்

### கோட்டை ரயில் நிலையம் எதிரே வேட்டை ஆரம்பம்

ரயில் கட்டணங்கள் பயணிகள் தாங்கமுடியாத அளவுக்கு அதிகரிக்கப்பட்டிருப்பதை எதிர்த்து 10லட்சம் பயணிகளின் கையொப்பங்களைத் திரட்டும் வேட்டை நேற்று முன்தினம் ஆரம்பமானது.

ரயில் பயணிகள் சங்கங்கள் ஒன்றிணைந்து இக்கையெழுத்து வேட்டையை நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையம் எதிரே ஆரம்பித்தன.

பத்து லட்சம் கையெழுத்துக்கள பெறப்பட்டதும் மகஜர் ரயிவே அதிகாரசபைத் தலைவரிடம் கையளிக்கப்படுமென பயணிகள் சங்கங்கள் தெரிவித்தன.

இதற்கிடையே, ரயில் கட்டண அதிகரிப்பில் காணப்படும் குளறுபடிகளைத தீர்க்க திறைசேரி நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக ரயில்வே அதிகாரசபைத் தலைவர் மனதுங்க தெரிவித்தார்.

ரயில் கட்டணங்கள் 40 சத வீதம், 50 சதவீதம்என இருவிதமாக அதிகரிக்கப்பட்டதால் குளறுபடிகள் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

### பெரும் வரட்சியை எதிர்கொள்ள அரசு தயார்

எதிர்காலத்தில் பெரும் வரட்சி ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதால் அதற்கு முகம் கொடுக்க அரசு தயாராகி வருகிறது. இதற்கென மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கரு ஜயசூரியவின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் சகல பிரதேசங்களிலும் நிலவும் நிலைமையை ஆராய்ந்து தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் இக்குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. வரட்சியால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைக்கத் தேவையான திட்டங்களை வகுப்பது இக்குழுவின் பிரதான குறிக்கோளாகும்.

### ஓட்டோக்கள் பதிவு: 25 ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ள அறிவுறுத்து

யாழ்பாணம், ஜன 17

குடாநாட்டில் உள்ள ஒட்டோக்களில் இந்த ஆண்டிற்கான பதிவுகளை இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வட பிராந்திய ஓட்டோ சங்கத்தின் தலைவர் இ.மனோகரராஜா கேட்டுள்ளார்.

பதிவுகளை மேற்கொள்வதற்கான முக்கியத்துவம் பற்றிய கூட்டம் ஒன்று கடந்த 15ஆம் திகதி வடமராட்சி ஓட்டோ சங்கக் கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல்துறை உறுப்பினர் பேபி இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்

ஓட்டோ சங்கக் கிளைகள் மூலம் பதிவுகளுக்கான படிவங்களை ஓட்டோ சாரதிகள் அனுப்பிவைக்கலாம் என்றும் -

இதுவரை ஓட்டோ சாரதிகளுக்கான அடையாள அட்டை பெறாதவர்கள் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறும் சங்கத் தலைவர் கூட்டத்தில உரையாற்றிய போது கேட்டுக்கொண்டார்.

(ஓ-6)

### போட்டிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.17

தேசியக்கல்வி நிறுவனப் பட்டப்படிப்புக்களுக்கு ஆசிரிய மாணவரைத்தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த 450 ஆசிரியர்களும் அன்றையதினம் பரீட்சைக்குத் தோற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

(ஓ-6)

## குடாநாட்டு ஆஸ்பத்திரிகளிலும் பொலித்தீன் பாவனை வேண்டாம்

### சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து

சண்டிலிப்பாய்,ஜன.17

அரச நிறுவனங்களில் பொலித்தீன் உற்பத்திப் பொருள் பாவனையை கைவிடுதல் திட்டத்தின் கீழ் யாழ். சுகாதாரத்திணைக்கள நிறுவனங்களிலும் மற்றும் அரசினர் வைத்தியசாலைகளிலும் பொலீத்தீன பொருள பாவனை நிறுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொலித்தீன் உற்பத்திப் பொருள் பாவனையை கைவிடுதல் தொடர்பாக அரச நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரினால் அண்மையில் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையை மேற்கோள்காட்டி யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் கடிதம் ஒன்றை தமது பிரிவிலுள்ள சுகாதார நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு இவ்வாரம் அனுப்பிவைத்துள்ளார்.

பொலித்தீன் உற்பத்திகள் பாவனையால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், கேடுகள் குறித்து ஏனையோருக்கு அறிவுறுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-135)

### 'வற்' வரியைப் பயன்படுத்திச் செய்யப்படும்

## விலை அதிகரிப்புகள் குறித்து ஆராய வர்த்தக அமைச்சுக்குப் பிரதமர் பணிப்பு

வரவு-செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட 5சதவீத 'வற்' வரிக்கும் கூடுதலான வீதத்தில் சில பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருப்பது குறித்து ஆராயுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சைப் பணித்துள்ளார்.

பிரதமரின் இந்தப் பணிப்புரையை அடுத்து, இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க விசேட குழு ஒன்றை வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சு நியமிக்கவிருக்கிறது.

சில பொருள்களுக்கான 'வற்' வரி 10சதவீதத்திலிருந்து 15சதவீதமாக அதிகரிக்கப்பட்டபோதிலும், குறிப்பிட்ட பொருள்களுக்கான தீர்வை வரிகள் குறைக்கப்பட்டிருப்பதாகக் கூறும் அரசு, இந்த நிலையில் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவேண்டிய அவசியம் இல்லையெனத் தெரிவித்துள்ளது.

## சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதி கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்.மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கான மூலதன நன்கொடை நிதியாக பதினொரு லட்சத்து 76 ஆயிரத்து அறுநூறு ரூபா மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அனுப்பி வைககப்பட்டுள்ளது.


'ஏ' தர சனசமூக நிலையத்திற்கு ஆயிரத்து 600 ரூபாவும், - 'பி' தர சனசமூக நிலையத்திற்கு ஆயிரத்து 400ரூபாவும் - வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 உள்ளூராட்சி சபைகளுக்கும் இந்த நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பொதுநூலக நன்கொடை நிதி, மகப்பேற்று, பிள்ளை பராமரிப்பு நிதி, மலசல கூட பராமரிப்பு நிதி என்பனவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நன்கொடை நிதி கடந்த ஆண்டு வழங்கப்பட வேண்டியது என உள்ளூராட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (எ-185)




தேர்தல் ஆணையாளர்
தயானந்த திஸாநாயக்க

# "இறப்பதற்குக் கூட இப்போது எனக்கு உரிமை மறுப்பு!"

**நாடாளுமன்றத் தெரிவுக்குழு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரை சிபார்சுசெய்து 2 ஆண்டுகளாயும் ஜனாதிபதி அந்த நியமனத்தை மேற்கொள்ளாது கடத்தி வருகிறார். இதனால் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நியமிக்கப்படும்வரை தற்போதைய தேர்தல் ஆணையாளர் - 28.01.2002இல் அறுபது வயதைப் பூர்த்தி செய்தும் - ஓய்வுபெற முடியாத நிலையிலுள்ளார். இவை குறித்தும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா 'லங்காதீப' வார இதழுக்கு வழங்கிய பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

**கேள்வி:** எதிர்வரும் பெப்ரவரி, ஜுலை மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவேண்டியுள்ள போதிலும் அதற்கு முன்னர் திடீர் நடாளுமனறத் தேர்தலொன்றை நடத்தவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது பற்றிய தங்களது கருத்தென்ன?

**பதில்:** தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தில் இதுவரை இரண்டு ஆண்டுகளே கழிந்துள்ளன. அப்பதவிக்காலத்தில் மேலும் 3 ஆண்டுகள் மீதமாய் உள்ளன. ஆதலால், பொதுத் தேர்தல் ஒன்று குறித்து நாம் கவனம் செலுத்தவில்லை. ஆனால், மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டியுள்ளதால் அவற்றுக்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். மாகாணசபை ஒன்றின் ஆயுட்காலம் முடிவடையும் தினத்தில் இருந்து 7




நாள்களுக்குள் புதிய தேர்தலுக்கான வேட்புமனுக்கள கோருவது தொடர்பாக அறிவிக்கவேண்டும். வேட்புமனுக்கள் கோரப்பட்ட நாளிலிருந்து 14 நாள்களுக்குப் பின்னர் வேட்புமனுக்கள் ஏற்கும் பணி ஆரம்பமாகும். அப்பணி ஆரம்பமாகி 21 நாள்கள் முடிவடையும் தினத்தன்று வேட்புமனுக்கள் ஏற்கும் நடவடிக்கை முற்றுப்பெறும். அதனைத் தொடர்ந்து தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் அகர வரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டு, அத்தேர்தல் நடத்தப்படும் திகதியும் தீர்மானிக்கப்பட்டு அவ்விவரங்கள் பகிரங்கப்படுத்தப்படும். வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் முடிந்தவரையில் விரைவாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். எமது முன்னனுபவங்களின்படி சாதாரணமாக இதற்கு நாலைந்து நாள்கள் தேவைப்படும். குறிப்பிட்ட தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை என்பவற்றை தீர்மானிகும் வகையிலான நடவடிக்கைகளே இதுவாகும். எவ்வாறாயினும் மாகாணசபை ஒன்றின் பதவிக்காலம் முடிவடையும் தினத்திலிருந்து 10முதல் 13 வாரங்களுக்குள் இத்தேர்தல் வாக்கெடுப்பு இடம்பெற்றாகவேண்டும்.

**கேள்வி:** 7 மாகாணசபைகளுக்கான தேர்தலையும் ஒரேநாளில் நடத்த முடியுமானால் தேர்தலுக்கான செலவனங்களை குறைத்துக்கொள்ள முடியுமென நீங்கள் கருத்து வெளியிட்டு இருந்தீர்கள். அவ்விதம் ஒரேநாளில் இந்த ஏழு மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த முடிந்தால் அதனால் மீதப்படுத்தமுடியும் நிதித்தொகை பற்றிய விவரம் தரமுடியுமா?.

**பதில்:** கடந்தகாலத் தேர்தல் நடவடிக்கைகளின் அனுபவங்களின்படி பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தி முடிக்க 65 கோடி ரூபாவரை செலவாகும். ஏழு மாகாணசபைகளுக்குமான தேர்தலை ஒரேநாளில் நடத்த முடியுமானால் அதற்காக 50 கோடி ரூபா வரையிலேயே செலவாகலாம்.

**கேள்வி:** ஏழு மாகாணசபைகளுக்கான தேர்தல் ஒரே நாளில் நடத்தப்படுவதை முக்கிய அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை விரும்பவில்லை என தோன்றுகிறது. ஒருவேளை இந்த ஏழு மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் வெவ்வேறு தினங்களில் நடத்தப்படுமானால் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் எவை?

**பதில்:** தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் ஏழு மாகாண சபைகளின் தேர்தலும்,ஒரே நாளில் நடத்தப்படவேண்டும் என்பதே எனது கருத்தாகும். தேர்தல் தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளில் குறிப்பிட்ட ஒருதரப்பினரே ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஒரேவிதத்திலான செயற்பாடுகளை மீண்டும் மீண்டும் ஆற்ற வேண்டி ஏற்படுவதால் அரசியல்வாதிகள், பொதுமக்கள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் ஆகியோரின் நேரமும், சக்தியும் வீணே விரயமாகும். மற்றொருபுறம் பொதுமக்களது பணம் அவசியமற்ற விதத்தில் வீணே விரயமாகவும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இம் மாகாண சபைகளுக்கான தேர்தலை வெவ்வேறு கால அட்டவணைப்படி நடத்த முயற்சிப்பதால் நாட்டில் சமாதான சூழ்நிலைக்குப் பாரதூரமான பாதிப்பு ஏற்பட இடம் ஏற்படும். சட்ட மீறல்கள் பெருமளவில் அதிகரிக்கவும் சந்தர்ப்பமேற்படும்.

## அரசியல் ஆதாயம்

**கேள்வி:** இந்த ஏழு மாகாண சபைகளுக்குமான தேர்தலை வெவ்வேறு தினங்களில் நடத்துவதன் மூலம் அது ஏதாவதொரு அரசியல் கட்சக்குச் சாதகமான பலனை அளிப்பதாக அமையுமா?

**பதில்:** இத்தேர்தல்களை ஒரே நாளில் நடத்தாவிடின் ஒரு மாகாண சபைகான தேர்தல் முடிவுகளுக்குக் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படக்கூடும். முதலில் நடத்தப்படும் ஒரு மாகாண சபைக்கான தேர்தலில் குறிப்பிட்டதோர் அரசியல் கட்சிக்குக் கிட்டும் வெற்றி வாய்ப்பால், தொடர்ந்து இடம்பெறும் ஏனைய மாகாணசபைகளுக்கான தேர்தல்களிலும் அதே அரசியல் கட்சிக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டும் சாதக நிலை உருவாகக்கூடும். சுருக்கமாகக் கூறுவதாயின் முதலில் பெற்ற வெற்றி காரணமாக அக்கட்சிக்கு பொதுமக்கள் மத்தியில் ஆதரவு அலை உருவாகக் கூடும். ஆதலால், ஏழு மாகாண சபைகளுக்கான தேர்தலையும் குறிப்பிட்டதொரு தினத்தில் நடத்துவதே சகல அரசியல் கட்சிகளையும் திருப்தியடையச் செய்வதாய் அமையும்.

**கேள்வி:** அரசமைப்பின் 17ஆவது திருத்தம் சட்டபூர்வமானதாக ஆக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிவடைந்துவிட்டபோதிலும் தேர்தல் ஆணைக்குழுவொன்று இதுவரையில் உருவாக்கப்படவில்லை. அவ்விதம் தேர்தல் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படாத நிலையில் மீண்டும் தேர்தலொன்றை நடத்தவேண்டி ஏற்பட்டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாது?

## தேர்தல் ஆணைக்குழு எதையும் சாதித்துவிடாது

**பதில்:** அரசமைப்பு விதிகளுக்கான 17ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச தேர்தல் ஆணைக்குழுவின் அமைப்பு, தன்மை மற்றும் அதிகாரங்கள் என்பன குறித்து எவ்வித விவரங்களும் எனக்குத் தெரியவில்லை. அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சபையினாலேயே இத் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் பிரேரிக்கப்படவேண்டியவர்கள். அரசமைப்புச் சபை உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களே. தமது உறவினரான அல்லது தம்முடன் நெருங்கிய நட்புக்கொண்ட நபர்களையே தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களாகப் பிரேரிப்பதற்கு இவர்கள் முயற்சிப்பர் என்ற நியாயமான சந்தேகம் எவருக்கும் எழுவது தவிர்க்க முடியாததே. இதன் காரணமாகவே இதுவரையில் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனம் மேற்கொள்ளப்படமுடியாதுள்ளது. அடுத்ததாக உத்தேச தேர்தல ஆணைக்குழுவுக்கென குறிப்பிட்ட அளவான அதிகாரங்கள் குறித்தொதுக்கபட்டுள்ளன. அந்த அதிகாரங்களுககமைய தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்ட ஒரு நியமனத்தை வழங்கும் வேளையில், அந்நியமனத்துக்குரியவர் விதிகளுக்கமையாத வகையில் செயற்படுவாரானால், அவருக்கெதிராக எடுக்கப்படவேண்டிய ஒழுங்காற்று நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் எதுவும் அரசமைப்பில் எப்பிரிவிலும் குறிப்பிடப்படவில்லை. இவ்வித பூரண விவரங்கள் யாவற்றையும் அரசமைப்பல் குறிப்பிடுதல் சிரமமானதொன்றே. அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார ஒதுக்கீடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தினால் புதியதொரு சட்ட மூலம் நிறைவேற்றப்படல் அவசியமாகும். அரசமைப்பின் 17ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும், நாடாளுமன்றம் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆதலால், தேர்தலொன்று நடத்தப்படுவதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழு உருவாக்கபபட்டாலும் தேர்தல் ஆணைக்குழுவால் புதுமையாக எதனையும் செய்துவிட முடியாது.


**கேள்வி:** தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படும்வரை, அதற்குரிய அதிகாரங்கள் தற்போதைய தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் தங்களால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் 27(2) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படும்வரையும் தேர்தல் ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணையாளர் ஆகிய இரு பொறுப்புக்களையும் தாங்களே வகிக்கின்றீர்கள். ஆனால் தாங்கள் மேலே குறிப்பிட்ட விதத்தில் நிலைமை அமைந்துள்ளதால் தங்களால் கூட புதுமையாக எதனையும் செய்யமுடியாதல்லவா?

**பதில்:** ஆம், அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். கடந்த 2001 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின்போது அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தில் கூறப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய, அரசின் அசையும், அசையாச் சொத்துக்கள் போன்று, அரச ஊழியர்களைத் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவேண்டாமென நான் அரச திணைக்களங்களைக் கோரியிருந்தேன். தேர்தல் சமயத்தில் இடமாற்றங்கள் எதனையும் மேற்கொள்ள வேண்டாமெனவும் கோரியிருந்தேன். ஆனால், எவரும் எனது அந்த உத்தரவைக் சிறிதேனும் பொருட்படுத்தவில்லை. ஆனால், அது குறித்து என்னால் எவ்வித எதிர் நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை. இது குறித்து சட்டம் மௌனம் சாதிப்பதேன்? பொதுச் சொத்துக்களுக்குப் பொறுப்பானவர்கள் அவற்றிற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் எனச் சட்டம் இயற்றப்பட வேண்டும். அது தொடர்பாக அந்தந்த அமைச்சுக்களின் செயலாளர்கள் இறுதிப் பொறுப்பை ஏற்கவேண்டியவர்கள் எனச் சட்டத்தில் சேர்க்கப்படுதல்வேண்டும். தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கும் சட்டப்படியான உத்தரவு அவர்களால் மீறப்படுமாயின் அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டம் அறவிடவேண்டுமென்ற சட்டவிதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசரமான தேவையாகும்.

**கேள்வி:** ஐ.தே.கட்சி எதிர்க் கட்சியாகச் செயற்பட்டதருணத்தில் அரசமைப்பின் 17ஆவது திருத்தத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் சட்டமூலம் உருவாக்கப்பட்டது. அச்சட்ட மூலத்தை முன்னிலைப் படுத்தி அரசமைப்புக்கான 17ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றும் பொருட்டான அவசியமான ஆரம்ப நடவடிக்கைகளை பொ.ஐ.முன்னணி அரசே மேற்கொண்டது. ஆனால், இன்று ஐ.தே.முன்னணியே ஆட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இருந்தபோதிலும் அரசமைப்பின் 17ஆவது திருத்தத்திலுள்ள ஓட்டைகளை அடைக்க ஐ.தே.கட்சி நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாதது குறித்துத் தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** எமது அரசியல் வரலாற்றைப் பின்நோக்கிப்பார்த்தால் எப்போதும் அரசியல்வாதிகள், இருக்கும் ஓட்டைகள் ஊடாக மட்டும் வெளியேறிச செல்லவில்லை. அந்த ஓட்டைகளைப் பயன்படுத்தி வேறு பிரயோசனங்களைப் பெற்றுக்கொள்வதற்குச் சகல அரசியல் கட்சிகளும் ஆர்வம் காட்டி வந்துள்ளன. ஆகவே, திருத்தம் ஏற்படுத்தப்படாவிட்டால் காலத்திற்குக் காலம் அரசியல் கட்சிகள் மேன்மேலும் இதேவகையில் இயங்க வேண்டிய நிலை ஏற்படும். இவ்விடயத்தில நாடாளுமன்றப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் மற்றும் ஊடகங்கள் என்ற சகல தரப்புக்களும் மௌனம் சாதிக்கின்றனவே. இந்த லட்சணத்தில் அரசியல்வாதிகளின் இவ்வித அணுகுமுறை புதுமையானதாகக் கருதப்படவேண்டுமா?

**கேள்வி:** தங்களது கருத்துப்படி எமது அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் வேளையில் மட்டுமே சுதந்திரமானதும் நியாயமானதுமான வகையில் தேர்தல் நடத்தப்படவேண்டுமென கருத்து வெளியிடுவதை வழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். அதேவேளை, அவர்கள் ஆட்சி அமைத்து அரசில் அங்கம் வகிக்கும் வேளையில் அவ்வித நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதில்லையே?




## எதிர்க்கட்சியின் அரசியல் கலாசாரம்

**பதில்:** உண்மையில் அது யாவரும் அறிந்த விடயமே. எல்லைக்கு வெளியே இருந்துகொண்டு எல்லைக்கு உள்ளிருப்போரின் தவறுகள் குறித்து குற்றஞ்சாட்டும் அவர்கள் ஒரு நாளைக்கு எல்லையைத் தாண்டி உள் நுழைந்து மற்றைய தரப்பினருடன சேர்ந்து கொள்ளும் வேளையில் மௌனம் சாதிக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

**கேள்வி:** நமது அரசியல்வாதிகள் இத்தகைய போக்கைக் கடைக்கொள்வதேன்?

**பதில்:** அது அவர்களது அரசியல் கலாசாரம் என்றுதான் கூறவேண்டியுள்ளது. அவர்கள் அதிகாரத்தை அடைவதற்காகவும், அவ்விதம் அதிகாரம் அவர்கள் கைகளில் கிட்டும்போதும் அதனைத் தொடர்ந்து தம்வசம் தக்கவைத்துக் கொள்ளுவதற்காகவும் எதையும் செய்யத் தயாராகி விடுகின்றனர். இதைத்தான் கொடுத்த கடனைத் திருப்பி வாங்கக் கெஞ்சிக்கொண்டு திரிதல் என்று கூறுவார்கள். இன்று இந்நாட்டு வாக்காளர்களுக்கு அத்தகையதொரு நிலைமையே ஏற்பட்டுள்ளது.

**கேள்வி:** சுதந்திரமான, நியாயமான வகையில் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான பூரண அதிகாரங்கள் அரசமைப்புமூலமோ அல்லது தேர்தல் சட்டங்கள் மூலமோ கிட்டாத போதிலும் குறிப்பிட்ட சில வழக்குகளில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களின் அடிப்படையில் அவ் அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன அல்லவா?

**பதில்:** ஆம், சில அதிகார அலகுகள் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. 1999ஆம் ஆண்டு இடம்பெற்ற மத்திய மாகாண சபைத் தேர்தலுககு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனு மீதான தீர்ப்பில் மாகாண சபைத் சட்டத்தின் 46(அ) பிரிவு தொடர்பான பூரண விளக்கம் உயர் நீதிமன்றத்தால் விவரிக்கப்பட்டுள்ளன. அத் தீர்ப்பின்படி வாக்குச்சாவடியில் இடம பெறுபனவாகக் கருதப்படும் குழப்பங்கள் எவையென விவரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டதொரு நபரால் வாக்குச்சாவடியொன்றில் சிறு குழப்பமொன்று ஏற்படுத்தப்படுமானால் அவ்வாக்குச் சாவடியில வாக்களிப்பை ரத்துச் செய்து, பிறிதொரு தினத்தில் மீள்வாக்குப் பதிவு ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## வீயெஸ்ரி

இதன் பிரகாரம் நீதிமன்றம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கமைய சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்குமான மாநாடொன்றில் மேற்குறித்த நீதிமன்றத்தின் தீர்ப்புக் குறித்து ஆராயப்பட்டது. அதனடிப்படையில் 46(அ) விதியில் மேலும் ஆறு விடயங்களை உள்ளடக்கி அது குறித்து நீதிமன்றத்துக்கு விவரம் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்விதிகளைத் தாம் பின்பற்றி நடக்க ஒப்புக்கொள்வதாக சகல அரசியல் கட்சிகளும் அச்சமயம் நீதிமன்றத்தில் உறுதியளித்தன. ஆனால் அந்த உப பிரிவுகள் இதுவரையில் அச்சட்டத்தில் இணைக்கப்படவில்லை. அவ்விதம் அந்த உப பிரிவுகளையும் தேர்தல் சட்ட மூலத்தில் உள்ளடக்கி தேர்தல் சட்டம் திருத்தியமைக்கப்படவேண்டுமென நான் நாடாளுமன்றத்தையும் கேட்டுக்கொண்டுள்ளேன்.

**கேள்வி:** நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படாவிட்டாலும் கூட, எதிர் வரவுள்ள தேர்தல்களில் அந்நீதிமன்றத் தீர்ப்புக்களின் அடிப்படையில் தங்களால் நடவடிக்கை மேற்கொள்ள முடியுமல்லவா?

**பதில்:** அரசியல் கட்சிகளும், நீதிமன்றமும் , அந்த உடன்பாட்டிற்கு இணங்கிக்கொண்டதாலேயே நீதிமன்றம் அவ்வித தீர்ப்பை வழங்கியுள்ளது. இத்தீர்ப்பு 2001ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின்னரேயே வழங்கப்பட்டது. பிரதேச சபைகளுக்கான தேர்தல்களும் இத்தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னரேயே இடம்பெற்றுள்ளன. ஆதலால் இனிமேல் இடம்பெறும் சகல தேர்தலிலும் அந்த நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேயே நடவடிக்கைகள் மேற்

(10ஆம் பக்கம் பார்க்க)

**SUBRA (14)**
சித்தன்கேணி

அரச பாடசாலைகளில் இடைநிலைத் தரங்களில் பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பித்தலுக்கான பட்டதாரிகளைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கான போட்டிப் பரீட்சைக்குரிய வகுப்புக்கள்

**By: BRITTO**

**ஆரம்பம் 21-01-2004 மாலை 6.00 மணி**
Wen - Fri மாலை 6.00 - 8.00மணி
அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.
(சி-32760) (21-19-13)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 - 07 - 1937 | 17 - 01 - 2003 |

### அமரர் செகராஜரத்தினம் ஜெகநாதன்

தொண்டைமானாறு
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் - தொண்டைமானாறு, புலோலி, கெருடாவில், பொலிகண்டி)

(மனேஜர், முருகன் கோயில் - மொன்றியல் கனடா, தொண்டைமானாறு விநாயகர் சனசமூக நிலைய ஸ்தாபகர்களில் ஒருவர், தொண்டைமானாறு நற்பணி மன்றம் (கனடா) ஸ்தாபகர், முன்னாள் பொதுச்செயலாளர், தொண்டைமானாறு தச்சகொல்லை சித்தி விநாயகர் ஆலய திருப்பணிச்சபை முன்னாள் செயலாளர், முன்னாள் மணியகாரர், தொண்டைமானாறு விநாயகர் சனசமூக நிலையம், தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் முன்னாள் போசகர், தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்க முன்னாள் செயலாளர், பழையமாணவர் சங்க முன்னாள் உப தலைவர்)

தொண்டுக்கே தன்னை அர்ப்பணித்த தொண்டனாக
விளங்கிய அமரர் ஜெகநாதன் அவர்களின் அளப்பரிய
அருஞ்சேவைகள் அவர் மறைந்த
இன்றைய ஓராண்டு தினத்தில் நினைவு கூரப்படுகின்றன.
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகனுக்கு
புஷ்ப கைங்கரியம் தொண்டாகச் செய்தமை
கண்டு குறிப்பிடத்தக்கது.

தொண்டைமானாறு தச்சகொல்லை சித்தி விநாயகர்
ஆலய திருப்பணிச்சபை.
தொண்டைமானாறு நற்பணி மன்றம் கனடா. லண்டன்.
தொண்டைமானாறு விநாயகர் சனசமூக நிலையம்.
தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம்
T.U.S.C.

தொண்டைமானாறு. (27063)(34-21-19-13)

## கலந்துரையாடல்

வடமராட்சி கிழக்கு,ஜன.17

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக்கு பளையில நடைபெறவுள்ளது.

அண்மையில் பரந்தன் இரசாயன தொழிற்சாலை பொதுமுகாமையாளருடன் நடைபெற்ற கலந்துரையாடல் பற்றிய விவரங்களை அறிவிப்பதற்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மாக இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (10-182)

## இனங்காணப்படாத சடலம் அடக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.17

சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் இருந்து துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கடந்த 10ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலத்தை இனங்காணப்படாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகமும் சாவகச்சேரி பொலீஸ் நிலையமும் இச்சடலத்தை இனங்கண்டு விசாரணைக்கு உதவுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தும், இதுவரை சடலம் எவராலும் அடையாளம் காணப்படவில்லை.

அடையாளங் காணப்படாத நிலையில் மேலும் சடலத்தை பாதுகாத்து வைத்திருக்க விரும்பாத வைத்திய சாலை நிர்வாகம் அதனை தேவையேற்படும் பட்சத்தில் தோண்டி எடுக்கக்கூடிய வகையில் புதைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. (எ-15)

## மக்கள் சமாதான அரங்கின் கிளை நிறுவ ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.17

மக்கள் சமாதான அரங்கு என்ற அமைப்பின் கிளையை யாழ் மாவட்டத்தில் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று சனிக் கிழமை காலை 10 மணிக்கு யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தில் (கியூடெக்) நடைபெறவுள்ளது.

இந்த அமைப்பின் அமைப்பாளர்களான வண பிதா மாதம்பாகம அஸ்ஸஜி தேரோ, அருட்தந்தை அநுர பெரேரா ஆகியோரும் - யாழ். மாவட்ட அமைப்பாளர்களான வண.பிதா எஸ்.பி.நேசகுமார், கியுடெக் நிறுவனப் பணிப்பாளர் வணபிதா சி.ஜீ.ஜெயக்குமார், வட இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் சுவாமி பி. சிவலோகநாதன் மற்றும் யாழ். மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியத்தலைவர் எஸ்.பரமநாதன் ஆகியோரும் கலந்துகொண்டு இது தொடர்பாக விளக்கமளிப்பர்.

யாழ்.மாவட்ட. அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கல்விமான்கள் உட்பட பல தலைவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-5)

## சேவைநயப்பு விழா

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபராக 12 வருடகாலம் சேவையாற்றி இளைப்பாறிய செல்வி போ.கந்தசாமியின் சேவைநயப்பு விழாவும், "பண்மகள்" நூல் வெளியீட்டுவிழாவும இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன. இவ்விழாவில் பிரதம அதிதியாகத தெல்லிப்பழை பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக வலிகாமம வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருநதினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கலந்துகொள்வார்கள்.(ஒ-135)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100/%
சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ்
வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் !
என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:
Royal Industries, Colombo.
☎ 0112334603




ஏக விநியோகத்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567
சத்திரத்துச் சந்திக்கு அருகில் ⇨

ஸ்ரீராம ஜெயம்

யாழ்ப்பாணம் வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## அறிவித்தல்

**கட்டாக்காலி கால்நடைகள்**

மேற்படி தேவஸ்தானத்தின் பிரகாரத்திலும், மண்டபங்களிலும் பல நூற்றுக்கணக்கான கட்டாக்காலி கால்நடைகள், குறிப்பாக ஆடுகள், வீதிகளை அசுத்தப்படுத்துவதுடன், அடியார்கள் பொங்கலிடும் வேளைகளில் அவர்களின் படையல்களை இழுத்துச்சென்று சாப்பிடுவதும், ஆஞ்சநேயர் கோவில் மண்டபத்தை அசுத்தம் செய்வதுமாக அடியார்களுக்குப் பல வழிகளாலும் சிரமத்தையும், மனஉளைச்சல்களையும் கொடுக்கின்றன. பல அடியார்கள் தமது ஆதங்கத்தை வேதனையுடன் நிர்வாகத்திற்கு முறைப்பாடு செய்துள்ளார்கள். ஆகவே, மேற்படி கால்நடைகளின் உரிமைக்காரர்கள் இருப்பின் அவைகளை தத்தமது இடங்களில் வைத்து பராமரிக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

தலைவர்,
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில்.
ஆதீன மகாசபை.

15.01.2004. (27197)(34-21-19-13)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### கதிர்காமநாதன் அன்னபூரணம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23.09.1951 | 16.12.2003 |

இன்று (17.01.2004) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.*
(27016)(34-21-13-19)
க.தவக்குமார்
(தவம் - பெறாமகன்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்மசாந்தி அழைப்பும்



அமரர்
### கந்தையா தர்மலிங்கம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17-10-1930 | 18-12-2003 |

**அன்போடும் பண்போடும் ஆதரவாய் அரவணைத்து**
**என்றுமே இன்சொல்பேசி எம்முடன் வாழ்ந்திட்டீர்**
**இன்றோடு முப்பத்தொரு நாளாச்சே நீர் மறைந்து**
**ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.**


*எமது அன்புக்குரிய இல்லத்தலைவர் மறைந்த செய்தி கேட்டு உடனே எம் இல்லம்நாடி வந்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிய உற்றார், உறவினர், அயலவர், அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*இன்று (17-01-2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிரணம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்வதுடன் நண்பகல் நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

புத்தூர் கிழக்கு, புத்தூர். (2715[illegible]) (21-19-13)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 - 09 - 1920 | 19 - 12 - 2003 |

அமரர்
### சிற்றம்பலம் குமாரகுருசாமி

(ஆனந்தி அப்பா)
(18.01.2004)

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியிலும் எமது துயரத்தில் கலந்துகொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும், குடும்பத்துடன் வந்து உதவிகள் புரிந்தோருக்கும் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வீ.பாலேந்திரதாஸ் (ராசா),
தர்ஷன் ஸ்ரோர்ஸ்,
T.P.:226 3153.

*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.*
(27095)(34-19-13-21)

# மாகாண சபைத் தேர்தல் சட்டத்துக்கு அவசரமாக மூன்று திருத்தங்கள் வரும்

## அடுத்த வாரத்தில் உயர்நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு.ஜன,17

மாகாணசபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்த வகை செய்யும் சட்டத் திருத்தங்களை அவசரமாகக் கொண்டுவருவதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இத்திருத்தங்கள் அடுத்த வாரத்தில் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும். அதையடுத்து நாடாளுமன்றத்தில் திருத்தச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவற்றைத் தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இவற்றைத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:-

சகல மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல்களை நடத்துவது, அத்தேர்தல்களை அரச விடுமுறைதினமான சனிக்கிழமையில் நடத்துவது, சனத்தொகை அதிகரித்திருந்தாலும் மாகாண சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காதிருத்தல் ஆகியவையே இம் மூன்று திருத்தங்களுமாகும். இம் மூன்று திருத்தங்களையும் செய்வதற்கு சகல கட்சிகளும் ஆதரவு வழங்கவிருக்கின்றன.

இதை முன்னுதாரணமாகக்கொண்டு மாகாண சபை ரீதியில் அதிகாரத்தைப் பரவலாக்குவதென பிரதமர் தீர்மானித்திருக்கிறார். இத்தீர்மானத்தின் படி மாகாணசபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெறும் மாகாண சபைகளின் அமைச்சுப் பதவிகள் எதிர்க்கட்சியினருக்கும் வழங்கப்படும் - இவ்வாறு அவர் கூறினார்.

(எ)

# 'என்.கே.பி.' ஞாபகார்த்தமாக நுண்கலைப் பீடத்துக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஜன.17

நாதஸ்வர வித்துவான் கலாசூரி அமரர் என்.கே.பத்மநாதன் ஞாபகார்த்தமாக யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்துக்கு 4 லட்சம் ரூபா அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கனடாவின் ரொறன்ரோ நகரில் வசித்துவரும் அமரர் என்.கே.பத்மநாதனின் இசைப்பிரியர்கள், கலைஞர்கள் மற்றும் நண்பர்கள் இணைந்து இந்த அன்பளிப்பைச் செய்துள்ளனர்

இந்தக் கொடுப்பனவைப் பயன்படுத்தி யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்துக்கு மிகச்சிறந்த தகைமையுடன் அனுமதிபெறும் மாணவர்களுக்கு மாதாந்த உதவு தொகையை வழங்கமுடியும் எனவும்-

இந்தக் கொடுப்பனவை அவர்களின் கற்கைக் காலம் முழுவதும் வழங்கலாம் எனவும் பணத் தொகையை அன்பளிப்புச் செய்த குழு சிபார்சு செய்துள்ளது.

இதுதவிர, 2ஆம், 3ஆம், 4ஆம் வருடத்திலுள்ள சிறந்த மாணவர்களுக்கும் இந்த உதவு தொகையை வழங்கலாம். அத்துடன், நாதஸ்வரம் மற்றும் தவில் போன்றவற்றில் உயர் கற்கைநெறிகளைப் பல்கலைக் கழகத்திலோ அத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களிலோ பின்பற்றுபவர்களுக்கும் இரண்டு வருடத்துக்கு ஒரு முறை இந்த உதவு தொகையை வழங்கலாம் எனவும் அந்தக் குழு சிபார்சு செய்துள்ளது.

இந்த ஞாபகார்த்த உதவு தொகையை அன்பளிப்புச் செய்த குழுவில் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம், வயலின் வித்துவான் ஆர்.எஸ்.கேசவமூர்த்தி, நாதஸ்வர வித்துவான் எஸ்.சிவகுருநாதன், நாதஸ்வர வித்துவான் பி.ஏ.எஸ். முருகதாஸ், தவில் வித்துவான் கே. சிவமயம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(எ-9)

## பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம்:

# உயர்மட்ட பாதுகாப்புக்குழு இந்தியா சென்று பேச்சுக்கள்

கொழும்பு,ஜன.17

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கான பேச்சுக்களை மேற்கொள்ள இலங்கையின் உயர்மட்டப் பாதுகாப்புக்குழு ஒன்று கடந்த புதன்கிழமை இந்தியாவுக்குப் பயணமானது. இக்குழு இந்தியாவில் மூன்று நாள்கள் பேச்சு நடத்தும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் இக்குழுவுக்குத் தலைமை வகிக்கிறார். இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, சட்டத்தரணி நிகெல் கெட்ச் ஆகியோர் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்தின் பரந்த வரையறைகள் குறித்து இக்குழு முக்கியமாகப் பேச்சு நடத்தும்.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு மேற்கொண்ட இரு நாள் விஜயத்தின்போது, உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய பேச்சுகளை இந்தியாவுடன் ஆரம்பித்திருந்தார். பாதுகாப்பு அமைச்சை அதன் பின்னர் ஏற்றுக்கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கடந்த வாரம் இஸ்லாமாபாத்துக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது இந்தியப் பிரதமருடனும் வெளிவிவகார அமைச்சருடனும் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

ஒப்பந்தப் பேச்சுக்களை கூடிய விரைவில் இறுதியாக்கவிருப்பதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

(எ)

## அம்பாறை மாவட்டத்தில்

# இன நல்லுறவை, அமைதியைப் பேண புலிகள், முஸ்லிம்கள், பொலீஸார் உறுதி

இனநல்லுறவு, அமைதி, சமாதானம் பேணுவதில் அம்பாறை மாவட்டம் இதுவரை காட்டி வரும் அக்கறையைத் தொடர்ந்தும் பேணி ஏனைய மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் நிலையை வலுப்படுத்துவதென, முத்தரப்புச் சந்திப்பு ஒன்றில் உறுதி பூணப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகள், பொலீஸ் தரப்பினர் ஆகியோர் கலந்துகொண்ட முத்தரப்புச் சந்திப்பு அக்கரைப்பற்றில் இடம்பெற்றபோதே இந்த உறுதி பூணப்பட்டது.

அக்கரைப்பற்றிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில், அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரேஜ் ஹல்வோசன் தலைமையில் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில், மட்டு. - அம்பாறை துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கிருசன் தலைமையில், அம்பாறை மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், கல்முனை பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் ராஜ்குமார், மட்டக்களப்பு பிரதேச பொறுப்பாளர் சேனாதிராஜா, வீரமுனை கோட்டப் பொறுப்பாளர் பிள்ளை வானன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் தரப்பில் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளன செயலாளர் ஐ.எம். இப்ராகிம், முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று அமைப்பாளரும் கனிப்பொருள் கூட்டுத்தாபன நிறைவேற்றுப் பணிப்பாளருமான யு.என். உவைஸ் ஆகியோரும் கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஏ.ஆர்.ஏ.அஸீஸ்"ம் கலந்துகொண்டனர்.

பொலீஸார் தரப்பில் கல்முனை தலைமையக பொலீஸ் பொறுப்பதிகாரி ஏ.ஏச்.எம்.நசீம், அக்கரைப்பற்று பொலீஸ் நிலையப்பொறுப்பதிகாரி ரீ.எம்.ஐ.எம்.புஹாரி, பொத்துவில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஏ.வாகித், திருக்கோவில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எச்.ஏ. காரியப்பர், கல்முனை பொலீஸ் பெரும் குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி ஜெமீல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமுகமான முறையில் சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் இடம்பெற்ற இச்சந்திப்பில் பல்வேறு பிரச்சினைகளும் ஆராயப்பட்டு சுமுகமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலீஸாரின் கடமைகளுக்கு மதிப்பளித்து, குழப்பமேற்படாத வண்ணம் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்பட விடுதலைப் புலிகளும், விடுதலைப் புலிகளுடன் நல்லுறவைப் பேணி, அவர்கள் புரிந்துணர்வு அடிப்படையில் அரசியல் பணிகளை மேற்கொள்ளப் பொலீஸாரும் ஒத்துழைப்பதென இச்சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

பொலீஸ் சிவில் நிர்வாகப் பிரதேசங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லையென விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கிருசன் தெரிவித்தார். இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியது பொலீஸாரின் பொறுப்பு எனவும், அவர்களுடைய கடமையின் போது விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு தொடர்ந்து வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

மூதூர், கிண்ணியா போன்ற இடங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் போன்று இந்த மாவட்டங்களில் இடம்பெற ஒருபோதும் அனுமதிக்கமாட்டோமெனவும் கிருசன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ் - முஸ்லிம் நல்லுறவு வலுப்பெற்று சுமுகமான சூழ்நிலை தொடர்வதை இருதரப்பும் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிய ஐ.எம். இப்ராகிம் கருத்துத் தெரிவிக்கையில், "அம்பாறை மாவட்டம் முழுவதும் இன உறவைப் பேணுவதிலும், சிவில் நிர்வாகத்தை மிகச்சிறப்பாகக் கொண்டு நடத்துவதிலும் மூன்று தரப்பும இணைந்து செயற்படவிருப்பதாகவும் கடந்த கால நிகழ்வுகளை மீட்டுப்பார்த்து அதற்கேற்றவாறு இன உறவைச் சிறந்தமுறையில் பேண உறுதிகொண்டிருப்பதாகவும் கூறினார்.

# மக்கள் முகம்



அகில இலங்கை ரீதியில் திருகோணமலையில் நடத்தப்பட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் 7வயதுச் சிறுவர்கள் பிரிவில் மோ.ஆகாஷன் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். அத்துடன், இவர் வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் 9வயதுச் சிறுவர்கள் பிரிவில் சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் யாழ்.மத்திய கல்லூரியின் தரம் ஒன்று மாணவனும் ஆவார். (எ)

★ ★ ★



சாவகச்சேரி, கல்வயலைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கால்நடை போதனாசிரியர் ஆர்.வீ.கந்தசுவாமி, யாழ். நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் மாவட்ட சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தென்மராட்சி ஓய்வூதியர் சங்க ஆயுட்கால உறுப்பினரும் நல்லூர் பஜனைக் குழுவின் உறுப்பினரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் ஆயுட்கால அங்கத்தவரும், யாழ்.ப.நோ.கூ.சங்க பொதுச் சபை மற்றும் உபசபை உறுப்பினரும் ஆவார். (எ)

★ ★ ★



தாளையடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கிராம அலுவலரும், தாளையடி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவரும், வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தாளையடிக் கிளைக்குழுத் தலைவருமான மரியாம்பிள்ளை யோசேப் 05.12.2003 அன்று மாவட்ட சமாதான நீதவானாக யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.(எ)

★ ★ ★



தபால் திணைக்களம் உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்திய சிறந்த தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தர் தெரிவில், வடமாகாணத்தில் சிறந்த தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தராக யாழ்.பிரதம தபாலகத்தில் கடமையாற்றும் கனகரத்தினம் உருத்திரேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு அஞ்சல் மா அதிபதியினால் இதற்கான பணப்பரிசு அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டது. இவர் யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவருமாவார். (எ-135)

★ ★ ★



புலோலி குரும்பசிட்டியைச் சேர்ந்தவரும், திருகோணமலை ரயில் நிலையத்தின் பிரதான அதிபராக பணியாற்றிவருபவருமான இராசையா பூரணச்சந்திரன் திருகோணமலை நீதிவான் எஸ்.தியாகேந்திரன் முன்னிலையில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் புலோலி பல நோ. கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், நெறியாளராகவும், குரும்பசிட்டி சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம் என்பவற்றின் தலைவராகவும் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். சிறந்த சமூக சேவையாளரான இவர், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவருமாவார். (எ)

★ ★ ★



தெல்லிப்பழை விழிசிட்டியைச் சேர்ந்த செல்வி லதாங்கி மகாலிங்கசிவம் தேசிய இளைஞர் சேவை மன்றம் அகில இலங்கை ரீதியில் நடத்திய சாஸ்திரிய இசைப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

இவர் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறையிலே தமிழைச் சிறப்புப்பாடமாகக் கற்று முதற்பிரிவிலே தேறியவர் எனபதும் குறிப்பிடத்தக்கது. விமலா நாகேஸ்வரனின் மாணவியான இவர், முன்னரும் பல போட்டிகளில் முதற்பரிசாகத் தங்கப் பதக்கம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ ★ ★



அலுக்கை, அளவெட்டியைச் சொந்த இடமாகவும் யாழ். குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு அலெக்ஸ் அமலரட்ணம் 01.12.2003 அன்று யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக யாழ்.மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கொழும்பு சென்.அன்ரனிஸ் கல்லூரியின் பழைய மாணவனும் நல்லூர் ப.நோ.கூ.ச. முன்னாள் பணியாளரும் யாழ்.புனித வின்சென்டிபோல மத்திய சபை, யாழ்.போதனா வைத்தியசாலைச் சிற்றாலயப் பிறரன்புப் பணிச்சபை ஆகியவற்றின் தலைவரும் யாழ்.ப.நோ. கூ.ச. கிளைக் குழு உறுப்பினரும், யாழ்.கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் உப செயலாளரும், சிறந்த மனிதநேயச் சமய சமூகப் பணியாளரும் ஆவார்.

# மதுரங்குளிப் பகுதிக்கு மேலதிக பொலீஸ், இராணுவப் பாதுகாப்பு

## மோதல் சம்பவங்களை அடுத்து நடவடிக்கை

புத்தளம்,ஜன.17

புத்தளம், மதுரங்குளிப் பகுதியில் கடந்த புதனன்று இரு சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக வாகன சுத்திகரிப்பு (சேர்விஸ் ஸ்டேஷன்) நிலையமொன்றும், பயணிகள் வான் ஒன்றும் சேதமாக்கப்பட்டன. இதனால், எழுந்த பதற்றத்தை அடுத்து மேலதிக இராணுவ, பொலீஸ் பாதுகாப்பு அப்பகுதிக்கு வழங்கப்பட்டது.

இரு சமூகங்களின் ஆட்டோசாரதிகளுக்கிடையே நீண்டநாள் நிலவிவந்த பகைமையே இம்மோதலுக்குக் காரணமாகும். கடயாமோட்டை என்னுமிடத்திலுள்ள சேர்விஸ் நிலையமே தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, கந்தத் தொடலா என்னும் மீனவக் கிராமத்திற்குப் பயணிகளை ஏற்றிச்செல்லும் வான் ஒன்று தாக்குதலுக்குள்ளானது. மதுரங்குளி நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடுமாறு சில இளைஞர்கள் கோரியபோதும் அது நடைபெறவில்லை.

இச்சம்பவங்களையடுத்து, மாகாண அமைச்சர் எம்.எச்.எம்.நவவி ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டதையடுத்து மேலதிக பொலீஸாரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டு மதுரங்குளிப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

## பொங்கல் விழா ஒத்திவைப்பு

வலிகாமம்.தெற்கு,ஜன.17

இந்து சமய கலாசார விவகார அமைச்சினால் நாளை ஞாயிற்றுக் கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்படவிருந்த பொங்கல் விழா எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் ஒன்பது மணிக்கு சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் பொங்கல் விழா தொடர்பான விசேட பூசைகள் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து பகல் 12மணிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

(எ-152)

# இறப்பதற்குக் கூட.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படும்.

**கேள்வி:** இனிவரும் தேர்தல்களில் வாக்குச்சாவடிகளில் இடம்பெறும் எந்த விதமான நிகழ்வுகள் காரணமாக வாக்களிப்பை இரத்துச் செய்யநேரிடும்?

**பதில்:** நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டத்தின்படி, குழப்பமானநிலை வாக்குச் சாவடியொன்றில் நிலவும் காரணத்தால் காலை 7.00 மணிக்கு வாக்களிப்பை ஆரம்பிக்க முடியாது போதல், மாலை நான்கு மணிவரை வாக்களிப்பை தொடரமுடியாது போதல மற்றும் குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்தின் வாக்குப் பெட்டியை, வாக்குகளை எண்ணுவதற்குப் பொறுப்பான அதிகாரியிடம் ஒப்படைக்க முடியாது போதல் ஆகிய சந்தர்ப்பங்களில் அவ் வாக்குச் சாவடியில் வாக்களிப்பு இரத்துச் செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்படும் மேலும் ஆறுவகையான சந்தர்ப்பங்களின்போது தேர்தல் வாக்களிப்பை இரத்துச் செய்யமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. ஏதாவதொரு வாக்குச் சாவடியில் சிரேஷ்ட உத்தியோகத்தரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்படும் காரணத்தால் தேர்தலை சட்டப்படி நடத்த முடியாது போகுமானால் -

2. வாக்குச் சாவடியொன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுமிடத்து அல்லது அவர்களை அவ்விடத்திலிருந்து விரட்டிவிடும் பட்சத்தில் -

3. வாக்குச் சாவடியொன்றுக்கு வாக்குச் சாவடி ஊழியர்கள் சமூகமளிப்பது தடுக்கப்படும் பட்சத்தில் அல்லது அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் -

4. குழப்பமொன்று ஏற்படுத்தப்படுவதால் வாக்களிப்பை முறைப்படி நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்படுமிடத்தில் -

5. பலாத்காரமான வகையில் வாக்குப் பெட்டிக்குள் வாக்குச் சீட்டுக்களை இடுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் -

வாக்குச் சாவடியொன்றில் நியாயமான விதத்தில் இரகசியத் தனமையுடன் வாக்களிப்பு நடவடிக்கைகளை நடத்திச்செல்ல முடியாதிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தீர்மானிக்கும் பட்சத்தில் என்றவாறு மேற்கூறிய ஆறு சந்தர்ப்பங்களின் அடிப்படையில் அவ்வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு நடவடிக்கைகளை இரத்துச்செய்து மீண்டும் புதிதாக தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற விதிகளை ஏற்றுக் கொள்வதாக தேர்தல் ஆணையாளா, நீதிமன்றம் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகிய தரப்புக்கள் ஒப்புக் கொண்டுள்ளன. இந்த அடிப்படைகளுக கமையவே எதிர்வரும் தேர்தல்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேற்குறிப்பிட்ட காரணங்களால் இரத்துச் செய்யப்படும் வாக்களிப்பு, சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையம் உள்ளடக்கப்பட்டுள்ள தொகுதியில் அமைந்துள்ள வேறொரு வாக்களிப்பு நிலையத்தில் இரத்துச்செய்யப்பட்ட வாக்களிப்புக்கான விசாரணைகள் மேற கொள்ளப்படும் தினத்திலிருந்து ஏழு நாள்கள் கடந்த வேறொரு தினத்தன்று நடததப்படல் வேண்டும். அவ்விதம் மறு வாக்களிப்பு நடத்தப்படவுள்ள திகதியைத் தீமானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கே வழங்கப் பட்டுள்ளது.

**கேள்வி:-** அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் 27(2) பிரிவின் பிரகாரம் சேவையிலிருந்து இளைப பாறுவதற்கான தங்களது உரிமை மீறப்பட்டுள்ளமையால் சேவையிலிருந்து இளைப்பாற அனுமதியளிக்குமாறு கோரித் தாங்கள் உயர்நீதிமன்றத்தில் உரிமைமீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தீகள். அது தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் குறித்து விளக்குவீர்களா?

**பதில்:** அச்சட்ட விதிகளின்படி தேர்தல் ஆணைக்குழு உருவாக்கப்படும் வரை தேர்தல் ஆணைக்குழுவுக்கான அதிகாரங்கள் தேர்தல் ஆணையாளருக்கே உருத்துடையவை எனவும் அவ்விதம் தேர்தல் ஆணைக்குழு உருவாக்கப்படும் வரை அவ்வதிகாரங்களை தேர்தல் ஆணையாளரே கையாளவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்விதம் தேர்தல் ஆணைக்குழு உருவாக்கப்பட்ட பினனர் தேர்தல் ஆணையாளரின் பதவிமுடிவுக்குக் கொண்டு வரப்படும் எனவும் அவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இவ்வித சட்ட விதிகளின்காரணமாக எனது கோரிக்கையை அனுமதிக்க முடியாதிருப்பதாக உயர் நதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

இருந்தபோதிலும், நான் இளைப் பாறும் வயதைக் கடந்து விட்டதால் கட்டாயமாக இளைப்பாற வேண்டிய தினத்தில் இளைப்பாறுவதற்கான ஒழுங் கொன்றை நீதிமன்றம் வகுத்தது. சட்டமா அதிபரின் தலையீட்டினால் அந்த நடவடிக்கை தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நான் எனது 60வயதைப் பூர்த்தி செய்த 2002 ஜனவரி 28ஆம் திகதி முதல் நான் சேவையிலிருந்து இளைப் பாறியதாகக் கருதப்படும். ஆனால், இத்தீர்மானம் நிபந்தனையொன்றின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட டுள்ளது. தேர்தல் ஆணைக்குழு உருவாக்கப்படும் வரையில் நான் எனது பதவியில் தொடர்ந்து சேவையாற்ற வேண்டுமென்பதே அந்நிபந்தனையாகும்

**இறக்கும் உரிமைகூட மறுப்பா?**

**கேள்வி:** அவ்வாறாயின் தேர்தல் ஆணைக்குழு உருவாக்கப்படும்வரை உங்களுக்கு இறக்கும் உரிமை கூட இல்லை என்றாகிறதா?

**பதில்:** (சிரித்துக்கொண்டே) இறப பதற்கு மட்டுமல்ல; நோய்வாய்ப் படவோ தப்பி ஓடிவிடவோ அல்லது சேவையைக் கைவிட்டுச் செல்லவோ எனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டிலுள்ள அதியுயர் நீதிஅமைப்பு நாட்டின் அரசமைப்பு அல்லவா? இறப்பதற்கோ, நோய்வாய்ப படவோ அல்லது சேவையைக் கைவிடுச்செல்லவோ சாதாரண பிரஜையொருவருக்கு உரிய உரிமை எனக்குக் கிடையாது. எனக்குரிய அந்த உரிமைகள் அரசமைப்பு ரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

**கேள்வி:** ஒருவேளை திடீரென்று நீங்கள் இறந்துவிட நேர்ந்தால் நிலைமை என்னவாகும்?

**பதில்:** அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அவ்வேளையில் அரசமைப்பு ரீதியான சிக்கல் உருவாகும். எவரை அப்பதவிக்கு நியமிப்பது; எந்தவித நடைமுறைகளை அனுசரித்து அந்நியமனத்தை வழங்குவது என்பன போன்ற வினாக்களுக்கோ அல்லது மீண்டும் ஒரு தேர்தல் ஆணையாளர் அல்லது பதில் தேர்தல் ஆணையாளர் ஒருவரை நியமிப்பதற்கோ ஆன எந்தவொரு ஏற்பாடு குறித்தும் அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தில் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு இயலாத உக்கிரமான சிக்கல் நிலை நாட்டில் உருவாகும். அவ் அரசமைப்புத் திருததத்தின்படி இந்த நாட்டின் கடைசித் தேர்தல் ஆணையாளர் நான் ஆகத் தான் இருப்பேன். நான் இந்த நாட்டின் கடைசித் தேர்தல் ஆணையாளராக அமைவதால் என்னை நீண்டதொரு காலம் சேவையாற்ற வைக்கும் தேவை இருப்பதை இவ் அரசியலமைப்பு மூலமான அதிகார ஏற்பாட்டில் காணக்கூடியதாகவுள்ளது. ☆

# ஓதல், ஓதுவித்தலில் சிறந்து செந்தண்மை பூண்ட அந்தணர்

ஆசார சீலராய், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய அறுவகைத் தொழில்களையும் சிரத்தையுடனும் கடமையுணர்ச்சியுடனும் புரிபவராய், செந்தண்மை பூண்ட அந்தணராய் சிறப்புகள் பல பெற்று வாழ்ந்தவர். 2003.11.17இல் அமரரான மயிலணி பிரம்மஸ்ரீ ச.வரதராஜேஸ்வரக்குருக்கள் அவர்கள் இற்றைக்குப் பல்லாண்டுகளுக்கு முன் தென்னிந்தியா கும்பகோணத்திலிருந்து மயிலணிக்கு வந்து குடியேறிய கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த இராமையர் என்பவரின் வழித் தோன்றலான அமரர் சர்வேஸ்வரக் குருக்கள தம்பதியருக்கு 1948-12-24 இல் இவர் மகனாகப் பிறந்தார். இவருடைய தாயார் கோப்பாயைச் சேர்ந்த மனோன்மணி அம்மா ஆவார்.

கல்லாமற் 'பாகம்' பட்ட குலவித்தையை உடுவில் சிதம்பரநாதக் குருககள், கோண்டாவில் நாராயண சாஸ்திரிகள், யாழ்ப்பாணம் சீதாராம சாஸதிரிகள், இணுவில் மகாதேவக் குருககள், மயிலணி சோமாஸ்கந்தக்குருககள் முதலியவர்களிடம் பெற்ற வேத சிவாகம அறிவு, கிரியைகளின் நோக்கங்கள், அர்த்தங்கள் சம்பந்தமான விளக்கங்கள், பல்வேறு ஆலயங்களிலே

**நீத்தார் நயப்புரை**

தந்தையார் சர்வேஸ்வரக் குருக்கள் செய்த சமயக் கிரியைகளிலே உதவியாளராகக் கலந்துகொண்டு பெற்ற பட்டறிவு போன்றவற்றால் முழுமையாக்கி, செம்மைப் படுத்தி, இந்நாட்டிற்கு குறிப்பிடத்தக்க சிவாச்சாரியார்களுள ஒருவராக இவர் திகழ்ந்தார். ஆலயத தர்மகர்த்தாக்கள், உபயகாரர் போன்றோர் அறிவும் அடக்கமும் எளிமையும் பொறுமையும் நிறைந்த இவரை அழைத்து கும்பாபிஷேகம், சங்காபிஷேகம், பிரம்மோற்சவம் முதலியவற்றைச் செய்விப்பதில் மகிழ்ச்சியும், திருப்தியும் அடைந்தனர். அந்தரங்க சுத்தியுடனும் பயபக்தியுடனும் ஆகம வழிநின்று இவர் செய்த கிரியைகள் காரணமாக பாராட்டுக்களும் கௌரவப் பட்டங்களும் இவரைத் தேடிவந்தன. சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளை



யார் தேவஸ்தானத்தினர் "வேத சிவாகம கிரியா சிரோமணி" பட்டத்தையும், அன்னங்கை சிவபூதராயர் தேவஸ்தானத்தினர் "கிரியா ரத்னா" பட்டத்தையும், பிரதிஷ்டா சிரோமணி நவாலி சாமி.விஸ்வநாதக்குருக்கள், "ஆகம கிரியா பூஷணம்" பட்டத்தையும், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் வேதாகம ஞானபாஸ்கரன் தா.மகாதேவக்குருக்கள் "சிவாகம கிரியா தத்வநிதி" பட்டத்தையும் வழங்கி இவரைக் கௌரவித்தனர்.

ஆலயங்களில், தமிழ்மொழிக்கும், பண்ணிசைக்கும் உயரிடம் கொடுப்பதில் என்றும் முன்நின்றவர் இவர். பரம்பரைப் பூசகராக இவர் பணியாற்றிய மயிலணி முருகன் தேவஸ்தானத்தில் திருமுறைகளை உரிய பண்ணில் தானே பாடியும் ஏனைய வித்துவான்களைக் கொண்டு பாடுவித்தும் வந்தார். ஒவ்வொரு மாதக் கார்த்திகை நன்னாளில், முருகப்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளை நிகழ்த்திய பின்னர், அடியார்களுடன் சேர்ந்து கந்தரனுபூதியைப் பாராயணஞ் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

கந்தஷஷ்டி விழாக்காலத்தில் தவறாது இடம்பெற்ற கந்தபுராண (யுத்த காண்டம்) படனம், மார்கழித் திங்களில் நடைபெற்ற திருவாசக முற்றோதல் போன்றவற்றில் பக்தி சிரத்தையுடன் இவர் கலந்து கொணடமை குறிப்பிடத்தக்கது. கோப்பாய் சிவம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியாகும் "விவித வித்யா" என்ற காலாண்டிதழில் "திருமுறைச் செல்வம்" என்ற கட்டுரைத் தொடரை இவர் ஆரம்பித்திருந்தார்.

தன் குலதெய்வமாகிய மயிலணி முருகப்பெருமானின் கோவிற் திருப்பணிகளை விரைவிலே நிறைவுசெய்து இனிவரும் தாரண ஆண்டிலே மஹா கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்ற இவருடைய அளப்பிலா ஆவல் நிறைவேறுவதற்குள் திருமுருகன் தன் திருவடிகளில் இவரை இளைப்பாறச் செய்துவிட்டான்.

தேவரகசியத்தை விண்டுரைக்க யார்தான் வல்லார்?

**சி.சிவசரவணபவன்**
M.A.

ஒழுங்காக வாரிமுடித்த குடுமி; நெற்றியிலே திரிபுண்டரமாகத் தரித்த திருநீற்றின் மத்தியில் சந்தன வட்டத்திற்குள் திகழும் குங்குமத் திலகம்; அகன்ற மார்பை அணிசெய்யும் முப்புரிநூல், உருத்திராக்க மாலை இடுப்பிலே இருந்து மேற்பாதம் வரை பரவும் பஞ்சகச்ச ஆடை - போன்றவை இணைந்த புக்திக்கோலத்தில் சமஸ்கிருத ஸ்தோத்திரங்களையும், தேவார திருவாசகங்களையும் ஸ்ருதி சுத்தமாக பக்தி மணம் கமழ தன் இனிய மென் குரலில் இவர் இசைத்தது என்றும் இந்த மண்ணில் அவரது நினைவை சான்றுபடுத்தும் - நினைவூட்டும் எனலாம். ★

## மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் மீது காவல்துறை நடவடிக்கை

வடமராட்சிகிழக்கு,ஜன.17

ஏ - 9 வீதியில் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் மீதும், மிதிபலகையில் நின்று பயணம் செய்வோர் மீதும் தமிழீழ காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதுவரை மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தி வந்த சாரதிகள் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏ - 9 வீதியில் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவதினாலும், மிதி பலகையில் பயணம் மேற்கொள்வதினாலும் விபத்துக்கள் அதிகரித்ததை அடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(எ-182)


# சேவை நலன் பாராட்டு



செல்வி
போஷேந்திராதேவி கந்தசாமி
B.A.(HONS) P.G.D.E S.L.P.S Gr. I

கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி
28வருடங்களைப் பூர்த்தி செய்த
செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி
அவர்கள் எமது கல்லூரியில் 12ஆண்டுகள்
அதிபராக, கொத்தணி அதிபராக சிறந்த சேவையாற்றி
இன்று (17-01-2004) இல் ஓய்வு பெறுகின்றார்.

எமது அன்பிற்கினிய அதிபரின் சேவையைப் பாராட்டுவதுடன் அவர் என்றும் சீரும் சிறப்பும் பெற்றுநீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, பண்டத்தரிப்பு.

பிரதி அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள்.



# புதிய உயர் கணித நிறுவகம்

315/1, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

**பொங்கல் பரிசு**

தை பிறந்தால் வழிபிறக்கும்

**G.C.E (A/L) 2006**

கணித, விஞ்ஞான வகுப்புக்கள்

ஆரம்பம்: இன்று 2004.01.17 பி.ப. 4.00 மணி

அர்ப்பணிப்புணர்வு மிக்க விசேட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்குழாம்

- பௌதிகவியல்: Mr.K.சிவலிங்கம் B.Sc. (Hons.).
- இரசாயனவியல்: Mr.A.லோகநாதன் B.Sc.Dip.in Ed.
- உயிரியல்: Mr.V.A.ஞானேந்திரன் (B.Sc.Dip.in.Ed.)
- இணைந்தகணிதம்: Mr.S.கிருபாகரன் B.Sc.Sp.Tr. (maths) Dip.in. E d.P.D.C.(SNU)





இலங்கை வாழ்மக்களுக்கு ஒரு நற்செய்தி!

# யாழ்ப்பாணம் இயேசு அழைக்கிறார் பிரார்த்தனைத் திருவிழா

நாள் : 2004 பெப்ரவரி 25 முதல் 29 வரை
நேரம் : தினமும் மாலை 4.30 மணிக்கு
இடம் : செல்லமுத்து மைதானம், மானிப்பாய், யாழ்ப்பாணம்.

சாம், ஷேரன், ஸ்வீட்டியின் பாடல்களை பாடி மகிழ்விப்பார்கள்.

அருளுரை, பிரார்த்தனை ஏறெடுப்பவர்கள் : Dr.டி.ஜி.எஸ்.தினகரன், Dr.பால் தினகரன்

சகோதரி ஸ்டெல்லா தினகரன், சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன்

அனைவரும் பங்குபெற்று ஆசீர்வாதம்பெற உங்களை அன்போடு அழைக்கிறோம்!

மேலும் விபரங்களுக்கு: யாழ்ப்பாணம் பிரார்த்தனைத் திருவிழா அலுவலகம். சங்கரப்பிள்ளை றோட், மானிப்பாய், யாழ்ப்பாணம். ☎ 021-222-3204, 021-222-2659.

ராஜ் டிவியில் "பிரார்த்தனை நேரம்" நிகழ்ச்சி இரவு 9.00 மணிக்கு

இலங்கை வானொலியில் இயேசு அழைக்கிறார் நிகழ்ச்சி வாரந்தோறும் செவ்வாய்கிழமை இரவு 8.30 முதல் 9 மணிவரை ஒலிபரப்பாகிறது.
கேட்டு மகிழுங்கள்!

ஜெப உதவிக்கு தொடர்புகொள்ள
இயேசு அழைக்கிறார்
சர்வதேச அலுவலகம், கொழும்பு.
15/1B, ஜோசப் லேன், பம்பலபிட்டிய,
கொழும்பு-4. ☎ 01-2502520 (Admin.)
01-2555400 (Prayers)



# பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி இந்திய நாடாளுமன்றம் கலைப்பு?

## தேர்தல் ஆணையாளர் நியமனத்தில் இழுபறி

இந்திய நாடாளுமன்றத்தைக் கலைக்க பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். அனேகமாக பெப்ரவரி 5ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று பாரதீய ஜனதா வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய அமைச்சரவை நேற்றுமுன்தினம் கூடி இது குறித்து ஆலோசனை நடத்தியது. இதில் நாடாளுமன்றத்தைக் கலைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும் விரிவான ஆலோசனை நடத்திய பிறகே நாடாளுமன்றத்தைக் கலைப்பது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார். இந்த நிலையில் தேர்தலை எதிர்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையகமும் தயாராகிவருகிறது. இதற்காக அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகளையும் தேர்தல் ஆணையகம் தொடர்புகொண்டுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையாளா லிங்டோ அடுத்த மாதம் 6ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளார். இதனால் அடுத்த இடத்தில் இருக்கும் தேர்தல் அதிகாரி கிருஷ்ணமூர்த்தி ஒவ்வொரு மாநிலமாக சென்று ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார். நேற்றுமுன்தினம் அவர் கேரளா சென்று தேர்தல் ஏற்பாடுகளைக் கவனித்தார்.

கொச்சி அருகே ஆழுவா என்ற இடத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நாடாளுமன்றம் இன்னும் கலைக்கபபடவில்லை. அது கலைக்கப்பட்டதும் தேர்தல் திகதி அறிவிக்கப்படும்.

முதலில் நாடாளுமன்ற கலைப்பு தகவல் வரட்டும் அதன் பிறகு நாங்கள் தேர்தல் திகதியைச் சொல்கின்றோம். தற்போது வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணி வேகமாக நடந்து வருகிறது.

தேர்தலை எந்த நேரத்திலும் வேண்டுமானாலும் நடத்த நாங்கள் தயாராக இருக்கின்றோம். நாடாளுமன்றக் கலைப்பு அறிவிப்பு வந்ததும் எங்கள் வேலை சூடுபிடிக்கும்.




- இவ்வாறு தேர்தல் அதிகாரி கிருஷ்ணமூர்த்தி கூறினார்.

லிங்டோ 6ஆம் திகதி பதவியில் இருந்து ஓய்வுபெற்றதும் 7ஆம் திகதி கிருஷ்ணமூர்த்தி புதிய தலைமை தேர்தல் அதிகாரியாக பதவி ஏற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, முன்னாள் அமைச்சரவைச் செயலாள் டி.ஆர்.பிரசாத்தை தலைமைத் தேர்தல் ஆணையாளராக்க துணைப் பிரதமர் அத்வானி, நிதி அமைச்சர் ஜஸ்வந்த் சிங், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் வர்த்தகத்துறை செயலாளர் தீபக் சட்டர்ஜியை அந்தப் பதவிக்கு கொண்டுவர பா.ஜனதா மூத்த தலைவர்களில் சிலர் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் தனக்குத் தலைமைத் தேர்தல் அதிகாரி பதவி தராமல் வேறு துறையில் இருந்து ஆள்களை கொண்டு வந்தால் தேர்தல் அதிகாரி பொறுப்பை ராஜினாமா செய்யும் முடிவில் கிருஷ்ணமூர்த்தி இருக்கிறார் என்று கூறப்படுகிறது. (ஒ)




# ராஜீவ் காந்தியின் பாணியிலேயே சோனியாவின் தேர்தல் பிரசாரம்

இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் திகதி இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில் காங்கிரஸ் தலைவி சோனியா இப்போதே தேர்தல் பிரசாரத்தை தொடங்கிவிட்டார்.

உத்தரப் பிரதேசத்தில் சோனியா 3 நாள்களாக சூறாவளி சுற்றுப் பயணம் செய்து பிரசாரம் செய்தார். தேர்தல் பிரசாரத்தில் முன்பு அவரது கணவர் ராஜீவ் காந்தி பாணியையே சோனியாவும் கடைப்பிடிக்கிறார்.

முன்பு ராஜீவ்காந்தி உத்தரப் பிரதேசத்தில் புலந்த்சாகர் பகுதியில் இருந்துதான் பிரசாரத்தை தொடங்கினார். அதுபோல் சோனியாவும் புலந்த்சாகர் பகுதியில் இருந்தே பிரசாரத்தைத் தொடங்கியுள்ளார். மிகவும் குறுகலான சாலைகள் உள்ள கிராமத்துக்கும் அவர் காரில் சென்று கிராம மக்களை சந்தித்து அவர்களுடன் கைகுலுக்கினார். அவரது கார் சென்ற போது சாலைகளில் புழுதி கிளம்பியது. அதையும் பொருட்படுத்தாமல் சோனியா கீழே இறங்கிச் சென்று கிராமமக்களின் மாலைகளை ஏற்றுக்கொண்டார். சில இடங்களில் பொது மக்களுடன் சேர்ந்து தேநீர் அருந்தினார்.

பாதுகாப்புப் பற்றி அவர் கவலைப் படாமல் சென்றார். இது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு சிக்கலை ஏற்படுத்தியது. (ஒ)

# தொலைபேசி மூலம் சோனியா கருணாநிதிக்குப் பொங்கல் வாழ்த்து

தி.மு.க. தலைவர் கருணாநிதியை காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பொங்கல் வாழ்த்துத் தெரிவித்தார். இருவரும் வரும் நாடாளுமன்றத் தேர்தல் வியூகம் வகுப்பது குறித்தும் தொகுதிப் பங்கீடு குறித்தும் பேச்சு நடத்தினர். இத்தகவலை தி.மு.க. செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணியைவிட்டு தி.மு.க. வெளியேறிய பின் இரண்டாவது முறையாக தொலைபேசியில் கருணாநிதியை சோனியா தொடர்பு கொண்டுள்ளார். கடந்த மாதம் 30ஆம் திகதி தொடர்புகொண்ட சோனியா காந்தி 24 ஆண்டுகளுக்குப் பிறகு தி.மு.கவுடன் கூட்டணி அமைப்பது குறித்துப் பேச்சு நடத்தினார்.

அதன்பிறகு சோனியாவின் தூதுவராக மூத்த காங்கிரஸ் தலைவர் மன்மோகன் சிங் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்தார். மதிய உணவு உபசரிப்புடன் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக நடந்த இந்தச் சந்திப்பில் கூட்டணி அமைப்பது என முடிவாகியது.

இந்த நிலையில் பொங்கல் தினத்தன்று நடந்த தொலைபேசி உரையாடலிலும் கூட்டணி அமைப்பது மற்றும் தேர்தல் வியூகம் வகுப்பது குறித்து கருணாநிதியும் சோனியாவும் பேசினர். மேலும் தமிழர் திருநாளான பொங்கல் நாளில் கருணாநிதிக்கு சோனியா பொங்கல் வாழ்த்துத் தெரிவித்ததாகவும் தி.மு.க. செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. (ஒ)




'பெண்ணை பார்த்து ஏன் பயப்படுகிறீர்கள்?' என்று சோனியா கேட்கிறார்! ஒரு முறை ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்ததிலிருந்தே அந்த பயம் வந்துவிட்டதுன்னு உண்மையைச் சொல்லிடலாமா... தலைவரே!

# தரக்குறைவான விமர்சனம்; பா.ஜ.கவினருக்குக் கண்டனம்

காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியை தரக்குறைவாக விமர்சித்ததற்காக பா.ஜ.க. தலைவர்கள் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் எஸ்.ஜெய்ப்பால் ரெட்டி கூறினார்.

பா.ஜ.க. பொதுச்செயலர் பிரமோத் மஹாஜன், பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர் சோனியா காந்தியைத் தரக்குறைவாகத் தாக்கிப் பேசி வருகின்றனர் என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாஜ்பாய் கடந்த 5 ஆண்டுகளாகப் பிரதமர் பதவியில் இருந்துவரும் போது வெறும் 5 மாநிலங்களில் மட்டுமே பா.ஜ.க. வெற்றிபெற்றுள்ளது.

கூட்டணிக்காகக் காங்கிரஸ் கட்சி முயற்சிப்பது புதிதான ஒன்று அல்ல. காங்கிரஸ் கட்சி பல ஆண்டுகளாக கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு வருகிறது. நாடு முழுவதும் கூட்டணி அமைக்கும் பணிகள் கிட்டத்தட்ட முடியும் தறுவாயில் உள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை தி.மு.கவுடன் கூட்டணி அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதுபோல மகாராஷ்டிரத்திலும் கூட்டணி அமைக்கவுள்ளோம்.

பீஹாரில் லாலு பிரசாத் யாதவுடன் கூட்டணி வைத்துள்ளோம். சரத் பவாரும் காங்கிரஸ் கூட்டணியில் இணைந்துள்ளார் - என்றார் அவர்.

# தொகுதிப் பங்கீட்டில் சவால்கள்; சமாளிப்பாரா கருணாநிதி?

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவும் காங்கிரஸும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. ஏறக்குறைய தமிழகத்தில் தி.மு.க.தலைமையிலான கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் அடையாளம் காணப்பட்டுவிட்டன. இந்த நிலையில் கூட்டணிக் கட்சிகளுக்குத் தொகுதிகளைப் பிரித்துக் கொடுப்பதில் தி.மு.க.தலைவர் மு. கருணாநிதி சவாலை எதிர்கொண்டுள்ளார்.

பா.ம.க., ம.தி.மு.க., வலது கம்யூனிஸ்ட், இடது கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளும் இந்தக்கூட்டணியில் சேர்ந்துள்ளன. தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் இடையே தொகுதிப்பங்கீடு குறித்து இப்போது பேச்சுக்கள் தொடங்கி இடம்பெற்று வருகின்றன.

கடந்த முறை இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. 18 தொகுதிகளில் போட்டியிட்டது. தற்போது அந்தக் கட்சி கூட்டுக் கட்சிகளுக்கு பிரித்துக் கொடுத்தவை போக 15 தொகுதிகளில் போட்டியிடலாம் என்று கூறப்படுகிறது.

இந்தத்தடவை கோபி, பெரியகுளம், ராமநாதபுரம், சேலம், புதுக்கோட்டை, திருச்சி, திருநெல்வேலி, கரூர், பெரம்பலூர், திருப்பத்தூர், ஸ்ரீபெரும்புதூர், ராசிபுரம், வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை, ஆகிய தொகுதிகளில் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென் சென்னை, மத்திய சென்னை, வடசென்னை உள்ளிட்ட பல தொகுதிகளில் கடந்த முறை தி.மு.க. வென்றுள்ளதால் அந்தத் தொகுதிகளை மீண்டும் தி.மு.க. தன்னிடம் வைத்துக்கொள்ள விரும்புகிறது.

அ.தி.மு.கவுக்கு வெற்றிவாய்ப்புள்ள பெரியகுளம், கோபி ஆகிய இரு தொகுதிகளையும் கூட்டணிக் கட்சிகள் எதுவும் கேட்காததால் அவ்விரு தொகுதிகளிலும் அ.தி.மு.கவை



எதிர்த்து தி.மு.க. போட்டியிடுவது உறுதியாகி உள்ளது. இதேவேளை தி.மு.க. விரும்பும் திருச்சி தொகுதியை இடது கம்யூனிஸ்ட் கேட்கிறது.

காங்கிரஸ் 15 தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளது. ஆனால் அக்கட்சிக்கு 12 தொகுதிகள் ஒதுக்கப்படலாம் என்று தெரிகிறது. தமிழகத்தில் நாகர்கோவில், திருச்செந்தூர், தென்காசி, சிவகங்கை, திண்டுக்கல், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, வந்தவாசி, மததிய சென்னை, ராசிபுரம், கிருஷ்ணகிரி, நீலகிரி, பழனி, திண்டிவனம், பாண்டிச்சேரி ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி போட்டியிட விரும்புகிறது. இதேவேளை, காங்கிரஸ் கேட்கும் மதுரை தொகுதியை இடது கம்யூனிஸ்ட்டும் கேட்கிறது. மதுரையில் தற்போது இடது கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மோகன் பொன்னுசாமி எம்.பியாக இருக்கிறார். எனவே இத்தொகுதியை காங்கிரஸுக்கு விட்டுக் கொடுக்க இடது கம்யூனிஸ்ட் மறுக்கிறது.

பாண்டிச்சேரியை பா.ம.க. கேட்கிறது. ஆனால் அங்கு காங்கிரஸை சேர்ந்த பரூக் மரைக்காயர் எம்.பி. யாக இருப்பதால் அத்தொகுதியை விட்டுக்கொடுக்க காங்கிரஸ் மறுக்கிறது.

ம.தி.மு.க. சிவகாசி, பழனி, திருச்செங்கோடு, பொள்ளாச்சி, திண்டிவனம் ஆகிய தொகுதிகளைக் கேட்கிறது. இவற்றில் சிவகாசியில் வைகோ போட்டியிடுவார். அவர் தற்போது சிவகாசி எம்.பியாக உள்ளார்.

ம.தி.மு.க. கேட்கும் திண்டிவனம் தொகுதி மீது பா.ம.கவும் கண் வைத்துள்ளது.

பா.ம.க. செங்கல்பட்டு, வந்தவாசி, கடலூர், திண்டிவனம், பாண்டிச்சேரி, தர்மபுரி ஆகிய தொகுதிகளைக் கேட்கிறது.

வடசென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய 4 தொகுதிகளை இடது கம்யூனிஸ்ட் கேட்கிறது. இதில் 2 தொகுதிகள் இடது கம்யூனிஸ்ட்டுக்கு ஒதுக்கப்படலாம். வலது கம்யூனிஸ்ட் கட்சி நாகப்பட்டினம், கோவை ஆகிய தொகுதிகளில் போட்டியிடலாம்.

இப்போது கூட்டணியில் சேர்ந்துள்ள கட்சிகளைத் தவிர தேர்தலில் முஸ்லிம்கள் போன்ற சிறிய கட்சிகள் கூட்டணியில் இணைய வாய்ப்புகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை வழக்கம் போல, 'தொகுதி தராவிட்டாலும் என் இதயத்தில் அவர்களுக்கு இடம் தந்திருக்கிறேன்' என்று கூறி கருணாநிதி சமாளித்து விடுவார். ஆனால் பெரிய கட்சிகளின் நிலை அப்படியல்ல. அவை தமக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ள தொகுதிகளைப் பெற்று விட முயற்சிக்கின்றன. இதேவேளை, அதிக தொகுதிகளை அள்ளிக்கொடுத்துவிட்டால் தி.மு.கவின் நிலை பரிதாபமாகிவிடும் என்பதும் கருணாநிதிக்குத் தெரியும். அதிலும் தேர்தலின் பின்னர் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத போது, தன் வசம் அதிக எம்.பிக்கள் இருந்தால் மட்டுமே மத்தியில் மதிப்பிருக்கும் என்ற பாலபாடத்தை பழுத்த அரசியல்வாதி கருணாநிதி புரிந்துகொள்ளாமலும் இல்லை.

அதேசமயம், தொகுதிப்பங்கீட்டில் கூட்டணிக் கட்சிகளைத் திருப்திப்படுத்தாது விட்டால், தேர்தலில் கூட்டணிக்குள்ளேயே குத்துவெட்டு ஏற்படும். அது எதிர்த்தரப்புக்கு சாதகமாகிவிடும் என்ற ஆபத்தும் உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் கருணாநிதிக்குப் புதிதல்ல. அவரது பாசறையில் வளர்ந்த வைகோவையும், 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' முடிவெடுக்கும் டாக்டர் ராமதாஸையும், எப்படியாவது கூட்டணியில் இடம்பெறவேண்டிய நிலையில் உள்ள கம்யூனிஸ்டுகளையும் சமாளிப்பது கருணாநிதிக்கு பெரிய விஷயமே அல்ல. இவ்வளவு காலம் எதிரியாக இருந்து இப்போது கூடிக் குலாவும் காங்கிரஸ்காரர்களே கருணாநிதிக்கு தலைவலியைத் தொகுதிப் பங்கீட்டில் தரப்போகிறார்கள் என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

- பாமரன் -

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

0111WP H.K தொடர்இலக்க முடைய TATA இனக் கென்ரர் - 450 சிவப்பு நிறம் 15000Km ஓடிய நிலையில் விற்பனைக்குண்டு. (மேற்படி வாகனம் பினான்ஸ் அடிப்படையிலானது) தொடர்புகளுக்கு 265/½, புளூமண்டஸ்ரீட், கொழும்பு-13. T.P.:011 385530, 0777 666 704. (27190)

நல்ல நிலையிலுள்ள Yamaha V50 நியூஸ்மேற் சொற்பகாலம் பாவித்த மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: காலை10 மணிக்குப் பின், இ.ஜெயபாலசர்மா, இல.17½, நல்லூர் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். (27213)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய ஒரு வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இலக்கம் 67/2 குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 0776 107967 (27231)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், இணுவில் வீதியில் இருவீதி முகப்புக்களைக் கொண்ட குடியிருப்புக்கும், வர்த்தகப் பாவனைகளும் ஏற்ற 11½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 021-222 6970. (27191)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher மற்றும் Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு),19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27217)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27218)

## வீடு வாடகைக்கு/ விற்பனைக்கு

நல்லூர், கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் 5 அறைகள், 3 குளியலறைகள், வாகனங்கள் தரிப்பதற்கான வசதியுடன் நவீன பெரிய வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்குண்டு. தொடர்பு: 2 - 386699 (சி-32786)

## ENGLISH CLASSES

Toefl Spoken English தரம் 6 இலிருந்து O/L A,B,C பெறுபேறடையவும் 2004 A/L, G.A.Q. துரிதமாக ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். தொடர்பு:- இல.85, சிவன் கோவிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி.(27158)

Spoken English மாணவர்களுக்கும்,வளர்ந்தவர்களுக்கும் O/L, A/L, பல்கலைக்கழக மாணவர்கள் நல்ல பெறுபேறு அடையக்கூடியதாக அவரவருக்கு வசதியான நேரத்தில் இலகுவான முறையில் ஆங்கிலம் கற்பிக்கப்படும் ஓய்வுபெற்ற ஆசிரியரினால். 33, பலாலி வீதி, இலுப்பையடிச்சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம். (27208)

## வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டச்சு சனி ஞாயிறு வகுப்புகள் 18-01-2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்பு: 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.(27228)

## தபால்மூலம் சிங்களம்

இப்போது நீங்களும் வீட்டில் இருந்தபடியே சிங்கள மொழியைப் படித்து எழுத/வாசிக்க/பேச தேர்ச்சி பெறலாம் வழமையான நேரடி வகுப்புகளுமுண்டு. விவரங்களுக்கு: ஆசிரியர் திரு.மல்வான, இலக்கம் 56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.(27099)

## திருமண சேவை

1971, அச்சுவினி, பாவம்18, P.R. உள்ள U.K. Engineer மணமகனுக்கு சுன்னாகம், கரவெட்டி, கல்விப்பங்காடைச் சேர்ந்த Dr. அல்லது Cima படித்த அழகான மணப்பெண் தேவை. படத்துடன் விண்ணப்பிக்கவும். துரை விமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். (27209)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 19.01.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டி பதிவு செய்யவும். பருத்தித்துறை கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27219)

## தவறிவிட்டது

சிறுவானொலிப்பெட்டி, கோவில் தேவைக்கான துணியிலான மாலை, பட்டுவேட்டி என்பன அடங்கிய கறுப்பு நிற பாடசாலைப்பை 15.01.2004 வியாழக்கிழமை ஓமந்தைச்சோதனைச் சாவடிக்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். கண்ணன் அம்மா, 646, K.K.S. வீதி, "பிரசாந்தி இல்லம்", நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். (27210)

## வீடு விற்பனைக்கு

கைதடிப் பிள்ளையார் கோயில் வீதியில் வைரவர் கோயிலுக்கு அருகில் 5 பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. நேரில் தொடர்புகொள்ளவும்.

**திருமதி T.சிவசம்பு,**
கைதடி தெற்கு, கைதடி.
T.P.:0777-459528.
(27176)(34)

## HAIR STYLE CAKE ICING

பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்
**19-01-2004**
**(திங்கள், புதன் 10a.m)**

**தூரிகை**
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.
(21-13-17)

# இளங்கலைஞர் மன்ற இசைவிழா

எதிர்வரும் பெப்ரவரி 21ஆம் திகதி ஆரம்பமாகும் இசை விழாவையொட்டி நடைபெறவுள்ள இசைப்போட்டி விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி ஜனவரி 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இசைவிழாவிற் கலந்துகொள்ள விரும்பும் கலைஞர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும்.

செயலாளர்,
*இளங்கலைஞர் மன்றம்.*

சட்டநாதர் வீதி,
நல்லூர்.
(27221)(21-17-13)

சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின்

## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

**திகதி: 06-02-2004 வெள்ளிக்கிழமை**
**இடம்: சாவல்கட்டு பாலர் பாடசாலை**
**நேரம்: 10மணிக்கு**

*அங்கத்தவர்களுக்கு நிகழ்ச்சிநிரல்கள் பின் அனுப்பி வைக்கப்படும்.*

16-01-2004 (27227)(21-17-13)
**ந.இலங்கேஸ்வரன்**
செயலாளர்.

# கண்ணீர் அஞ்சலி

## கார்த்திகேசு மதியழகன்



தோற்றம்
05-01-1965

மறைவு
09-01-2004

அவர்களின் திடீர் மறைவு எங்கள் கிராம மக்கள் அனைவரையும் தாங்கொண்ணாத துயரில் ஆழ்த்தியுள்ளது. மனிதகுல மாணிக்கமாம் மதியழகனின் இழப்பினால் துன்ப சாகரத்தில் மூழ்கி இருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*பழவத்தை, வத்தனை, மாலந்தெனி*
*வாழ் உறவினர்கள்.*

(27229) (21-13-17)

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு மதியழகன் (மதி)

பழவத்தை, வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வாழ்விடமாகவும் கொண்ட கார்த்திகேசு மதியழகன் 09-01-2004இல் டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தபாலதிபர் முருகுப்பிள்ளை கார்த்திகேசு-திருமதி கார்த்திகேசு மங்கையர்க்கரசி (டென்மார்க்) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், இன்பருட்டியைச் சேர்ந்த திரு. திருமதி வடிவேலு முத்துலட்சுமி தம்பதியரின் மருமகனும் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், அமலன், அஞ்சலி, ஆஷா ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் மனோகரன் (கனடா), திருமதி சிவசசன் சோதிமதி (கனடா), இளங்கோ (கனடா) ஆகியோரின் சகோதரனும் தி.சிவசசன், திருமதி மனோகரன் பகீரதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான வத்தனையூர் திரு.திருமதி முருகுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னர் கணபதிப்பிள்ளை மற்றும் திருமதி கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை ஆகியோரின் பேரனும் திரு. திருமதி தங்கவேலு நாகேஸ்வரி, சுப்பையா குழந்தைநாயகி, இராசையா பத்மராணி, சிவபாதம் தனபாக்கியம், இராமசந்திரன் சரோஜினிதேவி ஆகியோரின் மருமகனும், திரு.திருமதி பொன்னுத்துரை தெய்வநாயகி, தர்மலிங்கம் கோமதி, சோமசுந்தரம் மகேஸ்வரி, வைரமுத்து இந்திராணி (கனடா), திருநாவுக்கரசு தெய்வநாயகி (சுவிஸ்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-01-2004) சனிக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு அவரது டென்மார்க் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிரீட்றிக்சன் (Frederikshavn - Vej) மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**நாவலடி,** மு.தர்மலிங்கம் (சிறிய தந்தை)
**புலோலி மத்தி.** (27222)(21-17-13)

## பொன்னையா பத்மநாதன்

(முன்னாள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)

வண்ணார்பண்ணை, கலட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு, இராச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பத்மநாதன் அவர்கள் 14.01.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திருதிருமதி பொன்னையா - இராசம்மா ஆகியோரின் புதல்வரும் தியாகராஜா, காலஞ்சென்றவர்களான ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை மற்றும் இராசம்மா தம்பதிகளின் மருமகனும் மஞ்சுளா (ஜேர்மனி), கோமிலா (கனடா), சசிகலா (லண்டன்), கௌசலா (ஆசிரியை, யாழ்.கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை), தயாபரன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), ஜெயக்குமார்(கனடா), தர்மபாலா (லண்டன்), குகதாசன் (அரச ஒப்பந்தகாரர்), ராதை(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நேருகா, லக்ஷன், ஆரணி, அருண், ஆர்த்தி, நிரோஜன், மதுரன், ஆதவன், யோபிசுதன், அச்சுதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(18.01.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இராஜ வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (27215)(35-21-35-17-13)

தகவல்:
சி.குகதாசன்
(தாசன் - மருமகன்).

# ஒன்பதாம் வருட பிறந்தநாள் நினைவும் ஒன்பதாம் மாத நினைவஞ்சலியும்



செல்வி
## புஸ்பராஜா சபீனா
(சபிக்குட்டி)
மாணவி 4C
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

மலர்வு
17-01-1995

உதிர்வு
20-04-2003

*உன்னை நினைக்கையிலே உள்ளமே பதறுகிறதே*
*கண்ணீர்வற்றி கவலையும் பெரிதாகி*
*அன்னையும் நினைத்து ஏங்கித் தவிப்புடனே*
*பார்த்த இடம் எங்கும் பாசமுகமே தெரிகிறதே!*
*செல்லப் பேச்சுப் பேசி எம்மை மகிழ்வித்தாய்!*
*இன்று நீ போனதெங்கே எம்மை மறந்து?*
*கனிவான முகமே கண்முன் தோன்றி வந்து*
*நெஞ்சத்தை நிறைத்து நினைக்குது உன்னை!*

அம்மா, அப்பா,
அண்ணா, அக்காமார், தம்பி,
உறவினர்கள்

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(27226) (21-13-17)

புகழ் ஸ்ரோர்ஸ்
சுன்னாகம்

## பெண்கள் பாட மீண்டும் தடை!

ஆப்கானிஸ்தானில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பெண்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டு இருந்தது. அங்கு தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு பெண்களுக்கும் சமுதாயத்தில் முக்கிய இடம் அளிக்கப்பட்டுவருகிறது.

இந்த நிலையில், அங்குள்ள தொலைக்காட்சியில் ஆப்கானிஸ்தானின் பிரபல பாடகியும் நடிகையுமான சல்மாவின் இசை நிகழ்ச்சி ஒளிபரப்பட்டது. தொலைக்காட்சியில் ஒரு பெண் பாடகியின் முகத்தைக் காட்டியது 10 ஆண்டுகளில் இதுவே முதல் தடவை. இதற்கு முன் தொலைக்காட்சிகளில் பெண்களின் குரல் மட்டுமே கேட்டது.

சல்மாவின் நிகழ்ச்சியை 5 நிமிடம் மட்டும் ஒளிபரப்பினார்கள். ஆனால், மத அடிப்படைவாதிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அங்குள்ள நீதிபதிகளும் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து இத்த கைய நிகழ்ச்சிகளில் பெண்கள் பங்கு பெற மீண்டும் தடைவிதிக்கப்பட்டுவிட்டது.

### இக்கரைச் சீமையிலே...



தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு, பொங்கல் தினத்தன்று தமிழகத்தின் மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் நடந்தது.

## முகமது அலி கையெழுத்திட்ட உடைகள் திருட்டு

பிரிட்டிஷ் அருங்காட்சியகம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பிரபல குத்துச்சண்டை வீரர் முகமது அலி கையெழுத்திட்ட இரு அரைக் காற்சட்டைகள் காணாமற் போயுள்ளன.

திருடர்கள் அருங்காட்சியகத்தின் சுவரை இடித்து, உள்ளே நுழைந்து அங்கு வைக்கப்பட்டிருந்த முகமது அலி கையெழுத்திட்ட இரு அரைக் காற்சட்டைகள் மற்றும் நான்கு புகைப்படங்களைத் திருடிச்சென்றுள்ளனர். இவற்றின் மதிப்பு ரூ 2லட்சம் ரூபா ஆகும். முகமது அலிக்கு தற்போது 61 வயது ஆகிறது. இவர் மூன்று முறை உலகக் குத்துச் சண்டை சம்பியன் பட்டத்தை வென்றவர். கடந்த 1981இல் போட்டியிலிருந்து ஓய்வுபெற்றார். தற்போது அவர் பார்கின்சன் நோயினால் அவதியுறுகிறார்.

## பெண்கள் பல்கலைக்கழகம்

பங்களாதேஷில் பெண்களுக்கென தனி பல்கலைக்கழகம் தொடங்கப்படுகிறது. சிட்டகாங் நகரத்தில் அமைக்கப்படும் இந்தப் பல்கலைக்கழகத்துக்கான அடிக்கல்லை அந்த நாட்டுப் பிரதமர் பேகம்கலிதா ஜியா நட்டுவைத்தார்.

இந்தப் பல்கலைக்கழகம் பங்களாதேஷ் பெண்களுக்கு மட்டுமல்லாமல், ஆசியாவில் வாழும் அனைத்துப் பெண்களுக்கும் பயன்தரக் கூடியதாகும் என்றார் கலிதா.

**தயாரிப்பு : மதுமிதா**

## ஆசையால் சிக்கிய திருடர்!

தேள் கொட்டிய திருடனைப் போல என்பது பழமொழி. அதற்கு எடுத்துக்காட்டாக சீனாவில் ஒரு சம்பவம் நடந்துள்ளது.

இரு திருடர்கள் எங்கிருந்தோ ரொக் கம் மற்றும் 'கமரா'க்களைத் திருடி யுள்ளனர். அதில் புகைப்படம் எடுத்துக்கொள்ள அவர்களுக்கு ஆசை வந்தது. ஒருவரை ஒருவர் புகைப்படம் எடுத்தக்கொண்டனர்.

அதன் பிறகு கமராக்களை விற்க ஷாங்- நகருக்குச் சென்றனர். இதனிடையயே, அதிலிருந்து புகைப் படத்தை அழிக்கவேண்டுமே என்ற கவலை ஏற்பட்டது. காரணம், கமராவை இயக்குவது பற்றி அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே, தாம் பொலீஸாரிடம் சிக்கிவிடுவோம் என்ற அச்சமும் ஏற்பட்டது. பின்னர் வழிப்போக்கர் ஒருவரைச் சந்தித்து அவரிடம் அவற்றை விற்க முயன்றனர்.

இந்நிலையில் அவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலீஸார் அவர்களை கைதுசெய்தனர்.



இந்தியாவின் போபால் நகரில் கம்பீர மீசையுடன் காணப்படும் பொலீஸ்காரர் இவர். அங்கு இது போல மீசை வளர்க்கும் பொலீஸாருக்கு மாதம் 30ரூபா கூடுதலாகச் சம்பளம் தரப்படுகிறது.

## பெண்களுக்கான வயாகரா

உணர்வை அதிகப்படுத்தும் 'வயாகரா' மாத்திரை உலகம் முழுவதும் அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. வயாகராவுக்குக் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து பெண்களுக்கென்று உணர்ச்சியூட்டும் மாத்திரையை உற்பத்தி செய்யும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று இதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

'இன்டிரின்சா' என்ற இந்த மருந்து பெண்களிடம் 'டெஸ்டோஸ்டிரோன்' என்ற சுரப்பை அதிகமாகச் சுரக்கவைக்கிறது.

45 வயதைக் தாண்டும் பெண்களுக்கும் மாத விலக்கு நின்று போகும் பெண்களுக்கும் இந்தச் சுரப்பு சுரப்பது தடைபடுவதால் பாலியல் உணர்வும் தடைப்படுகிறது. இந்தக் குறைபாட்டை சரி செய்யும் வகையில் புதிய 'இன்டிரின்சா' உருவாக்கப்படுகிறது.

இதேசமயம் -

பிரிட்டனில் இன்னும் இதற்கு அனுமதி கிடைக்கவில்லை. அங்கு இதை விற்க அனுமதி வழங்க 2 ஆண்டுகள் வரை ஆகும். பெண்களுக்கான இந்த மருந்து மாத்திரை வடிவில் இருப்பதில்லை. 'ஸ்டிக்கர்' போல் உடலில் சில பகுதிகளில் ஒட்டிக் கொள்ள வேண்டியதுதான்.



சிங்கப்பூர் உயிரியல் பூங்காவில் பார்வையாளர்களை மகிழ்வித்துக்கொண்டிருக்கும் தும்பிக்கை மூக்கு உள்ள அரிய இனத்தைச் சேர்ந்த இக்குரங்கின் பெயர் விக்டர். வருகிற சீனப் புத்தாண்டு குரங்குக்கானது. எனவே, விக்டருக்கு ஏகக்கவனிப்பு.

## சரண் அடைந்த மர்மம்

பிரிட்டனின் ஹாம்பர்க் நகரில் கடந்த 2 வருடங்களுக்கு முன் தொடர்ச்சியாக வங்கிகளில் கொள்ளைகள் நடந்தன. ஆனால், இந்த கொள்ளையர்கள் பற்றி பொலீஸாருக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த ஒரு பொலீஸ் வானை கெல்வின் என்பவன் மடக்கினான். 'வங்கிகளில் கொள்ளையடித்தது நான்தான். என்னைக் கைது செய்து உள்ளே தள்ளுங்கள்' என்று கேட்டுக் கொண்டான் கெல்வின். அவன் சொல்வதை முதலில் நம்பமறுத்த பொலீஸார் விசாரித்தபோது அவன் சொல்வதெல்லாம் உண்மை என்று தெரியவந்தது.

வலியவந்து சரண் அடைந்தது ஏன், திருந்திவிட்டானா? அதுதான் இல்லை. கொள்ளையடிப்பதில் அவனுக்கு சலிப்பு ஏற்பட்டு விட்டது. 'பொலீஸாரே பிடிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் என்னைப் பிடிப்பதாக தெரியவில்லை. எனக்குப் பாதுகாப்பான இடம் சிறைதான். எனக்கு ஓய்வு தேவை. அதனால்தான் சரண் அடைந்தேன்' என்கிறான் அந்தக் கொள்ளையன்.



சீனாவில் எதிர்வரும் 22ஆம் திகதி புத்தாண்டு பிறக்கிறது. இதை குரங்குகள் ஆண்டாகச் சீனர்கள் கடைப்பிடிக்கிறார்கள். இதையொட்டி குரங்குகளை கௌரவிக்கும் வகையில் ஓவியப் போட்டிகள் பீஜிங் நகரில் நடத்தப்பட்டு வருகின்றன. 500இற்கும் மேற்பட்டவர்கள் இந்த ஓவயப் போட்டியில் கலந்துகொண்டனர்.

சீன மொழியில் 'குரங்கு' என்று எழுத வேண்டும். பிரமாண்டமான குரங்குப்படம் வரைய வேண்டும். போட்டியின் விதிமுறை இதுதான். இதில் ஓவியர் ஒருவர் படம் வரையும் காட்சி இது. ஆனால் குரங்குகளுக்காக எந்தப் போட்டியும் இதுவரை நடத்தப்படவில்லை.



உலக நாடுகளில் உள்ள பிரபலமான நினைவுச் சின்னங்களை இந்தியாவின் பிரம்மபுத்திரா நதிக் கரையோரம் மணலால் செய்கிறார் ஓரிஸாவைச் சேர்ந்த கலைஞர் சுதர்சன் பட்நாயக்.

## முத்தச் சாதனை: சிலியில் சர்ச்சை!

கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிப்பதற்காக சிலி நாட்டில் கடந்தவாரம் 4ஆயிரம் ஜோடிகள் நடத்திய முத்தச் சாதனை நிகழ்ச்சி கடும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. இதில் பங்குபற்றியவர்களில் பெரும்பாலானவர்கள் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்றும் பலரும் தமது வளர்ப்புப் பிராணிகளுக்கே முத்தம் கொடுத்தார்கள் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. முத்தச் சாதனையின்போது ஆணும் பெண்ணும் அடங்கிய ஜோடிகளே முத்தமிடவேண்டும் என்பது விதியாகும். ஆனால், சாதனை முயற்சியின்போது பெண்கள் பெண்களுக்கும் ஆண்கள் ஆண்களுக்கும் முத்தமிட்டுக்கொண்டதை காட்டும் புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளியாகின. இதனைத் தவிர சிலர் நாய்களுக்கும் முத்தமிட்டுள்ளனர். இதற்கான புகைப்பட ஆதாரங்களும் வெளியாகியுள்ளன. இதனால் இந்த முத்தச் சாதனையை அங்கீகரிக்கக்கூடாதென எதிர்ப்பு எழுந்துள்ளது.

# முன்னாள் எம்.பீ வீரசிங்க காலமானார்

முன்னாள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் எச். எம். வீரசிங்க நேற்றுமுன்தினம் இரவு காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 64.

1994 தொடக்கம் 1999ஆம் ஆண்டு வரை அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் பிரதி அமைச்சராகவும் இருந்த இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதம அமைப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.மாரடைப்பு நோயால் பாதிக்கப்பட்ட இவர் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

# பசளை விலை அதிகரிப்பு: விவசாயிகள் போராட்டம்

பசளை விலைகள அதிகரிக்கப்பட்டிருப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்து நான்கு நகரங்களில் எதிர்வரும் 19ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவிருக்கிறது.பொலன்நறுவை , திகாமடுல்ல , அம்பாறை , எம்பிலிபிட்டிய ஆகிய நகரங்களில் இப்போராட்டத்தை நடத்துவதென அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தீர்மானித்திருக்கிறது.


## கைமாறிவிட்டது

செல்வன் கதிர்காமு சுதாகர் ஆகிய எனது இல.56C814C3 லுமாலா (ஆண்கள்) சைக்கிள் 31.12.2003 அன்று யாழ். நகரப் பகுதிக்குள் கைமாறிவிட்டது. தவறுதலாக சைக்கிளை இனந தெரியாமல மாறி எடுத்துச் சென்றவர் தயவுசெய்து என்னிடம் வந்து தனது சைக்கிளைப் பெற்றுக்கொண்டு எனது சைக்கிளை என்னிடம ஒப படைத்து உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

கிருஷிகா புடைவை அகம்,
இல. 69A, நவீன சந்தை,
(உட்புறம்), யாழ்ப்பாணம்.

(27243)(36-11-16)

## Diploma In Computer Accounting

*For University Students*

- *System Analysis*
- *Data Processing*
- *Quick Book*
- *Pay Roll in Excel*

Start On 23/01/04



பதிவுகளுக்கு:

STP Your Parner In IT Solutions.

73, Palaly Road, Kantharmadam, Jaffna T.P: 2222674


## FORUT Campaign for Development and Solidarity

### Vacancy Announcement

-"Title - Technical Officer" (Civil)

Duty station: Kilinochchi

Effective date: Immediately

**Duties and responsibilities**

1. Preparation of estimate
2. Competency in civil drawings
3. Taking quantity measurements
4. Preparation of bills and measurements 5. Works supervision

**Qualification requirements:**

**Education and skills**

- Should be a civil engineer of a recognized university OR
- National diploma holder in technology (civil) OR
- Any other competent civil technical qualification acceptable by the FORUT Vanni management
- Should possess valid driving license to drive motor bike

**Experience**

- Should have a minimum 5 years of working experience in civil construction field
- Should be a proficient in relevant computer skills
- Previous experience working with NGOs is advantageous.

**Language proficiency**

- Tamil and good standard of written and spoken English is essential.
- Knowledge in spoken and written Sinhala would be advantageous.

**Personal qualities**

1. Good policy analysis and strategic thinking
2. Ability to work with senior persons with conscious building approach
3. Able to work under uncertain conditions

**FORUT** is an International Non-Governmental Organization committed to humanitarian principles and temperance. Staff will be expected to act in accordance with these values at all times. Applicants should send a detailed, CV of no more than 3 -pages and include two work / academic references.

The position requires field travel from the office location in Kilinochchi to project villages covering both Kilinochchi and Mullaitivu districts.

Females are encouraged to apply. Duration of contract initially will be of 6 months with possible extension depending on the performance and project period. Only short listed candidates will be called for interview. No acknowledgement on receipt of applications will be sent.

Application should be addressed to the Program Manager, FORUT Vanni Project, CTB Depot Road, Selvanagar Kilinochchi and reach FOURT Vanni no later than 25th January 2004. Late applications will not be considered.

### சம்பள அதிகரிப்புக்கு ஏற்ப

# அரச ஊழியர்களின் போக்குவரத்து கொடுப்பனவுகளில் மாற்றங்கள்

அரசினால் இம்மாதம் தொடக்கம அதிகரிக்கப்பட்டுள்ள அரச ஊழிய ருக்கான சம்பள அதிகரிப்புக்கு ஏற்ப போக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும இணைந்த படிக் கொடுப்பனவுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொது நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை அமைச்சின் செயலாளர் எஸ்சி. மன்னப்பெரும சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத் துள்ளார்.

புதிய சம்பளத் திட்டத்தின் பிர காரம் 57ஆயிரத்து 720 ரூபா வரு டாந்த சம்பளத்தைப் பெறும் ஊழியர் களுக்கும் அதைவிடக் குறைவான சம பளம் பெறுபவர்களுக்கும் இணைந்த படிக் கொடுப்பனவாக 150ரூபா வழங் கப்படவுள்ளது. 57,721 ரூபாவுக்கும் 81,301 ரூபாவிற்கும் இடைப்பட்ட வருடசம்பள்த்தைப் பெறும் உத்தி யோகத் தர்களுக்கு 180 ரூபா இணைந்த படியாக வழங்கப்பட வுள்ளது.

81, 301 ரூபாவிற்கும் 1,33,440 ரூபா விற்கும் இடைப்பட்ட வருட சம்ப ளத்தைப் பெறும் உத்தியோகத்தர் களுக்கு 230 ரூபா இணைந்த படி யாகவும் 1,33,441 ரூபாவிற்கு மேற்பட்ட சம்பளத்தைப் பெறும் உத்தியோ கத்தர் களுக்கு 280 ரூபா இணைந்த படியா கவும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, அரச உததியோகத தர்களுக்கான இலவச ரயில் ஆணைச் சீட்டு சம்பளப்படிநிலைகளிலும் மாற் றங்கள் செய்யப்பட்டுள்ளன. 1,00,440 ரூபா வருடசம்பளம் பெறும் உத்தி யோகத்தர்களுக்கு முதலாம் வகுப்பு பருவச் சீட்டும் 77,340 ரூபா சம்பளம பெறும் உத்தியோகத்தர்களுக்கு இரண் டாம் வகுப்பு பருவ கால சீட்டும் 77,340 ரூபாவிற்கு குறைவான சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு மூன்றாம் வகுப்பு பருவ காலச்சீட்டும் வழங்கப் பட வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாகனங்கள் கைப்பற்றப்பட்டன

தென்மராட்சி, ஜன,17

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரமும், விறகு ஏற்றிச்சென்ற லாண்ட் மாஸ்ரரும் சாவகச்சேரிப் பொலீஸா ரால் கைப்பற்றப்பட்டன.

மட்டுவில், பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடியில் வைத்தே பொலீஸாரால் அண்மையில் இவை கைப்பற்றப்பட்டன. (எ-10-117)

## பாடசாலைக்கு மதில் அமைப்பு

தெல்லிப்பழை,ஜன.17

குப்பிளான் விக்னேஸ்வரா வித் தியாலயத்துக்கு 160 அடி நீளமான மதில் அமைப்பதற்கு சுவிற்ஸர் லாந்தில் செயற்பட்டுவரும் குப் பிளான் அபிவிருத்தி மன்றம் நட வடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

இதன்படி இங்குள்ள மக்கள் மூலம் இந்தப் பணி மேற்கொள்ளப் படவுள்ளது. (எ-10-150)

## நுளம்பு வலைகளுக்கு மருந்து தெளிக்கும் பணி

மானிப்பாய்,ஜன.17

மானிப்பாய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நுளம்பு வலை களுக்கு மருந்து தெளிக்கும் பணி அண்மையில் நடைபெற்றது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக இந்தப்பணி நடை பெற்றது. (எ-10-139)

## அரச அதிபருக்கு மகஜர்

கைதடிப் பிரதேசத்தின் குறிப் பிட்ட சிலபகுதிகளுக்கு இந்த ஆண டில் அத்தியாவசிய வசதிகளை ஏற படுத்தித் தருமாறு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

கைதடி மத்தி கன்னிநகர், இராஜ புரி ஆகிய பகுதிகளில் வாழும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும் பங்களுக்கு குடி தண்ணீர், மலசல கூடம் மற்றும் வீட்டு வசதி என்பவற்றை ஏற்படுத்தித் தருமாறு அந்த மக ஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-10-75)


## தேவை

தொலைபேசி இயக்குநர்(பெண்)
ஞாயிறு காலை 9.00 -மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

பபு கொமினிகேசன்
இல.30.வளாக வீதி
திருநெல்வேலி

(27240)(36-11)

## தேவை

எமது திரையரங்குக்கு பின் வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

1. காசாளர்
2. கிளார்க்
3. ஒப்பரேற்றர்
4. ஒப்பரேற்றராகப் பழகவிரும்பவர்கள்.

தங்குமிட வசதி உண்டு.

எதிர்வரும் 21.01.2004 புதன்கிழமை காலை 9.00மணிக்கு நேரில் வரவும.

நிறைஞ்சனாஸ் திரையரங்கு
206, பொன்னாலை வீதி ,
சங்கானை.

(சி-32815)(36)


## பிரதேச செயலருக்கு மகஜர்

கொடிகாமம், ஜன.17

கொடிகாமம் கச்சாய் வீதி, சாவகச் சேரி - கச்சாய் வீதி ஆகியவற்றைப் புனரமைத்துத் தருமாறு கச்சாய் கிராம அபிவிருத்திச் சங்கம் தென் மராட்சி பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இந்த மகஜரில் 500 இற்கு மேற்பட்ட மக்கள் கையொப்பம் இட்டுள் ளனர்.

(எ-10-74)

## பௌராணிகர்கள் கௌரவிப்பு

வலி.வடக்கு , ஜன,17

திருவெம்பாவைக் காலத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் புராணப்படிப்பினை நிகழ்த்திய பௌராணிகர்கள் அண்மை யில் பொன்னாடை போர்த்துக கௌர விக்கப்பட்டனர்.

ஏழாலையைச் சேர்ந்த க.சண் முகவடிவேல், மீசாலையைச்சேர்ந்த சிவத்திரு. ஈஸ்வரதாஸ் ஆகியோரே கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

(எ-10-86)

## சித்த மருத்துவ மாணவர்களுக்கான அறிவித்தல்

எதிர்வரும் பங்குனி மாதம் நடைபெறவுள்ள கண்காட்சி தொடர்பான பொதுக்கூட்டம் எதிர்வரும் 19.01.2004 காலை 10.30 மணிக்கு சித்த மருத்துவத்துறை, கைதடியில் இடம்பெறும்.அனைவரையும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்,
சித்த மருத்துவ மாணவர்
ஒன்றியம், யாழ்ப்பாணம்.

(27245)(36-11-16)


## M.A., M.COM

### (காமராஜர் பல்கலைக்கழகம் மதுரை)

★ மேற்குறிப்பிட்ட பட்ட பாடநெறிக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதி உடையவர் களாவர்.

★ விண்ணப்ப முடிவு திகதி: 31.01.2004.

★ விரிவுரைகள் ஆரம்பம்: 01.02.2004. (ஒரு மணி)

★ கீழ்க்காணும் பாடங்களில் ஒன்றை மட்டுமே தெரிவு செய்யலாம்.

1.தமிழ் 2. சமய தத்துவம் 3.ஆங்கில இலக்கியம் 4.பொருளியல் 5.அரசியல் 6.சமூகவியல் 7.பொதுநிர்வாகம்

குறிப்பு:- இவற்றுக்குரிய பரீட்சைகள் இலங்கையில் நடைபெறும். M.COM (ஆங்கிலம்,தமிழ்) இரு மொழிகளிலும் ஆரம்ப மாகின்றன.

யாழ். இணைப்பாளர்.

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி , யாழ்ப்பாணம்.

(27223)(36-16-11)


## நோயாளர் படகு( Ambulance Boat) ஓட்டுநர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

எமது பிராந்தியத்திலுள்ள நோயாளர் படகு ஓட்டுநருக்கான விண் ணப்பங்கள் பின்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. க.பொ.த. (சா/த) சித்தி
2. வயது 30.01.2004 இல் 18 முதல் 40 ஆண்டு
3. ("Coxwain")"கொக்ஸ் வைன்" தராதரப்பத்திரம்
4. மேறபடி தராதரப்பத்திரத்துடன 2 வருட படகு ஓட்டும் அனுபவம.

தாங்களாகவே மேற்படி விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை தயாரித்து 31.01.2004 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில்" பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்" சுகாதார வேவைகள், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். சம்பள விவரம் பின்னர் அறியத்தரப்படும.

சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.

(சி-32812)(36-11-16)

## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம் மின்தடை பற்றிய அறிவித்தல் - யாழ்.நகரம்

அவசர வேலைகள் காரணமாக யாழ்ப்பாண நகரப்பகுதியில் நாளை 2004.01.18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின்சார விநியோகம் தடைப்படும் என்பதை மின்பாவனையாளர் களுக்கு அறியத்தருகின்றேன். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப் படலாம்.

1. யாழ்.நகர மையம்
2. அரசினர் பொது வைத்தியசாலை
3. தொலைபேசி பரிவர்த்தனைநிலையம் - ரெலிக்கொம்
4. நாவாந்துறைப் பகுதி
5. பொது நூலகப்பகுதி

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசெகரியங்களுக்காக வருந்துகின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்

சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை.

(சி-32814)(32-36-11-16)

## யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2004

மேற்படி கழகத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் நிர்வாகக்குழுத் தெரிவும் எதிர்வரும் 19.01.2004 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. நான்கு மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை அறையில் நடைபெற உள்ளது. கழக உறுப்பினர்கள் அனைவரையும் அக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம். புதிதாகச் சேர விரும்புவோரும சமுகந்தரவும்.

நா.விமலநாதன்
செயலாளர்.

பேராசிரியர்
அ.சண்முகதாஸ்
தலைவர்.

குறிப்பு:
★ அங்கத்தவர்கள்/ புதிதாகச் சேர விரும்புவோர் அன்றைய தினமே விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்திசெய்து
தமது ஆண்டுச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளமுடியும்.
சந்தா விவரம் : ஆண்டு சந்தா ( ரூபா 50/-)
ஆயுள் சந்தா (ரூபா 500/-)

(27241)(36-14-18)



## இசை நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது

இளவாலை யங்.ஹென்றீஸியன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இன்று (17.01.2004) சனிக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த 'பிரென்டஸ்' இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு, எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

யங்.ஹென்றீஸியன் வி.க.,
இளவாலை.

(சி-32823)(36-14-18)


## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மூத்ததம்பி கந்தையா
(மட்டுவில் தெற்கு)

தோற்றம் 06.07.1911
மறைவு 18.01.1993

திதி: 17.01.2004
பதினோராம் ஆண்டதனிலும்
உங்கள் ஆசியை
வேண்டி நிற்கும்...

உங்கள் நிழலில் வாழும்
குடும்பத்தினர்.

(27246)(36-14-18)

## நெஞ்சம் நெகிழும் 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

மலர்கள் மண்ணிலே தோன்றி மணம் பரப்பி
மறுபடியும் மண்ணிலே உதிர்கின்றன - நல்ல
மனிதவாழ்வும் மற்றவருக்குப் பயன்பட்டு
மறுபடியும் மண்ணோடு மண்ணாய் மறைகின்றது.

அமரர் - ஈசன்

தாயக மண்ணில்
17 - 11 - 1948



விண்ணில்
18 - 12 - 2003

அமரர் சின்னத்தம்பி உலகேஸ்வரன் (ஈசன்)

ஓய்வு ஒழிவிலாத தொண்டனாக
உறக்கமில்லா சில்வண்டாக
யாருக்கும் உதவத்துடிக்கும் மனதோடு
உள்ள நிறைவை உதட்டிற் சிரிப்பாக
கிடைக்க அரியதோர் நண்பனாக
நல்ல மனிதனாக தங்கமனிதனாக
நேற்றுவரை நின்றீர்கள்!
இன்று....
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி விடைபெறும்:

'சிறீஸ்தான்'
துன்னாலை, கரவெட்டி. (சி-32820)(36-18-14)

திரு.திருமதி சிறீஸ்கந்தராசா (J.P),
திரு.திருமதி பகீரதன்.


COMPUTER EXPRESS
Institute of Information Technology

G.C.E. O/L மாணவர்களுக்கான
அனைத்து கணனி கற்கை நெறிகளும் ஆரம்பமாகின்றன!
வகுப்புகள் யாவும் 20.01.2004 இல் ஆரம்பமாகும்.

மாணவர்களுக்கான பொங்கல் பரிசாக அனைத்துக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணக் கழிவு வழங்கப்பட இருப்பதை பெருமையுடன் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

அறிவித்தல்

எமது நிறுவனத்தில் Accounting Package தொடர்பான கற்கை நெறிக்கு பதிவுசெய்த அனைத்து மாணவர்களையும் 18.01.2004 ஞாயிறு காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள வகுப்பில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு : இல. 152/1, சிராம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.
(Off Stanly Rd.)
(சி-32821) (30-14-18) 0777 - 278883; 0777 - 278880.


## வைரஸ் காய்ச்சலினால் இளம் பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன.17

வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இளம் பெண் ஒருவர் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

நீண்ட நாள்களாக இருந்து வந்த வைரஸ் காய்ச்சல் முற்றிய நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த 7 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட் படுத்திய நிலையில் 9 நாள்களின் பின் சிகிச்சை பலனளிக்காது நேற்று அங்கு மரணமானார்.

இச்சம்பவத்தில் வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த நடராசா மாலினி (வயது 22) என்ற இளம் பெண்ணே உயிரிழந்தவராவார். (ம-15)

## கடை தீப்பற்றி எரிந்ததால் பொருள்கள் நாசம்!

யாழ்ப்பாணம், ஜன.17

பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியில் அமைந்திருக்கும் பல்பொருள் வாணிப நிலையம் ஒன்று இரவுவேளை தீப்பற்றி எரிந்ததில் சுமார் 50 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதிவாய்ந்த விற்பனைப் பொருள்கள் எரிந்து நாசமடைந்துள்ளன. இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இவ் விபத்து எப்படி ஏற்பட்டது என்று தெரியவரவில்லை. (ம-15)

## குப்பி விளக்கு தட்டுண்டு இருவர் தீக்காயம்!

யாழ்ப்பாணம், ஜன.17

ஜன்னலில் இருந்த குப்பி விளக்கு தட்டுண்டு வீழ்ந்ததில் படுக்கை தீப்பற்றி எரிந்து இருவர் காய மடைந்தனர்.

குருநகரில் பொங்கல் தினத்தன்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அரசையா ரமேஷ்குயின்டன் (வயது 33), அவர் மனைவி ரமேஸ்குயின்டன் ரோகினி(வயது 27) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-15)

## சான்றிதழ் வழங்கல்

இளவாலை,ஜன.17

மூவிமொண்டோ (movimondo) நிறுவனத்தினால் இளவாலைப் பகுதி பொதுச் சுகாதாரப்பரிசோதகர் சி.திருநிறைச்செல்வனின் வழிகாட்லின் கீழ் 'சுகாதார முன்னேற்றமும் சமூகப் பங்களிப்பும்' என்ற தலைப்பில் நடைபெற்ற பயிற்சி நெறியில் கலந்து கொண்ட சுகாதாரத் தொண்டர்களுககான சான்றிதழ் வழங்கல் வைபவம் இன்று காலை 9 மணிக்கு யாழ். நகரிலுள்ள மூவிமொண்டோ (movimondo) தலைமையகத்தில் நடைபெறும். (ம-48)


ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந் நடித்த
ஜெய் (றீகல்)
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30,9.30 (பு.நே.)
(சி-32369) (32)

நிறஞ்சனாஸ் சங்கானை
சரண், மீரா நாயர் நடித்த
உன்னை சரணடைந்தேன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு
Tomv Raider - 2
இரவு 8.45 (பு.நே) (C-32370) (32)

லிபேட்டி அச்சுவேலி
பிரசாந் நடித்த
"வின்னர்" (றீகல்)
தினசரி : 2.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 2.00,7.00 (பு.நே.)
(C-32371) (32)

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி (சண்டியர்) (ரீகல்)
ஆசனப்பதிவுகளுக்கு
யாழ்ப்பாணம்
T.P.: 021-222 2917
நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம்
T.P: 060 221 2779
வீடியோ ஆனந் - மானிப்பாய்
T.P.: - 021-2222889
நாகம்ஸ் திரை அரங்கம்,
சுன்னாகம்.




# மரண அறிவித்தல்கள்

## திருமதி லில்லிகிறேஸ் தேவசகாயம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் இல.28, றக்கா லேன், சுண்டுக்குளி யாழ்பபாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லில்லிகிறேஸ் தேவசகாயம் நேற்று (16.01.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சவரிமுத்து தேவசகாயத்தின்(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*28,றக்காலேன்,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
*222 3405*
(27248)(36-14-18)

தகவல்:
S.S.தேவசகாயம்
(கணவர்).

## திருமதி சிவபாக்கியதேவி குமாரசாமி
### (பருத்தித்துறை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, வி.எம்.வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியதேவி குமாரசாமி 13.01.2004 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசபிள்ளை (இளைப்பாறிய சித்திர ஆசிரியர், வேலாயுதம் மகாவித்தியாலயம்) - அழகம்மா தம்பதிகளின் புதல்வியும் குமாரசாமியின் அன்பு மனைவியும் கண்ணன்(பிரான்ஸ்), குமாரி, குமார்(பிரான்ஸ்), சுவீற்றி, ரூபன், மோகினி, ரவி, சத்தியன், சாயி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிறு காலை 10மணிக்கு நடைபெறும்.

*V.M.றோட்,*
*பருத்தித்துறை.* (c-32822)(36-14-18)

தகவல்:
கணவர்,பிள்ளைகள்.
T.P.:0777111354

## P.F. சேவியர்
### (முன்னாள் உதவிமேயர், யாழ்.மாநகர சபை)

தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும் யாழ்.மாநகரசபையின் முன்னாள் பிரதி முதல்வருமான P.F.சேவியர் நேற்று (16.01.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.5, 5ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (27249)(36-14-18)

தகவல்:
மனைவி, மக்கள்.

## நடராசா சோமஸ்கந்தராசா (சோமு)

7/1, புது வீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சோமஸ்கந்தராசா(சோமு) 15.01.2004 வியாழக்கிழமை இத்தாலியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் லெட்சுமி ஆகியோரின் அருமைப் புத்திரனும் பாலசரஸ்வதியின் (வவி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், சிவபாக்கியம் ஆகியோரின் மருமகனும லைலா, சிறி, அஞ்சலா, ஆனந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வைரவநாதன், மைதிலி, மாஸ்ரா, ராதிகா, வரதராசா வவா, சவுந்தரதாஸ் வேவி, பாஸ்கரன் செல்வி, நாகரட்ணம் சோதி, சிறீபாலன் சாயி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2004)சனிக்கிழமை இத்தாலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7/1, பாற்குளம்,*
*புது வீதி, கொய்யாத்தோட்டம்.* (27250)(36-14-18)

தகவல்:
லச்சுமி (தாய்).

## வல்லிபுரம் மார்க்கண்டு
### (முன்னாள் Coop-லொறி சாரதி, யாழ்ப்பாணம்)

இல.73, செம்மணி றோட், நாயன்மார்கட்டைச் சேர்ந்த வல்லிபுரம் மார்க்கண்டு நேற்று (16.01.2004) வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - சின்னம்மா தம்பதிகளின் மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் தெய்வேந்திரன் (இத்தாலி), தெய்வகுமாரி, காலஞ்சென்ற தர்மினி, கஜேந்திரன் (துணுக்காய்), சுமதினி யோகேந்திரன் (ஆசிரியர், கனகராயன்குளம், வவுனியா) ஆகியோரின் தந்தையும் புவனேஸ்வரி(இத்தாலி), பற்குணநாதன், இராசலெட்சுமி (துணுக்காய்), கிரிகரன்(ஈழநாடு ஊழியர்), தயாளரூபா(ஆசிரியை, வவுனியா இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் குமாரகுரு (சுவிஸ்), கோணேஸ்வரன் (நவாலி) ஆகியோரின் சிறிய தகப்பனும் நாகரத்தினத்தின் மைத்துனரும் கெவின், சாந்தா, சுகிர்தன், நந்தினி, கோபி, மதன், கனியமுதன், சங்கீதன், வளர்மதி, சிந்துமதி, ஜெயசங்கர், வஜனிகா, லேகா, மதுசன், மதுசா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*73,செம்மணி றோட்,*
*நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.* (27251)(36-14-18)

தகவல்:
பிள்ளைகள்.

## Dr.K.S.பரமலிங்கம்

யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளைப்பாறிய அப்போதிக்கரி கந்தர் சின்னத்தம்பி பரமலிங்கம் 10.01.2004 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் தையல்நாயகியின் அன்புக் கணவரும் Dr.சிவலிங்கம் (கனடா), சிவநாயகி(லண்டன்), சாந்தநாயகி(லண்டன்), சந்திரநாயகி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.காஞ்சனா, இராசசிங்கம், மனோகரசிங்கம், சத்தியலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் தீப்பேஸ், ஐஸ்வரியா, டராசாலினி, ஜீவா, நளனி, கோபிகன், ஜசீகன் ஆகியோரின் அன்புப் பேரனும காலஞ்சென்ற நாகம்மா, சிவசுப்பிரமணியம்,சரஸ்வதி மகாலிங்கம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.01.2004)சனிக்கிழமை லண்டனில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சி.அரியரெட்ணம் (கொழும்பு) T.P.:360090,
சி.குமாரரெட்ணம் (பவா) T.P.:2719, 3135,
சி.பூபாலரெட்ணம் (குஞ்சன்) T.P.:2354,
*7/1, 1st. லேன், பிறவுண் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (27212)(36-14-18)

தகவல்:
திருமதி சிவநாயகி
இராசசிங்கம்.
T.P.:173 735 8480(U.K)

## 'வேரடி மண்' பெண்களின் பாரம்பரிய விளையாட்டு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாட்டில் " வேரடிமண்" என்ற பெயரில் பெண்கள் பங்கு பற்றும் பாரம்பரிய கலை விளையாட்டு விழா குடாநாட்டின் சில கிராமங்களில் நடைபெறவுள்ளது.

சிறுமிகள், இளம்பெண்கள், திருமணமான பெண்கள், மூதாட்டிகள் என 650 இற்கும் மேற்பட்ட பெண்கள் இந்த விளையாட்டுக்களில் பங்கு பற்றுகின்றனர்.

உடுவில், சண்டிலிப்பாய், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சில கிராமங்களில் இந்த பாரம்பரிய விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

இதில் கிராமப் புறங்களில் உள்ள சுமார் 50 இற்கும் மேற்பட்ட பாரம்பரிய விளையாட்டுகள் விளையாடப் படவுள்ளன.

இன்று சனிக்கிழமை கரம்பைக் குறிஞ்சிக் கிராமத்திலும், நாளை தச்சன் தோப்பிலும், நாளை மறுதினம் நாவற்குழி தெற்கிலும் 20 ஆம் திகதி கோவிலாக்கண்டியிலும், 21 ஆம் திகதி ஏழாலை தெற்கிலும் , 22 ஆம் திகதி நாவற்குழிச் சந்தியிலும், 23 ஆம் திகதி பிரான்பற்றிலும், 24 ஆம் திகதி ஊரியான் கிராமத்திலும், 25 ஆம் திகதி கைதடி மேற்கிலும், 26 ஆம் திகதி நாவற்குழி கிழக்கிலும் இவ்விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

## கேணல் கிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுக்கல் சதுக்கத்தில் வைக்கப்பட்டன. பொதுச் சுடரினை கடற்புலிகளின தீவகப் பொறுப்பாளர் அருணன், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா, தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் சூ.சிறில் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை அரசியல்துறை யாழ். மாவட்டத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். புனரமைக்கப்பட்ட புதிய நினைவுக் கல்லினை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் பகலவன் ஏற்றினார்.

தொடர்ந்து வீரவேங்கைகளின் உருவப்படத்திற்கு அவர்களின் பெற்றோரும், உறவினரும் ஈகச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

கடற் புலிகளின் வல்வெட்டித்துறைப் பொறுப்பாளர் கிசோர் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. வடமராட்சிப பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும், மகளிர் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் இசைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

- கிட்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்றுக் காலை யாழ். முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கிட்டு பூங்காவிலும் நடைபெற்றன.

முன்னதாக கிட்டு உட்பட 10 மாவீரர்களினதும் உருவப்படங்கள் யாழ். மாநகரசபை அலுவலக முன்றிலில் இருந்து 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் ஊர்வலமாக கிட்டு பூங்காவிற்கு எடுத்துவரப்பட்டன. தொடர்ந்து நினைவு தின நிகழ்வுகள் யாழ். பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்சிவ ஞானசேகரன் தலைமையில் நடைபெற்றன.

ஈகச்சுடரினை வங்கக் கடலில் காவியமான கப்டன் றொஷானின் தாயாரான பொற்கொடி, கப்டன் தூயவனின் தந்தையாரான மகாலிங்கம், மேஜர் நிரஞ்சனின் தந்தையாரான தம்பிராசா, யாழ். மாநகரசபைச் செயலாளர் இ.குலநாயகம் ஆகியோர் ஏற்றினார்கள் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

கேணல் கிட்டுவின் போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் பல்வேறு புகைப்படங்கள் அடங்கிய புகைப்படக் கண்காட்சி ஒன்றும் நேற்று நல்லூர் ஆலயக் கிழக்கு வீதியில் இடம்பெற்றது. பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் இதனைப் பார்வையிட்டனர்.

சாவகச்சேரி பஸ் நிலையத்திலும கேணல் கிட்டு நினைவுதின நிகழ்வுகள் இடம்பெற்றன. தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் க.சந்திரசேகரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈகச்சுடரை மாவீரர் கோமகனின் தந்தையார் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை சாவகச்சேரி அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறன் ஏற்றினார்.

நினைவு தினத்தையொட்டி குடாநாட்டின் பல இடங்களிலும் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு சிவப்பு, மஞ்சள கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. (ம-5-8-15-30-31-70-86-117-118-173)

## அரசு-முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் தயாரத்னவின் இந்த அரசியல் பாரபட்ச நடவடிக்கை பற்றி ஹரீஸ் எம்பி. தனது கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் பிரதமரிடம் நேரில் சென்று முறைப்பாடு செய்து நியாயம கேட்டார். அது பலன் அளிக்கவில்லை.

இதற்கு மேலும் அரசுடன் முஸ்லிம காங்கிரஸ் உறவு வைத்திருக்க வேண்டுமா? ஆதரவு வழங்கி அரசைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு இருக்க வேண்டுமா? இப்படி ஹரீஸின் தீவிர ஆதரவாளர்களும் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் நெருப்பெடுக்கிறார்கள். தமது ஆதரவாளர்களின் குற்றச்சாட்டுக்களால் ஹரீஸ் எம்பி. மிகுந்த ஆத்திரமும் ஆவேசமும அடைந்து தலைவா ஹக்கீமுக்கு அழுத்தம் கொடுத்த வண்ணம் இருக்கிறார். அரசு பண்பாகவும், நேர்மையாகவும், நீதியாகவும் நடப்பதாக இல்லை. அதனால அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக்கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று இடைவிடாது வற்புறுத்தி வருகிறார். அவருடைய வற்புறுத்தலைத தலைவரால் தட்டிக்கழிக்க முடியாத நிலை, அதனால் எந்த நேரத்திலும் அரசு - முஸ்லிம் காங்கிரஸ் உறவு முறியலாம்.

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படும் வகையில் நடந்துகொண்டார் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அவர் மீது புகார் கூறியது.

கடலில் புலிகளின் கப்பலை வழி மறிப்பதற்கு அரச கடற்படைக்கப்பல் வருகிறது என்று ரெலிவிஷன் புலிகளுக்குத் தகவல் கொடுத்தார் என்று அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இவற்றை அடுத்து அவர் இந்நாட்டைவிட்டு வெளியேறினார்.

புதிய தலைவர் புருகோவ்டே தாம் அடுத்த மாதம் பதவி ஏற்க இருப்பதாகச் செய்தி நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்திருக்கிறார்.

விட்ட இடத்திலிருந்து பணியைத் தொடர்வதற்கு முதல்வேலையாகத் தாம் பல்வேறு தரப்புக்களுடனும் தொடர்புகொள்ளப்போவதாகவும் அவர் கூறினார். அவர் எல்லோருடைய மதிப்பையும் சம்பாதித்தவர் ஆவார். (ம)

## அகாஷி-தமிழ்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களை மேற்கொள்வார்.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகளின கருத்துக்களையும், யோசனைகளையும் அறிந்துகொள்ளவே யசூஷி அகாஷி இச்சந்திப்பை மேற்கொள்கிறார்.

இலங்கை மீள்புனரமைப்பு, அபிவிருத்தி பற்றிய டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் இரண்டாவது தொடர் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் அக்கூட்டத்திற்கு யசூஷி அகாஷி தலைமைவகிப்பார்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசுவார்.

## நாட்டில் புதுயுகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சசீலக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆட்சிபுரியும். இரு தரப்பினரும் பொருளாதாரம், இனப்பிரச்சினைத்தீர்வு, வெளிநாட்டுக்கொள்கை என்பவை குறித்து ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். கூட்டு ஒப்பந்தம் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைபவரீதியாக கைச்சாத்திடப்படும். இதன் பின்னர் இடம்பெறும் செய்தியாளர் மாநாட்டில் ஒப்பந்தத்தின் பிரதிகள் ஊடகங்களுக்கு வழங்கபடும் சு.க. - ஜே.வி.பி. ஒப்பந்தம் தொகுதிப் பங்கீடு தொடர்பான ஒப்பந்தம் அல்ல என்று சரத்அமுனுகம எம்.பி. செய்தியாளரொருவர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது கூறினார்.


**A/L 2006**
**வர்த்தகப்பிரிவு**

ACC. - திரு.பாலவாசன்
ECO. - திரு.மோகன்
B.St. - திரு.யசோ

**ஸ்ரார் கல்வி நிலையம்**
சுன்னாகம்

குறிப்பு:- தனிப்பாட அனுமதிகள வழங்கப்படும்.
★ திங்கள், வெள்ளி 3- 5
★ செவ்வாய், வியாழன் 3 -4
(27175)


## 7 வருடங்களாகத் தேடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றித் தெரிவித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இச்சந்திப்பில் படையினர் தரப்பில் கட்டளைத் தளபதி சுசில் சந்திரபால தலைமையிலான உயர் அதிகாரிகளும் பாதுகாவலர் சங்கம் சார்பாக தலைவர் சு.செல்வராசா, செயலாளர் எஸ். சற்குணம் மற்றும் அன்னையர் முன்னணித் தலைவி திருமதி க.செல்வராசா உட்பட சுமார் 58 பிரதிநிதிகள கலந்து கொண்டனர்.

சந்திப்புத் தொடர்பாக செயலாளர் சற்குணம் மேலும் தெரிவித்ததாவது:-

வடபகுதியில் காணாமற்போனோர் அனைவரும் படையினராலும், அவர்களுடன் சேர்ந்துசெயற்படும் தமிழ்க்குழுகளாலும் கைதுசெய்யப்பட்டவர்கள். அதுதொடர்பாக நாம் பலரிடம் முறையிட்டோம். இதுவரை எவ்வித பதிலும கிடைக்கவில்லை. எமது பிள்ளைகளின நிலைகளை அறிந்து உறுதியான தீர்வைப் பெற்றுத்தருமாறு கட்டளைத் தளபதியிடம் நாம் கோரிக்கை விடுததோம்.

அதற்குப்பதிலளித்த அவர், பல வருடங்களாகத் தேடியும், விசாரணை செய்தும் கண்டுபிடிக்கமுடியாத உங்களுடைய உறவினர்களை என்னால் உடனடியாகக் கண்டுபிடித்துத்தர முடியாது - என்றார்.

உங்களது பிள்ளைகளும் உறவினகளும் காணாமற்போன விடயத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதனை நினைத்து வேதனை அடைகிறேன். ஆனால், அவர்கள் காணாமறபோன காலப்பகுதியில் நான் இப்பகுதிகளில கடமையாற்றவில்லை. இதனால், இது தொடர்பாக உடனடியாகத் தீர்வு எதனையும் தெரிவிக்க முடியாது என்றும அவர் கூறினார்.

உங்களுக்கு நடந்தது போல எனக்கும் நடந்திருந்தாலும் இவ்வாறான போராட்டங்களை நடத்துவதற்கு சங்கங்களை அமைத்திருப்பேன் அதில் தவறேதும் இல்லை.

தமது கணவன்மார்களை இழந்த பெண்களைக் காணும்போது எனது சகோதரிகளுக்கு நடந்த சம்பவமாக இதனை எண்ணுகிறேன். இந்தக் கைதுச் சம்பவங்களுடன் எந்த அதிகாரி தொடர்புபட்டிருந்தாலும் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

கைதடிப்பகுதியில் 24 பேர் காணாமற்போன சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்படும் அப்பகுதிக்குப் பொறுப்பாக இருந்த கப்டன் குமிந்த ஹெப்பிற்றி கலவுக்கு எதிராகச சட்ட நடவடிக்கை எடுங்கள் அதற்கு என்னாலான முழுப் பங்களிப்பையும் வழங்குகின்றேன்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னணியில் உங்களுக்கு அவர்களால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் அது தொடர்பாக உடனடியாக என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இந்தக் கொடிய நிகழ்வை யார் செய்தாலும் அது மிகப்பெரிய அநியாயமாகும். காணாமற்போன உங்களுடைய உறவுகள் மற்றும் பிள்ளைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி மிக விரைவில் ஓர் உறுதியான தீர்வைப் பெற்றுத்தருகிறேன. அதுமட்டுமல்லாது, நீங்கள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன். நீங்கள் அவரிடம் செல்வதற்கு முன்னர் அறிவித்தால் நானும் உங்களுடன் வருகிறேன்.

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்களில் எட்டுப்பேர் உயிருடன் இருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எனக்குத் தெரிவித்துள்ளது. அதனை விசாரித்து உண்மை நிலையை உங்களுக்கு அறியத்தருகிறேன் என்று கட்டளைத் தளபதி தெரிவித்தார்.

இவ்வாறு சற்குணம் மேலும் தெரிவித்தார். (ம-5)


**பிரத்தியேக வகுப்புகள்**
**A/L**
**2004/2005/2006**
நாடகமும் அரங்கியலும் :
க.ஸ்ரீகந்தவேள்
புவியியல்: இக்னேசியஸ்
தமிழ்: M.S.அமரசிங்கம்
**கோயில் வாசல், கே.கே.எஸ்.வீதி, இணுவில்.**
காலம்-18.01.2004-பி.ப.1மணி.
(341X36)

**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 17/24.01.2004**
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை
யாழ் மாவட்டத்தில் கணனித்துறையில் நீங்கள் பெற்றிட
உங்களுக்காக நாங்கள் 250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில்
Diplomas
Dip. in Business Applications (MS Office)
Ms Word, Ms Excel, Ms Access, Ms Power Point, Internet & E. mail
Dip. in Desktop Publishing
Ms Word, Page Maker, Corel DRAW, Photo Shop
Dip. in Digital Science (Information Technology)
Ms Excel, Ms Access, Visual Basic, C++, Pascal, Internet & E. mail
கட்டணம் 1500/-
Dip. in English
By : S.Pathmanathan
Course Fee : 1500/-
Certificates
MS Word
MS Excel
MS Access
Pascal
Photo Shop
**IBMS**
Institute of Business Management Studies
Head Office : 250, Standly Road, Jaffna.
TP:-021-222-3165 Branches : Nellivady, Chavakachcheri.

**SUBRA** (14) சித்தன்கேணி
**புவியியல் A/L 2005**
**S.ஐங்கரன்** B.A .(HONS) Geo-Spl.

| பிரிவு I | பிரிவு II | பிரிவு III |
|---|---|---|
| Mon. Wen. 6 - 7 a.m. | Thu. Tue. 6 - 7 a.m. | Tue. Thu. 4 - 6 p.m. |
| அலகு மீண்டிடி ஆரம்பம்: 19.01.04 | அலகு சனத்தொகை ஆரம்பம்.20.01.04 | புள்ளிவிபரவியல் ஆரம்பம்: 20.01.04 |

துரித மீட்டலும் வினா - விடையும் சனி, ஞாயிறு மாலை 6-8 p.m. மின்ஒளியில்.
ஆரம்பம்.17.01.2004
தனிப்பாட அனுமதி வழங்கப்படும். (#-32761X36)







இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.